102165

# பெரிய எழுத்து
# ஆணைமயார் அம்மானை

O-87 NKU,A
N56
102165

உ

ஈஸ்வரியே துணை

# ஆமையார் அம்மானை

★

பல ஏடுப்பிரதிகளிலிருந்து சுத்தப் பிரதியாக
மா. குருசாமி அவர்களால்
எழுதப்பட்டது.

★

பதிப்புரிமை:

கலைமகள் கம்பெனி
புத்தக வியாபாரம் திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்] 1956 [விலை ரூ. 1

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— 1867-வது வருஷத்திய 25-வது ஆக்ட் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் "ஆமையார் அம்மானை" என்னும் இந்நூலை காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக்கு உடையவரான கலைமகள் கம்பெனியாரின் உத்திரவின்றி பிறர் இதை பதிப்பித்தலும், இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தலும் கூடாது. இதில் கண்டிருக்கிற விஷயங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி மீறி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு

கலைமகள் கம்பெனியார்

உ

கடவுள் துணை

# ஆமையார் அம்மானை

## அறுசீர் விருத்தம்

வண்மையா யிருவர் சொன்ன வார்த்தைமெய் யறிய ஈசன்
தண்மையாய் அதிதிக்கு நல்ல சலிப்பில் லாதுவையகமீந்து
ஆமையை அதிதிக் கீந்த அதிசயம் தன்னைக் கூற
தீமையை அகற்றும் வேத திசைமுகன் காப்ப தாமே.

நாகமா முனிவன் மைந்தன் நல்லபூ வாச நாதன்
பாவமே நீக்கி நல்ல பாக்கியம் பெற்ற தெல்லாம்
தாகமாய் அடியேன் நல்ல தமிழறி வோர்கள் கேட்க
மோகமாய் புவியோர் முன்பு மொழிகதுநான் கூறலுற்றேன்

கடவுள்துணை முன்னிற்க ஆமையாரம்மன்
நீடுழிக் காலமும வாழ்க! வாழ்கவே!!

## காதை

சீர்கொண்ட ஞானச் சிவனார் தன் புத்திரனே
பார் கொண்ட மால்மருகா பரமேஸ்வரி யீன்ற
ஐந்து கரத்தோனே அரனார் தன் புத்திரனே
வந்து தமித்தந் தருளும் மதகரி வேல்முகவா
வெள்ளிமலை குமராவேலாயுதப் பெருமாளே
வள்ளி மணவாளா மயிலேறும் சேவகனே
கந்தனே செந்தில்வளர் காங்கையனே வேல்முருகா
இந்தக்கதைக்கோர் இடறல் வாராமல்
அத்தரிடம் வாழும் ஆனந்த ஈஸ்வரியே
பத்திரமாகாளி யிந்தப் பாடலுக்கு வந்தருள்வாய்
தண்டா மரையாளே தாயே சரஸ்வதியே
வெண்டா மரையாளே வேறுவினை வாராமல்
தென் அருவு நன்றாய் சிறந்தோங்கியே சிறக்க
வந்துதித்த மானே வாழு நாயகமே
உன்பாதம் போற்றி உகந்துபணி வேண்டினேன்
பொன்மலர்க் கண்ணாளா புத்தி எனக்கே யருள்வாய்
மாதரிரு பேர்கள்மா நதியில் நீராடி
கோது குழல்மின்னார்கள் கொண்டாடித் திங்களிலே
சம்பந்தம் பேசியதும் சத்தியங்கள் செய்ததுவும்
உண்மந்திரமாக இவர்களுண்மை சொல்லி மெய்யதுவும்
ஆதிசிவனார் அறிந்தவர்கள் செய்தி நன்றால்
சோதி பரமேஸ்வரனார் சோதிக்க வேணுமென்று

மகளை மணமுடித்து தருவோம் நாம் என்றவர்க்கு
புகழாக ஈஸ்வரனார் பெண்மதலை யீந்ததுவும்
செய்ய இருபேரும் மணஞ்செய்வமென்ற மின்னார்க்கு
அந்தமில்லாத ஒரு ஆமை தனை யீந்ததுவும்
மதிசூடும் செஞ்சடையோன் வகுத்த விதிப்படியே
நதியாடு மங்கையர்கள் நானிலத்தோர் களறிய
பெற்றுவளர்த்து பிராயமது சென்ற பின்பு
சத்தனுட ஆணை கருத்தாக இட்டவள் தான்
சொன்னமொழி மாறித் தோகை அதிலொருத்தி
என்னத்தான் வந்தாலு மென்மகளை உன்மகனுக்கு
உற்றமணஞ் செய்து உடன்தருவதில்லையென்று
மற்றொருவனுக்கு மணஞ்செய்ய சம்மதித்ததுவும்
ஆமையார் செய்த அதிசயங்களானதெல்லாம்
வாண்மையாய் நல்ல வளமான நெடுங்கதையை
சொன்னப் பொருளை அடியேன் தொகுப்பாக உரைத்து
இன்னிலத்தி லம்மானையாகவே யிப்போது
பாடுதற்கு நல்லபலன் பாக்கியங்களுண்டாம்
நாடுதனில் மேலான நாஞ்சிவள நாட்டில்
தென்னாஞ்சி நல்ல சிவதாணு மாலருளால்
பொன்னாஞ்சி நாட்டில் புகழான சீமையிலே
வீரமுடிசூடி நல்ல மேதினியெங்கும் விளங்க
சேரபெருமாளரசு செலுத்துகின்ற சீமையிலே
மற்பயிலுந் திண்புயந்தான் வலங்கை உய்ய சொன்னவளால்
சொற்பயிலும் பூஞ்சோலை துய்யமணி மார்த்தாண்டன்
நற்பயிலும் சுப்பிரமண்ய நாகமணி மார்த்தாண்டன்
செப்ப ஒயிலாக சிறந்தோங்கியே வளர
அன்னமிசை கூடும் அகத்தீஸ் புரத்தில்
கன்னலனைய மொழியாள் காளிவரப் புத்திரர்க்கு
வர்ணக குருவாக மந்திரம் போதித்தவள்ளல்
பொன்னம்பல நாதர் பொற்பாதம் என் தலைமேல்
தவனமில்லாமலெனக்கு சற்குருவாய் வந்துதித்த
சிவனடியார் பாதஞ் சென்னியில் கொண்டேனே
பொருளாயெழுத் தோதி புத்திவிநயம் தந்தவள்ளல்
இருளண்ணுவ்பாத மெப்போதும் என் தலைமேல்
அணைஞ்சப்பெருமாள் புலவர் அண்ணாவி யெந்தனுக்கு
குருநாதன் பாதம் கொண்டேனா னென் தலைமேல்
உருவாகப்பெற்று உலகிலெனை வளர்த்தது
அன்னைபிதா வானவர்கள் அடியிணையை யான்மறவேன்
பொன்னம்பல நாதர் பொற்பாதம் நான் மறவேன்
மாதூற்ற செந்தாமரைபோல் வளமுற்றோன்
தாதூற்றமால் புயத்தான் பெருமாளாண்ட செல்வன்
காறுமலர் சூழுலகில் தமிழோர் தங்கள் முன்னே



ஆறுமுகம் நல்ல தமிழ் அம்மானை கூறலுற்றேன்
ஆமையார் தன் கதையை அம்புவியோர் தான்கேட்க
வண்மையாய் நல்ல வளமாய் உரைப்பதெல்லாம்
நன்னூலறிந்துசொல்லும் நற்றமிழோர் தங்கள்முன்னே
பன்னூலாகநானும் பாடத்துணிவதெல்லாம்
வண்ணமயிலாட வான்கோழியுஞ் சரியாய்
உன்னி சிறகைவிரித்து உடனாடுந் தன்மைபோல்
சமுத்திரத்தில் ஓடிவரும் சம்பானுக்குச்சரியாய்
கயிற்றுமரம் பாவெடுத்தால் கப்பலுக்கு ஒப்பாமோ
வகுத்த பிரமன் வாகுகண்டு மண்ணுலகில்
பகுத்தவொரு சகுனப்படைக்கு உருவும்சரியோ
அப்படியேதான் அடியேன் உரைத்த புன்சொல்
எப்படியும் செந்தமிழோர் இக்கதையைத் தள்ளாமல்
பண்பான செந்தமிழோர் பகரும் பெரியோர்கள் முன்னே
அன்பான நல்ல மலைமகள்தன் சொன்னசொல்லை
பிள்ளைபிழை செய்தால் பெற்றெடுத்த அன்னைபிதா
தள்ளாமலிப்படியே தமிழோர் பொறுத்தருள்வீர்
மெய்யாக நீண்டபுகழ் வளர நீனிலத்திலிக்கதையை
ஆண்டு தொள்ளாயிரத்தி யெண்பத்தொன்றும் வருஷம்
திருச்சபையாக எங்குந் திருவிளக்கு நின்றிலங்க
விருச்சகம் என்ற மாதமதில்மிக்க ஒன்பதாம் தெய்தியிலே
நன்றாகவே சோம வாரம் நட்சேத்திரம்பதத்தில்
குன்றாத பூசமதில் குறையாத அமிர்தப்பக்கம்
பக்கல் நன்மையுள்ள பஞ்சமி யென்னும் நாளில்
மிக்க புகழான வள்ளல் மேதினியெங்கும் விளங்க
கூடுஞ்சன்மத்திலே கொளுந்துப்புகழான வள்ளல்
நீடு புகழாக இதை நீனிலத்தோர் கொண்டாட
ஈடாக ஞானத் திறையோன் திருவருளை
ஏடாக இக்கதையை எழுதி வைத்தாரம்மானை
விந்தைப் பெற இக்கதையை மேதினியிலே பொருளாய
சொன்னபேர் படித்தபேர், சொல்லக்கேள் அம்மானை
மன்னுபுகழ் சக்கரவர்த்தி மாபுகனில் வந்துதித்தோன்
தேனார் வலங்கை திரிசூலி தன்னருளால்
ஏகாதி பதியிலங்கை ஏறு பரிவுடையோன்
ஞானியாம் நல்ல அந்த ராம நாதபுரத்தில்
அந்நகரில் வந்துதித்தோன் அமிர்த குணவாசகத்தான்
சிங்காரமான சிவன் திரு நாமந்தரித்தோன்
சங்கர நாராயணர் தன் தவத்தினால் வந்தமைந்தன்
முன் காத்த லக்ஷிமியாள் முகவசிகரத்தில் சிறந்த
பொன் கரத்தான் சொன்ன கதை பொருளிதுகாணம்மானை
அக்கதை கேட்டு ஆறுமுகம் அம்மானை பாடுகிறேன்
முக்கதையிலுள்ள முறைமை கேளம்மானை

நல்லுலகிலே வாழும் நானிலத்தோர் தங்கள் முன்னே
சொல்லுகிறேன் கேளுமினி தொகுப்பாக இக்கதையை
ஆமை தவம் பெற்ற கதை அன்பாகக் கேட்டவர்கள்
பாவத்துயர் நீங்கியவர் பாக்கியம் பெற்று வாழ்வார்
வாழ்வு பெறு சோழனுட மண்டலமாம் தேசமதில
தாழ்வில்லா வாழ்வுஞ் சந்ததியுஞ் பாக்கியமும்
வாழ்வு மிகுந்து வளர்ந்தோங்கியே சிறப்பாய்
ஏறு புகழ சோழன் ஈஸ்வரர் பாதம் பணிந்து
ஆறிலொறு கூறு அசையாமலே நிறுத்தி
தான தவம் வே த் தவத்தால் பெரியவரை
ஞானக்கலை கற்றவரை நன்றாக ஆதரித்து
சரித்திர வேத தவமறையோர் தங்கள் முன்னே
ஏத்திப் பலகாலம் ஈஸ்வரர்க்குப் பல பூசை செய்ய
அந்தணர்கள் வேள்வி நல்ல ஆகமமுறையாய் வளர்த்து
சிந்தையாச் சொன்ன சிவ பூசை தானடத்தி
குருபூசை குன்றாமல் குல மா புதப்பாமல்
ஒருவர்க்கொருவர் பயந்தூழியங்கள் செய்யாமல்
கட்டுக்குலையாமல் கற்பு நெறி குன்றாமல்
இட்டுண்பார்தான் வாழ்க ஏற்றுண்பார் காணாது
மடியில் பொருள் போட்டுவழி நடந்து போனாலும்
கடிதாக வேறொருவர் கள்ளர் கொள்ளை செய்வதில்லை
பெரியோர் தனை வலியோர் ஈடுவலுச் செய்வதில்லை
கூட்டிலந்து கேட்பதல்லால் கொடுமைச் செய்யக்கூடாது
இருக்குங் குடிதனிலே யிறை சுமந்துப் போனாலும்
மதிப்பென் றொருவர் தம்மை வந்திசெய்யப்போக்காது
குலங்கள் பேரான குடியான பேர்களுக்கு
விலங்கும் ஆகாதெனவே வேதனைகள் செய்யார்கள்
பாப்பார்கள் ஈஸ்பார்க்கு பணிமாலை சாத்துதற்கு
பூப்பறிப்பிதல்லாமல் பொருள் பறிப்பார் யாருமில்லை
கட்டிப்பயிரடித்து கரும்பு நடுவாரொழிய
கெட்டியடித்து வலுகிட்டியிடுவார்களில்லை
மாசி என்ற மாசமதில் யாவில் வடுவே ஒழிய
தேசமதில் வேறு வடு செய்யவுமே போகாது
ஊர்ப்புரவில் கெட்ட உடல் மரிப்பதல்லாமல்
பாரில் தமிழ்க்கல்விகள் பாடுவதே அல்லாமல்
பொன்னுரையும் நன்னூல் பொருளுரையுமல்லாமல்
தன்னை அடித்தொருவர் தவறுரைக்கப்போகாது
தேடு தமிழ் சொன்ன திசைதனிலே போரவரை
யாரடா என்றொருவர் ஆராய போகாது
திறைவிலைச்சலாய் விளையும் நெற்கதிர்கள் கட்டாக
குறையிறுத்துக் கெட்டவர்களில்லை இந்த சீமையிலே
துள்ளும் பரியேறும் துரைமக்களல்லாது



கள்ளரெனவே ஒருவர் கழுவேறப் போகாது
வாழைக் கமுகு குலை வாங்குவதேயல்லாது
ஆளுக்களாக அருங்கொலைகள் செய்வாருமில்லை
சேற்றுக்கால் சோழனுட சீமையதுதனிலே
நாத்து முடியும் நல்ல ராசாக்கள் பொன்முடியும்
கோழான் முடியொழிய கொடு முடிகள் காணாது
வலுவேடனுக்கொதுங்கி வந்த புறாவுக்காக
ஒதுக்காமல்தன் சதையை உடனே மிக அரிந்து
வேடன் பசியாமல் மேனி அரிந்துக் கொடுத்து
நாடுதனை ஆண்டு நாதனருள் பேறு பெற்று
அப்படியே சோழன் அரசாளும் சீமையிலே
கற்புடைய சோழன் கருத்தினிலே உலகில்
வையஞ் செழிக்க வளர் பயிருந்தான் தழைக்க
பொய்யாமல் மாரி பொழிந்தோங்கியே தினமும்
தேனாறும் பொங்கி செழித்து வழிந்தோடும்
மானார் நதியாட வாடை மணங்கள் வீசும்
கன்னல் வளர்ந்தோங்குங் கதலிக்குலை சரியும்
வர்ணமரங்கள் பலவும் வரிசையாய் பூத்திருக்கும்
ஆவினங்கள் பால் தூவி அடையாகத்தான் திரளும்
காவினங்கள் தோறும் கனிகள் பழுத்திருக்கும்
மாடப்புறாபாடும் மந்திணங் கூத்தாடும்
பேடை அன்னங்கள் நடக்கும் புள்ளிமான் துள்ளிவிழும்
தனுக்கோடி தேடி தருவாய்க் கொடிகள் பின்னி
மனுக்கோடிப் பேர்கள் வளமாக வாழ்ந்திருப்பார்
வளமாய்ச் சிவகதையை மகிழ்ந்திருந்து கேட்பாரும்
அருள் தங்குஞ் சோழன் அருளான சீமையிலே
திருச் செந்தில் வேலர் திருப்பதிப் போலே விளங்க
மாதமும் மாரிவளமாகவே பொழிந்து
போதவே வாழ்வு பொழிந்தோங்கியே யிருந்தார்
சோழ வள நாட்டின் இயல்புச் சொல்லத் தொலையாது
வாழுமணி சோழன் மகுட முடிசூடி
மெய்ப்புடைய ஈசனருள் மெய்கொண்டுலகுதனில்
அப்படியே சோழன் அரசாண்டிருக்கையிலே
உம்மந்திரச் சோழன் உடனுளுஞ் சீமையிலே
சம்பந்தமான புரத்தானுமொரு பட்டணத்தில்
யடந்தையிருபேர்கள் மங்கையர்கள் தன்னாலே
நடந்த புதுமையெல்லாம் நாட்டிலுள்ளோர் கேளும்
சங்கையுடனே அந்த சம்பந்த மாநகரில்
காராளரான கரையாளர் தானிரு பேர்
தாராளமாக இவர் தானிருக்கும் நாளையிலே
சுந்தர மூர்த்தியென்ற தூயகரையாளருக்கு
மந்திரஞ்சேர் பூந்தனத்தாள்மங்கை அபிராமிதன்னை

மாலையது சூடி மணம் மானது முடித்து
வேலையது செட்டி வெகுகோடாக வளைந்து
பூலோக சுவாமிதன்னை புகழ்ந்து மனதிலெண்ணி
சாலோக சுவாமி சரணந்துணையெனவே
வாரணம் போல் ஒத்த மன்னனான சூரனுக்கு
காரணமாய் நல்லகலியாணமும் முடித்து
மன்னவர்கள் தங்களிலே மைத்துனனும் மைத்துனரும்
நன்னயம் சேர் மின்னார்கள் நங்கையரும் மங்கையரும்
மாலையிட்ட மன்னவரும் மாதரிருபேரும்
கோலமிட்ட மின்னார் கொலுவாகவே யிருந்தார்
பேரளவு நல்ல பெறுவாழ்வும் பாக்கியமும்
சீர்பெறவே செல்வஞ் செலுத்துகின்ற நாளையிலே
ஒருத்திக் கொருத்தி உடன்பிரியாத் தோழமையாய்
கருதி உறவாடி கைவிட்டு நீங்காமல்
இருக்கு மன்னாளில் இருபேரும் ஒன்றாக
இருக்கும் குழல் மடவார் மாதவிடை ஆனார்கள்
பேதகமாயிவர்கள் பிரமன் விதிப்படியே
சூதகமாய் மெழுகி தோசத்தில் நீராடி
வேதன் விதித்த விதிப் பொருட்டினாலிவர்கள்
கேதாவரியாற்றில் கிள்ளை மொழி மின்னார்கள்
மூங்கிக்குளித்து மெழுகி மறுமாதந்துடுத்து
நங்கையரும் மங்கையரும் களினமுற்று தங்களிலே
கெங்கைதனில் நின்று கிளிமொழியாள் தான் ஒருத்தி
மூந்த ஒருவார்த்தை மொழிந்தனர் காணம்மானை
இந்த மொழுக்கால் நாம் இருபேரும் கர்ப்பமுற்று
உனக்கு ஒரு ஆண் மதலையுடன் பிறந்ததுண்டானால்
எனக்கு ஒரு பெண் மதலை யீசர் வகுப்பாரானால்
நன்மையாய்ச் சொல்லுகிறேன் நங்கையரே உண்ணாணை
உன் மகனுக்கென் மகளை உற்ற மணஞ் செய்வதென்று
மணமுடித்து நான் தருவேனென் வாக்கு ஒரு நாளும் மாறாது
பணம்பொருளில்லாமலுந்தன் பாலகனார் தந்தனக்கு
யேது குறையானாலும் இசுபானார் தம்மானை
மாதே நான் இன்றுரைத்தவர்க்கு ஒருநாளும்மறவேன்
குரும்பஞ் சேருங்குழலாள் கோதையர் பூவாதுடையாள்
மங்கை அபிராமியர்க்கு வலக்கை மிக்க கொடுத்தாள்
இருபேருங் கெங்கைதொட்டு ஈஸ்பரர்மேலாணையிட்டு
திருவையர்கள் சத்தியமுஞ் செய்தனர் காணம்மானை
சத்தியமுஞ் செய்தவர்கள் சம்பந்தமும் பேசி
மத்திசமா யிவர்கள்வா விதனைவிட்டேகி
சந்தோசமாயிவர்கள் சலிப்பில்லா தேயிருந்தார்கள்
அன்னம்அருந்தி அடக்காயும் வெற்றிலையும்
மின்னாரிரு பேரும் வேண்டியதெல்லாம் பேசி



பரிபூரணமாக பாவித்திருக்கையிலே
விதிவசத்தை யாராலும் வெல்லமுடியாது
கோலமிட்டமின்னார் குணமாயிருபேரும்
மாலையிட்டதங்கள் மணவாளர் தன்னோடே
மாத்துமிருந்ததுவும் மாதவிடை ஆனதும்
ஏத்தகோவரியில் இருபேருந் தங்களிலே
சத்தியங்கள் செய்ததுவும் சம்பந்தம் பேசியதுவும்
புத்தியுடன் தங்கள் புருஷன்மார் தன்னுடனே
நதியாடப் போனபின்பு நடந்த புதுமையெல்லாம்
பதியில் அரசனுக்கு பாங்குபெறவே யுரைத்தார்
உரைத்தமொழி யானதையும் உற்றமன்னவர்கேட்டு
சிரித்து மனமகிழ்ந்து சிவன் செயலென்றே அவர்கள்
எம்மான் திருவருளா லியலுமே யல்லாது
நம்மாலே ஆவதுண்டோ நாயகமே யென்றுரைத்து
எப்படியோ பிரமன் எழுதியது ஆனதெல்லாம்
அப்படியே யாகிலும் அதறிநா குமென்றார் அம்மானை
நட்புடைய மன்னவரும் நல்ல புகழ்தேவியரும்
செப்பியவர் தங்களிலே செய்தி யெல்லாந்தானறிந்து
உம்மந்திரமாக உற்பனமென்றே அவர்கள்
சம்பந்தமாநகரில் தானிருந்தாரம்மானை
இருந்த போதிவர்கள் உண்மையை ஈஸ்பரர் அறியவென்று
திருந்திய உமையாளோடு திரிசங்கு சாம்பவனார்
பொருந்திய பிரம்மன தன்னை பிஞ்ஞகன் வருத்திநன்றாய்
வருந்திய மாதருக்கு மதலைகள் படையுமென்றார்

## ஸ்ரீ ஆமையார் பிறப்பு

ஆதிபிரமனடிபணிந்து ஈஸ்பரரை
ஏதுவகையால் மகவை யிவர்க்குப் படைக்கவென்றார்
நான்முகனே கேளுமினி நான் சொலவும் வார்த்தை ஒன்று
மாமோகமாக ஒரு மைந்தனார் முன்னாளில்
நாகமுனிவன் நமக்கு நன்றாயர்ச்சனைகள் செய்ய
வாகை மலரெடுத்து வைத்தான் நமக்காக
ஏத்தி நமஸ்கரித்து இறைஞ்சிநம்மையே பணிந்து
சாந்தி கழிக்கு முன்னே தனனுடைய புத்திரனும்
பூமலரின் வாசம் பொறுத்திருக்க மாட்டாமல்
மோகமாய் புத்திரனு முகர்ந்து மணமுகர்ந்து சொன்னால்
நான் முகர்ந்து நான் களித்து நன்றாகக் கொடுக்குமுன்னே
தான் முகர்ந்து நந்தமக்கு சாந்தி நினைத்தவனை
அபிராயவல்லி கனககாமை உருவாயவனை
பூவாதுடையாளுக்கு பூமலரைப் பெண்ணாக
இப்படியே பிள்ளையிவர்களிரு பேர்களுக்கும்
அப்படியே கருவில் அய்யனே படையுமென்றார்

கருவில் படையுமென்று கடவுள்தான் சொன்ன பின்பு
அருகில் நின்ற புத்திரனும் அமர்ந்து மனந்தத்தளித்து
நாகமுனிவன் புதல்வன் நமினார் திருத்தாளில்
பக்தியாய்ச் சேர்ந்து பாதத்தைப் பூண்டு கொண்டு
குந்தி மனம்பதறி கூறும் வார்த்தையொன்று
கைலாச மீதிருக்கும் கலங்காக் கன்னமுதே
வரும்பாக் கடலில் மகரமாய் நின்றவனே
திரும்ப வருத்தியெந்தன் சீர்பாதம் சேர்க்கலையோ
ஆமைக்கூடென்று அறிவுரைத்தாய் நம்முடனே
வாண்மையாக உனக்கு மந்திரமாய்ச் சொல்லுகிறேன்
ஆகிடும்பருந்தேவர் அமிர்தம் கடைவதற்காய்
தாருதிருமாலாமை தானாய்க் கிடந்திலையோ
கெங்கைதனில் ஆமைதனை நீசகனென் பாருலகோர்
அங்கே கடலில் சயனம் செய்த கேசவனும்
நான்முகன் வாழுகின்ற நல்ல கயிலாசமதில்
தான்முகந்து பாதந் தரிக்கலையோ ஆமையதாய்
இந்தபிறவிதான் பிறந்து இநதுயர் நீ அறுத்தால்
சிந்தையுட னும்முடைய சீர்பாதம் சேர்ப்பமென்றார்
நாதனாரிந்தவளம் நன்றாய் உரைத்தபின்பு
தேசிகனார் சொன்ன திருவாக்குத் தட்டாமல்
ஓம்என்றுபாலகனும் உள்ளம்மிகமகிழ்ந்து
ஆமென்றுபாலன் அதுக்கிசைந்தானம்மானை
போனான் நாகமுனியின் பொன்னான புத்திரனும்
தன்னை அறிய தரிப்பிக்கவேணுமென்று
நாடுதனில்பட்டியென்ற நல்லமந்திரியவனும்
கூடுவிட்டுப்பாய்ந்துமறு கூட்டில்விளையாடுதற்கு
இலகுபிரகாசமதாய் இந்திரமாஜாலமெல்லாம்
வடிவுபலமானதும் மாயவடிவுங்கொடுத்து
கொடுத்துச்சிவனாருங் கூறுவார்வார்த்தையொன்று
மறுத்துச்சடையாதே வடிவேவர்தம்மானை
இந்தப்பிறவிபிறந்து வெந்துயர்நீ அறுத்தால்
சிந்தையுடனெந்தன் சிவபதத்தில்சேர்ப்பமென்றார்
சொன்னார்பிரமனுடன் சொன்னமொழியைக்கேட்டு
அன்னார் பிரம்மன் அபிராமவல்லியர்க்கு
ஆவலுடன் ஆமையதாய் ஆமைதலையும்வகுத்து
பூவாதுடையாகுப் பூமலரைப்பெண்ணாக
இருபேருங்கர்ப்பமுற்று ஈஸ்பரனார் தன்னருளால்
உருவருகவேயிவர்க் குகந்துவளர்ந்தகெர்ப்பம்
கொஞ்சும்மொழியனைய கோதையிருபேர்தனக்கும்
அஞ்சோடஞ்சையும் ஆனதிங்கள்ஒன்பதையும்
பத்தாந்திகைந்தவர்கள் பாலகனைப்பெற்றெடுத்தார்
கொத்திலங்குமின்னார் குரவையிட்டாரம்மானை



பூவாதுடையாள்தான் பெண்மதலையீன்றதுவும்
அபிராமவல்லிஒரு ஆமைஉருவீன்றதுவும்
சேரும்புவியிலுள்ளோர் செய்திதனைக்கேட்டவர்கள்
ஆரும்பலபே ரதிசயமாமென்றுசொல்லி
காசினியோரெல்லாம் கலியுகமாய்ப்பார்க்க
தாயுடனேபெற்ற தகப்பன் மனம்சலிக்க
எல்லாம்நமக்கு இறையோன் விதியெனவே
பொல்லாதபிள்ளையென்றால் போடுவதோநாமினி
என்றுசொல்லி ஆமைதனை யிவர்கள் அங்கேவளர்த்தார்
பாசமுடன்பாலூட்டி பரிமளமாய்நீராடி
மாயஉருஆமை வளர்ந்துவரும்நாளையிலே
கன்னியர்பூவாதுடையாள் கருத்தாயீன்றமகளை
பன்னிரண்டுநல்ல பருவவயதானதிலே
புகழாகவேமகிழ்ந்து பூவாதுடையாளும்
மகளை அலங்கரித்து வர்ணப்பணிபூட்டி
பட்டினிடையதிலே பணியாபரணமிட்டு
கட்டுவம்பீலிதண்டை காலணிகளணிந்து
இந்துநுதல்மின்னார் இருவிழிக்குமையெழுதி
சாந்துசவ்வாது சந்தனமும்கானபூசி
வையகத்திலில்லாத வடிவுபிரகாசமதாய்
தையல்நல்லாள்தெய்வரம்பை தனக்கொப்பாகவேதான்
வண்மையாய்பெண்ணும் வளர்ந்துவரும்நாளையிலே
ஆமையார்தம்மை அபிராமவல்லியவள்
கூட்டியெடுத்து கனமடியில்வைத்தாலும்
தட்டிவிழுந்து தரைதனிலேதானூர்ந்து
வட்டத்திருவைப்போல் வளையவளையதிரிவான்
புழக்கடைகள்தோறும் புறதலைவாசல்தோறும்
அழுக்கடையும்குப்பைகுழியும் புழக்கடையும்
திரிவான்தெருவில் திசையறியாபேர்களைப்போல்
பதிவாய்மனையில் பதிந்தொருநாளுமிருந்தறியான்
வாசம்புகழுடைய மங்கைஅபிராமவல்லி
ஆசையுடன்எடுத்து அன்புமொழிகேட்டாலும்
வாய்திறந்துபேசான் மதியறியாப்பேர்களைப்போல்
வல்லாண்மையீஸ்பரனார் வரமிவர்க்கீந்தாலும்
எல்லாம்அறிவான் இச்சூட்சங்கள்முதலாய்
அறிந்தும் அறியாதவன்போல் ஆந்தைகள்போல்விழிப்பான்
சீதநறுங்குழலாள் செல்விஅபிராமவல்லி
ஏதுவிதியோநமக்கு இவன்பிறந்தானென்றுசொல்லி
தாபமுடனீன்றெடுத்த தையல்அபிராமவல்லி
ஆவியெடுத்தத்தாயார் அன்பாகமுத்தமிட்டால்
குப்பைக்குழிதோறும் கோழிகிண்டிமேய்வதுபோல்
பப்புச்செடியும் பலவிடமுந்தான்திரிவான்

பாலைக்கொடுத்தால் பதமாய்புசிக்கறியான்
உடுக்கசீலைக்கொடுத்தால் ஊமைகள்போல்திரிவான்
சீலைஉடுக்கறியான் திரிபோல்கிழித்தெறிவான்
அப்படியேஆமை அவன்வளரும்நாளையிலே
கற்புடையமாதுமின்னாள் கருத்தாய்அபிராமவல்லி
யேதுபோலாச்சுதையோ இறையோன்விதியெனவே
மாதுமனங்கலங்கி மகனுடனேசஞ்சலித்து
தானும்மணவாளனுமாய் தனித்திருக்கும்வேளையிலே
மானனையாளோடே மறுவார்த்தைச்சொல்வான்
அன்னமேநம்முடைய ஆமைமகனார்தனக்கு
முன்னமேநாமிடையே மொழிந்தமொழிமாறாமல்
அண்ணருடதேவிவசம் அன்பாகச்சொல்லுமென்றான்
மன்னர்மொழிகேட்டு மங்கைஅபிராமவல்லி
அந்நேரம்சென்றனர்காண் ஆமையர்க்குப்பெண்கேட்க
வந்தவளும் பூவாதுடையாள்மனைதனிலே
சிந்தையுடனே சிறப்பாகவந்திருந்து
இருந்தாள்அபிராமவல்லி யேற்றபூவாதுடையாள்
வருந்திமனம் அழன்று வாருமென்றுகேளாமல்
குறிப்பானமாதுநல்லாள் கோதையர்பூவாதுடையாள்
அறியாதபேர்களைப்போல் அப்பாலேயிருந்துகொண்டாள்
இருந்தபொழுதிலந்த ஏந்திழையாளைநோக்கி
திருந்த அபிராமியவள் செப்புவாள்வார்த்தையொன்று
நன்றுநன்றுநம்முடைய நங்கையரேயிப்போது
ஒன்றும்குறைகளில்லை உபசரித்ததும்போதும்
கங்கையரேமுன்னாளில் நம்முடையஉண்மையினால்
செங்கைதனில்நின்றுசொன்ன கீர்த்தியுள்ளவார்த்தையெல் [லாம்
ஆறுதனில்நாமளித்த ஆணையதுதப்பாமல்
மீளாமலுந்தனுடை மிக்கமகளார்தன்னை
எந்தன்மகனார்தனக்கு ஏற்றமணஞ்செய்வதற்கு
வந்தேன்நான் உன்னிடத்தில் மச்சினியேயென்றுரைத்தாள்
உரைத்தமொழிகேட்டவளுடனேயெழுந்திருந்து
வரைத்தடத்தில்வாழும் வரிவேங்கைபோல்சீறி
சீறியெழுந்தவளும் தீப்போல்விழிசிவந்து
மீறியவளவண்டுருக்கி வெடுவெடெனப்பல்கடித்தாள்
என்னசொல்லபோறாயினி இவளெங்கிருந்து இங்குவந்தாள்
சன்னமொழிசொன்னால் சகிக்கறியேன் கண்டாயோ
நாத்தியெனக்காரு பெண்ணே நங்கையுனக்கிங்காரு
ஆற்றிலேசொன்னதெல்லாம் ஆற்றோடேபோச்சுதடி
ஆமைக்குப்பெண்டிருந்து ஆமைபிள்ளைபெற்றவளே
பாவக்கறையேற்றிப் பகர்ந்தாயேவார்த்தைதனை
பெண்தருவேன்என்றதற்கு பேருலகிலுள்ளவர்கள் [டோ
கண்டதுண்டோகேட்டதுண்டோ கைக்குள்ஒருசாட்சியுண்



உன்தெருவில்நான் ஒருநாளும்வாரதில்லை
என்தெருவில்வாராதே யில்லையடிப்பெண்ணுனக்கு
எல்லாந்தான்பொய்யோ இலுப்பையிலேயேறுகைபோல்
வல்லாண்மைக்காரி வழக்கிட்டுவந்தாய்நீ
முன்னேயிருந்தமுறைமை தனைவிட்டுவிடு
சன்னம்பறையாதே நாத்தியில்லைபெண்ணுனக்கு
நாளையினிமேலும் நாத்திநங்கையென்றுசொல்லி
வளைவுமனைதனிலே வந்தாயே ஆமாகில்
எல்லோருங்காணஉன்னை ஆக்கினைகளைசெய்துவைப்பேன்
பொல்லாதவளே நான் பெண்தருவதில்லையென்றாள்
என்றமொழிகேட்டு ஏங்கி அபிராமவல்லி
நன்றுநன்று நந்தமக்கு நாதனருளெனவே
மடந்தையருந்தன்மனையில் வந்து மணவாளருக்கு
நடந்த புதுமையெல்லாம் நன்றாகவே எடுத்துரைத்து
இருக்குமந்த நேரம் ஏந்திழையாள் பெற்றெடுத்த
மறுக்கும் குழலாளை மறுமாப்பிள்ளை தனக்கு
கேட்டுபரிசமிட்டுக் குறித்த முகூர்த்தமிட்டு
கொட்டுங் குரவையும் குக்களித்தங் கெல்லோரும்
நெற்பயிர் போலொத்த நேரிழையாளைக்கொள்வதற்கு
மாப்பிள்ளையை கொண்டு வந்து வைத்தார்கள் பந்தலுக்குள்
அச்செய்தி கேட்டு அசந்து அபிராமவல்லி
யிச்செய்தி கேட்க இறையோன் விதித்தானோ
நாமெல்லோரும் இந்தமணம் நன்மையுடன் காணுதற்கு
ஆவல்பெரிதாய் ஆசையுடனே இருந்தேன்
மகனார்க்கு இந்த மணம் முடித்துப் பாராமல்
எவனெவனோ வந்து மணம் இப்போ செய்கிறானெனவே
கஞ்ச முகம் வாடி காரிகையாளப்போது
சஞ்சலித்து மெத்த சடைத்தழுதாளம்மானை
அழுதவகைகளெல்லாம் ஆமை உருவானவனும்
பழுதறவே முன்னடந்த பண்பான சேதிதன்னை
நடந்த வளமையெல்லாம் நன்றாகவே கேட்டு
மடந்தையரைத்தேற்றி மலையாதே யென்று சொல்லி
பணிந்து தாயாருடைய பாதந்தனைத்தொழுது
தாமதமில்லை மணந்தான் முடிப்பேன் என்று சொல்லி
முன்னே நமக்கு மொழிந்திருந்ததுண்டானால்
இந்நேரம் வந்தொருவன் இயலுமோ மாலையிட
இறையோன் திருவருளால் என்னுடைய தாயாரே
முறைமாமனார் மகளை முடித்தெனக்குத்தாராமல்
மற்றொருவன் பந்தலுக்குள் மாலையிட வந்ததுவும்
சிற்றுருவமாகவும் நான் திறங்கெட்டிருப்பதுவும்
சந்தமுடன் பெண்ணை மணந்தான் முடிப்பேனென்று சொல் [லி
பந்தலுக்குள் வந்த பயல்திறமு மென திறமும்

அறியலாம் தாயாரே அரை நாழிகை தனிலே
இருமையுடன் என் செய்தி கேட்டிருங்கோ வென்று சொல்
நாதாவின் தன்னருளால் நாகமுனிவன் புதல்வன்
தாயார் தனை நோக்கி சாற்றுவான் ஒரு வார்த்தை
சிந்தையுடன் ஓர் வார்த்தை செப்பக்கேள் மாதாவே
அந்தமணிப பந்தலுக்குள் அவதானமாகவே நீ
கட்டிச் சுருட்டியுந்தன் கையதனை லெடுத்து
வட்டமணிப் பந்தலுக்குள் வைத்துவிட்டு வாருமென்றான்
அந்தமொழி கேட்டு அபிராம வல்லியவள்
சிந்தை மகிழ்ந்து சிரித்து நகைபுரிந்து
பாவி மகனே நீ பந்தலுக்குள் போயிருந்தால்
ஆமையென்று சொல்லி அடிப்பாரே யென்றுரைத்தாள்
மண்ணுலகிலிங்கே மனுவாக உள்ளவர்கள்
என்னையடிப்பதற்கு இங்கொருவர் இல்லையென்றான்
ஆமையார் சொல்ல அதிசயமாய்த் தான் கேட்டு
தாழ்மையாய் நல்லதொரு தையல் அபிராமவல்லி
யிட்டதலையெழுத்து எப்படியும் நடக்குங் காணெனவே
கட்டிச்சுருட்டி அவள் கையதனிலே யெடுத்து
ஏழைமகனே நமக்கு இறையோன் விதி யெனவே
பேழை போல் எடுத்தாள் பெற்றெடுத்த தாயாரும்
கண்டவர்கள் எல்லாம் கைதட்டியே சிரிக்க
கொண்டுவந்து வைத்தாளே கோலமணி பந்தலுக்குள்
பந்தலுக்குள் நின்றவர்கள் பார்ப்பார் அதிசயமாய்
கொந்து கொந்தாய் நின்றுகூடி அவரவரே
யிந்த கலியுகந்தான் எங்கே கண்டோமென்பாரும்
அய்யய்யோவென்று அனைவோரும் நிற்கையிலே
பைய்ய நகர்ந்தவனும் பந்தலுக்குள் போட்டிருந்த
வர்ணப்பலகையின்மேல் வந்திருந்து ஏது சொல்வான்
முன்னே யெனக்கு மொழிந்த பெண்ணை மணக்கவந்தேன்
முறைப்படிக்கு எந்தன் முறைமாமனார் மகளை
சிறைபிடிக்க வந்தவர்கள் சீயென்றால்தான் போவார்
வாயுரமாக நீங்கள் வலுவாகவே வளைந்து
ஆயிரம் பேர்வந்தாலும் ஆமையிதற்கு அஞ்சேன்காண்
அம்மானாரிங்கே அடைத்துக் கொண்டேயிருந்தால்
சும்மா அறிவாரோ சூழுலகிலுள்ளவர்கள்
வந்தபலபேரு மிந்த வையகத்தோரும் அறிய
பந்தலுக்குள் வந்து பகர்ந்துமொழி பேசாமல்
பேய் போல் நீர்விழித்தால் பெண்ணைவிடேன் கண்டீரோ
வாய்திறந்து நீங்கள் வழக்கானதை உரைக்க
அம்புவியை ஆளும் அரசன் மேலே ஆணை
செம்பியன் சோழன் முன்பு திருவாணை வாருமென்றான்
அந்தமொழி கூறியந்த ஆமையார் முன்னடக்க



எந்தன் விதியெனவே யேற்ற ரணசூரன்
போகத்தொடங்கியிரு பேரும் போகையிலே
வாகுபெற அங்கே வளைந்திருந்த பேர்களெல்லாம்
சேரத்திரண்டவர்கள் செப்புவார் வார்த்தைகளை
யாரென்றாலென்ன ஆசாரமே பெரிது
உச்சிதமாயிவர்கள் உண்மை சொல்லிக் கொண்டதெல்லாம்
முற்செய்தி நாமறிந்த முன் நடப்பைக் கேட்டதில்லை
ஒருவரால் இந்த வழக்கு ஒதுங்காது கண்டீரோ
இருபேருமாக இயற்சோழன் முன்பதிலே
போறவரை நாமள் பரியாசஞ் செய்யாது
வேறொருவர் நாமள்விலக்கினால் செல்லாது
வம்பிலே நீங்கள் வழித்தாயமாடாமல்
செம்பியன்சோழன் முன்பு சென்று கரையேறுமென்றார்
அந்த மொழிதன்னை அனைபேரும் செப்பியபின்
விந்தை பயிலுவேந்தன் திருமுன்பதிலே
மாமன் மருமகனும் மற்றும்உண்டானபேரும்
சீமானிருக்குஞ் செம்பியர்கோன் முன்பில்வந்தார்
வந்தரசன் தன்னை வணங்கியிருபேர்களுந்தான்
எம்தம்பிரானே எங்கள்சங்கடத்தைதீருமென்றார்
பணிந்துதொழுதவனும் பாரரசனைநோக்கி
அணிந்தங்கிருபேரும அறிவித்தவேளையிலே
செய்தியுடனேயிருக்குஞ் செம்பியனும் அப்போது
ஏதுபிள்ளாய்உங்க ளிடையூறைச்சொல்லுமென்றார்
அந்தமொழிகேட்டு அவர்களிருபேரில்
முந்தரணசூரனிவன் முன் வழக்கைத்தானுரைத்தான்
மாத்துபசுந்ததுவும் மாதவிடாயானதுவும்
ஆத்திலேமெழுகி அகமகிழ்ந்துதங்களிலே
ஒருத்திக்கொருத்தி உறுதியுடன்முன்னாளில்
கருதிஉறவாடி நனைபிரியமாய்மகிழ்ந்து
என்மனைவியாரிவனை யீன்றெடுத்ததாயோடே
நன்[illegible]யமாய்ச்சொன்னாள் [illegible]மை னொருவார்த்தை
தனக்குஒருஆண்மதலை சந்ததியைப்பெற்றெடுத்து
எனக்குஒருபெண்மதலை யீன்றெடுத்தேனானால்
நங்கையரேஉம்மானை நாத்தனார்சம்பானை
கெங்கையின்மேலாணைவைத்து கிருபையுடனேதான்
எந்தவகையாகிலும்நான் ஈன்றெடுத்த பெண்மகளை
உந்தன்மகனுக்கு உறுதியாய்மணஞ்செய்வே
னென்றுதான் முன்னாளி லிருபேருந் தங்களிலே
ன்றுகச்சொன்னமொழி நாமறிந்தகாரியந்தான்
தாழ்மையாய்ச்சொன்னமொழி தவறாமலேநடந்தால்
ஆமையார்தந்தனக்கு ஆமோமணம்செய்வார்கள்
என்றுஇவன்சொல்ல இயலரசன் அப்போது

நன்றுபிள்ளாய் ஆமையாரே யுன் நல்வழக்கைசொல்லுமெ
அம்மானார்தன்வழக்கும் அடியேனுடவழக்கும் [ன்
நல்லமனதாக நடுவாகவேயுரைத்தார்
கள்ளவழக்காக கபடுவுரைத்தாரில்லையவர்
உள்ளவழக்கெல்லாம் ஒழியாமலேஉரைத்தார்
அம்மானுரைத்த அதிகமொழியானதெல்லாம்
இம்மாத்திரங்காண் இவர்வழக்கும்என்வழக்கும்
என்றமொழிகேட்டிருந்தவர்களிற்சிலபேர்
நன்றெனவேகூறி நடுவாய்உரைபகர்ந்து
என்றுமேவார்த்தைவெகு உண்மைசொன்னாராலும்
ஆமைக்குப்பெண்ணுலகில் யார்கொடுப்பாரென்பாரும்
ஏலவேசொன்னமொழி யிப்போதுதப்பாமல்
மாலையிட்டால்பெண்ணதுதான் வாழாதென்பார்சிலபேர்
ஆனாலும்பெண்ணதுதான் ஆமையார்க்கென்பார்சிலபேர்
தன்னாலேதன்வழக்கை தான்கெடுத்தான்என்பாரும்
கல்விழுந்ததுண்டானால் கையதினாலேயெடுப்பார்
சொல்விழுந்ததானால் திரும்பஎடுப்பாரோஎன்பார்கள்
வன்பாகவேநாமவளை மாலையிடசொன்னாலும்
பெண்பாவம்வந்து பிழைசூழுமென்பாரும்
பெண்ணுக்குநல்ல [illegible]மணஞ்சூடுவது
இன்றுவந்தமாப்பிள்ளைக்கோ இவன்தனக்கோவென்பாரும்
மன்னுகந்தசோழன் அழகேசனென்பாரும்
ஆளுக்கொருமொழிகளை அவரவரேதான்பேசி
வானுலகிலுள்ளோர் வளைந்திருக்கும்வேளையிலே
செம்பியன்சோழராசன் திருவாக்குளதுசொல்வான்
முன்பில்வழக்குரைத்தானை மோசமொன்றில்லாமலவன்
பழுதில்லாமலுரைத்த பாக்கியவான் [illegible]களை
வழுவில்லா ஆமையார்க்கு மாலை [illegible]
சொல்லவும்போகாதினிமேல் [illegible]
அல்லவென்றே ஆமை [illegible]
அம்மான்சொல் உண்மையென்று ஆமையரும்கொண்டதினால்
எம்மானருளால் இ[illegible]
சோழவளநாட்டிலொரு சொல் [illegible] போகாது
ஏழையாயிவர்கள் [illegible]
ஆணையிட்டவார்த்தை அ[illegible]போகாது
நாயமாய்உங்களுக்கு நடுவாகச்சொல்லுகிறோம்
இன்றுவந்தமாப்பிள்ளையும் இவனாமையார்தனையும்
பண்ணுமணிப்பந்தலுக்குள் பாரிலுள்ளோர்தான்காண
இருபேரையும்இருத்தி யெல்லோருமானதற்கு
அரிவையர்கைதன்னிலொரு அழகுமாலைகொடுத்து
மாதுநல்லாள்கானறியும் மா[illegible] பேர்களுக்கு
சேதமில்லாமல் மணஞ்செய்துகொடுமென்றார்விடையாக



செம்பியனுரைத்த வார்த்தை சிறப்புடன் கேட்டெல்லோரும்
வம்பல்ல அரசர் சொன்ன வழக்கிது நடுவாமென்று
சம்புவினருளால் ஆமைதனக்கு செம்மனதுவைத்தார்

## கலியாணம்

வர்துமணி பந்தலுக்கு வாகுபெறவெல்லோரும்
கொந்தலவும் மன்னர் குவிந்திருக்கும் வேளையிலே
அந்நேரம் தன்னில் அரிவையர்கள் தான்கூடி
மின்னேரிடை மடவார் மெல்லியர்கள் தான் திரண்டு
பூவையுடையாளின்ற புரிகுழலைக் கூட்டி வந்து
காவணத்தின் கீழே கணபதியைத் தானிருத்தி
வையகத்தோர் காணஒரு மாலைஅவள் கைகொடுத்து
துய்யமணிப்பந்தலுக்குள் சுற்றி எறியுமென்று
வாரணம்போல் பெற்றெடுத்தமாதா பிதா கொடுக்க
பூரணவல்லி அந்த பூமாலையை வாங்கி
மூக்காலும் சுற்றி வந்து மூகலோன் தனைத்தொழுது
எக்காலமுந்தான் எனக்குடையவன் கழுத்தில்
மாலையனே யென்னுடைய மாலைவிழ வென்றெறிந்தாள்
சாலயமாய்ப் பெண்ணவளுந்தானெறிந்த மாலையது
வண்ணமுள்ள மாப்பிள்ளையும் மற்றுமுள்ள பேரிருக்க
ஆமையார் தன்கழுத்தில் அன்பாய் விழுந்ததுவே
மாலைவிழுந்த பின்பு வந்திருந்த பேர்களெல்லாம்
கோலம் அறிந்து இந்த கூத்தைப்பாரென்பாரும்
தேசத்தோரிங்கு வந்து சிலைகளைப் போலிருக்க
மாயத்தைப்பாருமய்யா இவன் மாலையிட்டானென்பாரும்
ஆமையல்லவே யிவனும் ஆண்மையுள்ள வீரனென்பார்
தாமு முன்னாள் சொன்ன சபதம்பலித்ததென்பார்
கூறுங்கழுத்தை நீட்டியிது கூட்டுக்குள்ளே கிடக்கும்
வெறுங் கழுத்தில மாலை விழுந்ததே என்பாரும்
வந்திருக்கும மாப்பிள்ளைக்கு மாலை மணஞ் சூட்டாமல்
அந்தமில் ஆமைக்குப் பெண் அகப்பட்டதென்பாரும்
அப்படியே சொல்லி அதிலே சிலபேர்கள்
மெய்யாய் உரைப்பதுவே விதிகாரன் என்பாரும்
ஆனபேருமாக வெகு ஆரவாரத்துடனே
மாப்பிள்ளை தன்னோடே முன்வந்திருந்த பேர்களெல்லாம்
வெகுத்தெழுந்து சில வீணர்கையில் அம்பெடுத்து
ஆமைதன்னை நாமள் அடிப்போமென்பாரும்
பாதகர்கள்பெண்ணை பறிப்போமென்பாரும்
போதமுள்ள பேர்களது புத்தியல்ல வென்பாரும்
வாயிலில் கருவாடு வாட்ட வந்த பேர்களுக்கு
தீயில்லையென்றால் திரும்புமதேயல்லாது
கூட்டி விழும்கடத்தி கோள்விளைத்து எல்லோரும்

பொட்டுக்குலையுமுன்னே போவோமென்றே போனார்
முன்னேவந்தமாப்பிள்ளையும் முட்டாங்குக் காரிகளும்
சம்பந்தமாயவர்கள் தான்கடந்துபோனபின்பு
நாகமுனிவன் புதல்வன் நல்லாமையார்தனக்கு
மாமன் மகள் தன்னை மணமுடித்தாரம்மானை
ஆமையார்மணமுடித்து அவனியுள்ளோர்கள்மெய்க்க
வாண்மையாய்மேளதாளச் சதுரங்கசேனையோடே
தீமையொன்றில்லாவண்ணம் சிவனுடஅருளினாலே
பூவையைகூட்டிவந்து புகழ்பெறமனையில்வந்தான்
வாழ்ந்தபுகழாமை மணமுடித்தப்பெண்ணோடே
சேர்ந்துமருவிச் சிறந்துவிளையாடாமல்
முன்னேஒருபூவை முகர்ந்தபிழையதனால்
மண்ணுலகில்வந்துமாய்கிறோம் என்றுசொல்லி
தன்னையறியப்பிறந்த தன்னறிவினாலேயவன்
இன்னுமிந்தப்பெண் பூவுக்கிச்சைகொள்ளாதெனவே
வாண்மையுள்ளஈஸ்பரனார் வாண்மையறியவென்று
ஆமைஉருவல்லாதான் ஆண்மைசெலுத்தாமல்
நற்புடைய பெண்ணிவளை நல்லசிவனறிய
கற்புடையாளாகவைத்து காக்கவுந்தான்வேணுமென்று
பெண்ணோடிருந்து பொருந்தியேவாழாமல்
மண்ணோடேதானவரும் வட்டஉலைமூடியைப்போல
தூங்கும்பஞ்சணை தன்னில் துவண்டுறக்கம்கொள்ளாமல்
பாழுஞ்செடிகள்தோறும் படபடெனவேதிரிவான்
கைபிடித்தப் பெண்ணை கருதி முகம்பாராமல்
பப்புடையகுப்பைக்குழி புழக்கடைகள்தோறும்
எங்கும்திரிவானிவளை முகம்பார்க்கறியான்
மங்கைமுகம்வாடி வாய்திறக்கமாட்டாமல்
வாண்மையுடன்நம்மை மறுமாப்பிள்ளைக்குச்செய்யாமல்
ஆமைக்குநம்மை அயன் விதித்தானென்றுசொல்லி
யெல்லாம்அவள்தன் னிருதயத்திலேயடக்கி
நல்லவண்ணமாக நடந்துவரும்வேளையிலே
சருகிவிளையாடான் சன்னசொல்சொல்லறியான்
மருவியவளோடே மதனகலைகள்செய்தறியான்
தொட்டுப்பிடித்தெடுத்து தூங்கும்பஞ்சணைதனிலே
வட்டமணிமெத்தைதனிலே வைத்தாலேதானாலும்
தரையில்விழுந்தவனும் தலைதனிலேதானூர்ந்து
பரிவாயிருக்கறியான் பதனமாய்ப்பேசறியான்
ஆமையும்பெண்ணும் அவர்கள்நடக்கும்விதத்தை
வாண்மையுள்ள அபிராமவல்லி அவள்தானறிந்து
ஏங்கிப்பெருமூச்செறிந் தழுதுஏங்கிசொல்வாள்
ஓங்கிலைப்போல்நல்ல உயர்கட லவாராமல்
சந்ததியைக் கெடுப்பதற்கோ சதியாக வந்தனையோ



எந்தனக்கென்றுமுன்னே யிறையோன் விதித்தானோ
ஊழ்விதியோஎனக்கு உன்னோடுமலர்பிடிக்க
கோழிதனைப்போலே குப்பைகிண்டியேபுரளும்
ஆமையால்நானும் அலமாந்துநின்றேனே
வாண்மையுள்ள பெண்ணுடைய மாபாவம்ஏற்றேனே
அம்மான் மகளெனவே ஆனைகொண்டு மாலையிட்டு
சும்மாயிராமலொரு தோசத்தையேற்றேனே
பண்பழிய வென்னைப்பலபேரும் பேசுதற்கு
பெண்பழியைக்கொண்டு பெரும்பாவம் ஏற்றேலே
அல்லல்பட்டுஉன்னாலே அழிந்துநான் வாடுறேனே
இல்லல்படுத்தாமலே நீசெத்திறந்தும் போகாயோ
எல்லாத்தையும் போலிருக்க இதம்இல்லாட்டா
பொல்லாதவானுனை போக்கிவிடமாட்டாயோ
பெற்றுவளர்த்துஉன்னை யென்பெருமைகுலைந்தேனே
யெத்தனைபேர்கள் இறந்தாருலகுதன்னில்
உற்றார்களெந்தன் உறவுமுறையோர் ஏசாமல்
செத்துவிடாயோ சமுத்திரத்தில்போய்விழுந்து
வேகித்துத்தாயார் வெடுவெடெனசொன்னதெல்லாம்
கோபித்துக்கொண்டந்த கூருமையேது சொல்வான்
நன்றுநன்றுநீஉரைத்தாய் நானுரைக்கவேகேளு
மண்டலத்தை ஆளுகின்ற வாழரசன் தன்மகளை
இவளுக்குத்துணையாக இன்னுமொருபெண்ணவளை
உனக்குமருமகளாய் உடன்முடித்துவந்தொழிய
வாரேன்இவளோடே மாதாவே என்றுரைத்தான்
பொல்லாதவனேயிந்த பிழைவார்த்தை நீயுரைத்தாய்
நல்லரசர்கேட்டாலுன் நாக்கைஅறுப்பாரேஎன்றாள்
அந்தமொழிகளையெல்லாம் அந்நகரை ஆளும்மன்னன்
வந்துநகர்சோதனைக்கு மற்றொருவர்காணாமல்
ஒன்றிப்பதுங்கி ஒளித்துநின்றுதான்கேட்டு
தொங்கியகதவில் சுண்ணம்புக்குறியுமிட்டு
அர்த்தராச்சாமம் அரசர்பதிதனிலேபோய்
நித்திரைகூடிவிழித்தார் நேரம்விடிந்ததுவாம்
விடிந்தபின்னெழுந்து நல்லவேந்தராம் அரசரோடே
கடிந்தவர்காவலனோடே காவலன்ஏதோ சொல்வான்
படிந்தென்னைச்சூழ்ந்துநிற்கும் பரிகலத்தோடே நீங்கள்
நடந்துசென்றாமையாரை நலமுடனேவருத்தும்என்றார்
என்றரசர்சொல்லஇருந்தோர் சிலரோடே
சென்றுவளைந்தாமையாரை சீக்கிரத்திலேகூட்டி
வந்தார்கள் அந்தவாளரசன்முன்பதிலே
கொந்தார்புகழரசன் கோமானை ஆமையரும்
வந்துதொழுதவனும் வாழ்பெரியமன்னவனை
யென்தம்பிரானே யெனை அழைத்ததேதெனவே

கேட்டபொழுதிலந்த கிருபையுடனே உலகில்
நாட்டை அரசாளும் நல்லரசனுக்குரைப்பான்
இந்நிலத்திலுள்ளோர்கள் எல்லோருந்தானறிய
உன்னையழைத்துன்னுடனே உண்மையென்றுகேட்பதற்கு
அழைத்ததே அல்லாமல் அட்டதுட்டம் வேறு இல்லை
பிழைத்துநடந்தேநடக்கு பிழைவேறுசெய்யவில்லை
யில்லையென்றாய் நீயும் இன்றுராச்சாமமதில்
சொல்லொன்று வாய்திறந்து சொன்னதுண்டோ யென்று
தேசம் அரசாளும் திசைபெரியமன்னவரே [ரைத்தார்
வாயிருந்தால் யாருமொரு வாக்குரைக்க மாட்டாரோ
உரையாதவார்த்தை உரைத்ததினாலே அழைத்தோம்
அரசாளுமக்களிலே யாரை மணம் செய்வோமென்றாய்
அந்தமொழி வேந்தர் அறிவித்த வேளையிலே
சிந்தைதனில் ஆமை சிறந்து நினைவாக உன்னி
உன்னி மனதிலது உள்ளதென்று தான்பயந்து
மன்னவனே நானுமிந்த வார்த்தை பரமார்த்தமதாய்
சொன்னதல்லாமலடியேன் சூதாய் உரைக்கவில்லை
பண்ணுதமிழ்க்காவலனே பரமார்த்தமாயடியேன்
உள்ளது தானிந்த ஒருவிசயம் சொன்னதென்றான்
உண்மையுடன்சொல்லி உலகாளும் வேந்தருடன்
மெய்சொல்ல வேணுமினி விதிவந்துசூழ்ந்தாலும்
பொய்சொல்லி எங்கே பிழைக்கலாமென்றுரைத்தான்
ஆமையார்சொல்ல அரசனும் அங்கேதுசொல்வார்
வாண்மையுள்ளான் காணுமிவன் வையகத்திலேபெரியோர்
தாமரைப்பொன்முத்து சாங்கோரோசனையாலே
பூமதுதான்பட்டு புனுகு சாவ்வாதானதுவும்
எங்கேபிறந்து இருந்தாலுந் தன்னுடைய
அங்கங்குறையாது அப்படிபோலே யிவனும்
பேதகமாயிந்த பிறவிவேறானதுதான்
ஏதோதெரியாது என்றுமனதிலடக்கி
வல்லபுகழானந்த மன்னவனு மேதுசொல்வான்
நல்லதுகாண் தம்பியரே நாமுரைக்க நீகேளு
சோர்வையதாய் நீஉரைத்த தூசணங்கள் நாம்பொறுத்தோம்
தீமையாய்உன்னை ஒருதீங்கு செய்யவும்வேண்டாம்
யாரென்றால்என்ன அயனெழுத்தே உண்டாகில்
வாராதோயோகம் வரிசைகளும்பாக்கியமும்
வீரகமுன்னாளில் வீரகுமார்என்றொருத்தன்
நூறுமையலாளை கொடிக்குள்ளேகொண்டிலையோ
பொற்கொடியாளானதொரு பெண்ணதைமுற்காலமதில்
செக்கடிமுண்டன் தனக்கு செய்துமணம்சேர்க்கலையோ
அப்படிப்போல் நீயும் ஒருஆண்பிள்ளை தானல்லவோகாண்
எப்படியும்சிங்கமதுக்கில்லை காண்பங்கமென்றார்



பொன்போலவேவளர்த்து பூட்டறைக்குள்ளிருக்கும்
கட்பாகவேவளர்த்த நல்மகளையுந்தனுக்கு
மாலையிட்டுநல்லமணமுடித்து நான்தருவேன்
வேலையிட்டுநல்ல மினுமினுத்த ன்பட்டணத்தில்
தானாகவாழுந்தடமான சீமையிலே
யீனகிரியென்று இருக்கும் ஒருமலைதன்னில்
நன்றாக அம்மலையில் நாட்டமுடனேயிருப்பார்
இன்று இருப்பார்கள் ஈனன் ஈனப்பேச்சி
பேச்சியுடன் ஈன பேயனுடசீமையிலே
தீச்சையுடனே இறந்து செத்தபிணங்கள்தன்னை
பிச்சிபிடுங்கிபிணங்கள் தனைப்பொசித்து
அச்சித்திருப்போரும் அம்மலையிலேயிருப்பார்
செவ்வையாய்கேளு இந்த சீமையின் செய்திதன்னை
அவ்வாறுசீமையிலே யாரொருவர்மாண்டாலும்
குட்டிகுழந்தைபெரியோர் கூண்டிறந்துபோனாலும்
கொட்டிமுழக்கி அவர் கூடிமிகவே அழுது
குளிப்பாட்டித்தங்கள் குலமுறையெல்லாம்முடித்து
இகழ்ப்பாகவே ஆடையெடுத்து இடுகாட்டில்வந்தால்
பேச்சியுடன்பேயன்வந்து பிணந்தின்றுபோமளவும்
உச்சிப்பரணைபோட்டு உயர்பாடைமேல்வைத்து
ஓரிரவுமட்டும் உடனே அடக்காமல்
பதிவாகத்தங்கள் பதிதனிலேபோய்விடுவார்
எல்லோரும்போன இருகூருசாமமதில்
வல்லபிழைசங்கிலியும் வலுசாவுசங்கிலியும்
கையதிலேகொண்டவர்கள் கருங்கழுகுபோல்பறந்து
மையிருளில்பாடையிலே வைத்தபிணத்தில்விழுவார்
விழுந்தாலவர்கள்செய்யும் வீரா அதைக்கேளு
இறந்தஉயிர்வருத்தி யேற்றமுடிமன்னவர்கள்
பேயனுடகையதினால் பிழைசங்கிலியைவைத்தால்
ஓசையுடனேயங்கு உயிர்தான்பிழைத்கிளகும்
முழித்தவர்கள்தன்னுடனே முன்னடந்தசெய்தியெல்லாம்
நவித்திங்கிருபேரும் நன்மையுடனேகேட்டால்
நன்மையுடனேபிறந்தால் நற்சடலமென்றேபொசிப்பார்
தீமைமொழிதானுரைத்தால் தீண்டார்இருபேரும்
இந்தமொழிகேட்க எழுப்பினதற்குப்பிறகு
மறுத்தெடுத்துபேயன் மறுசாவுசங்கிலியை
சிரமதிலேவைத்தவுடன் சீவனதுபோய்விடும்
பேச்சிவருமுன்னே பிணம்சுடுவாராருமில்லை
கச்சிபண்ணி அவ்வூர் ஜனங்களையும்கொன்றுவிடும்
உடன்தினமேலேயவர்கள் உயிர்வரையிலேபோவார்
வீடுகளைப்பிச்செறியும் வெளியோடியேதிரியும்
மாடாடுநல்லமனிதர் பலபேர்களையும்

சில்லறைகள்செய்யுமென்று தேசத்திலுள்ளபேர்கள்
அந்நகரிலுள்ளவர்கள் யார்தான்மடிந்தாலும்
முன்னவர்கள்வந்து முகந்துபிணந்தின்னும்மட்டும்
இருக்கும்ஒருராவில் இரவிலடக்காமல்
மறுக்குமருளவர்கள் வந்தடக்கத்தான்பிணத்தை
இப்படியேதானுமிந்த ஈனன்ஈனப்பேச்சி
அப்படியேஅந்நகரில் அவர்களிருப்பார்மலையில்
இருக்குமவர்கள் இரு பேருந்தன்வசத்தில்
வரிக்குயில்கூவும் வருஷம்ஒருநாளதிலே
நீண்டஉலகிலுள்ள நிலைமைகளைதானறிந்து
ஆண்டுதிகைந்தால் அதிசயசாவல்கூவும்
கூவியந்தநற்சாவல் குரலோசைக்கேட்டவுடன்
வாயில்நவமணியும் வாய்த்தநவரெத்தினமும்
முத்துச்சொரியும் முத்துப்பவளங்கள்குவியும்
பத்திரமாய்நீயும் அந்தப்பவளவாய்சேவலையும்
உயிர்பிழைக்கும்சங்கிலியும் உடன்சாவுசங்கிலியும்
சென்றுநீதான்வாங்கி சீக்கிரத்திலேகடிதாக
கொண்டிங்குவந்தால் குவலயத்தோர்தாமறிய
யெந்தனிருகண்மணிபோல் ஈன்றெடுத்தபெண்மகளை
உந்தனுக்குநல்லமணம் உடனேமுடிப்பேன்என்று
தருவேன்மணமுடித்து சம்பந்தமாலைதன்னை
ஒருவருக்குச்சொன்னால் உரைத்தமொழிமாறேன்
என்றரசன்சொல்ல இயலாமையும்உரைக்கும்
நன்றரசேயிப்போது நல்லமொழிதானுரைத்தீர்
யார்க்கும்ஒருவர்க்கு நல்லாசைமொழியுரைத்து
வாக்குமாறுப்பவிசு வாழ்விழந்துபோகாது
கோசிகர்க்குயாகங் குறைநீ வேகொடுத்து
ஆசுகமாய்காசிநகர் ஆளும்அரிச்சந்திரனும்
தாரேனென்றவார்த்தை தவறாதிருந்ததினால்
பேறுபெற்றநல்ல பெரியவர்கள் ஆனார்காண்
கூறினீரிந்தமொழிக் கொற்றவரேயிப்போது
மாறிதான்சொன்னால் வழக்கால்விடுவேனோ
அந்தவலுக்கள்எல்லாம் ஆமையுடன்செல்லாது
வித்தைபயிலும் மினு மினுத்தான்பட்டணத்தில்
பண்டுமுன்போய்நானும் அந்தப்பாதைஅறியேனென்றான்
ஒன்றுக்கும்அஞ்சாதே உனக்குதுணைவிடுவோம்
அந்தமொழிகேட்டவுடன் ஆமையுள்ளாருரைப்பான்
எந்தனுக்குநீங்கள் துணையேவிடவேண்டாங்காண்
ஒருவருக்கொருவர் உடனே துணைவருகில்
கருமமும்ஆகாது அந்தக்காரியமுங்கிட்டாது
செய்தியுடன்போய்கருமம் சென்றுகட்டியிங்குவந்தால்
பாதிபங்குகேட்பான் பகைவருமேஅந்நேரம்



வடமதுவிட்டு வெகுதூரம்போனாலும்
கூடத்துணைஒருவர் கூட்டவேஒண்ணாது
பிறக்கும்போதுள்ள பெருந்துணையேஅல்லாது
இறக்கும்புவிதனிலே யிங்குதுணைஉண்டாமோ
அஞ்சுவோரென்னோடு ஆராயாமல்திரிவாரோ
பஞ்சமாபாதகங்கள் பலதொல்லைகள்விளைப்பார்
ஆளுக்கொருபுத்தி அவரவரேதான்விளைப்பார்
தோழமையாகாது துணைஒருபேரும்வேண்டாம்
பன்னிரண்டுநாளையப் பயணமிருந்தாலும்
மன்னிநடப்பேன்வருசம் ஒன்றுசெல்லுமட்டும்
என்றமொழிகேட்டு இயலரசன்ஏதுரைப்பான்
நன்றுநன்றுபிள்ளாய் நீநாள்கடத்தப்போகாது
அப்படிநீசென்றால் வெகுநாளாய்ச்சென்றுவிடும்
எப்படியும்நீயுமினி யெண்ணிஎட்டுநாளையிலே
வரவேணுமிங்கேநீ வாராதேஅங்கிருந்தால்
சிரமானதையறுத்து சங்காரம்செய்வேனென்றார்
நல்லதென்றுசொல்லி ஒருநாழிகையில்ஆமையரும்
வல்லரசனைத்தொழுது வந்தான்மனைதனிலே
நடந்தபுதுமையெல்லாம் நன்றாகப்பெற்றெடுத்த
மடந்தைஅபிராமியர்க்கும் மன்னருக்கும்தானுரைத்து
நன்றாய்அமுதுகறி நாழிகையிலேமுடித்து
உண்டுறங்கிநன்றாய் உற்றதொருசாமமதில்
அன்னையொடுதந்தையும் யாரும்அறியாமல்
தன்னைஅறியப்பிறந்த சமர்த்தனவன் ஆனவனும்
வீடுவிட்டுவந்து வெளியிறங்கியந்நேரம்
காடுவட்டந்தன்னிலொரு கனசெடிக்குள்ளேபுகுந்து
இந்திரமாஜாலஇலங்கு பிரகாசமென்ன
மந்திரத்தை உன்னியவன் வாழுமாமைகூடுவிட்டு
கூடுவிட்டுப்பட்டியவன் கூடுமுன்னால்பாய்ந்ததுபோல்
மாடுதனிலேறும் மகாதேவன்தன்னருளால்
ஆகாசத்தில்எழும்பி அந்தரத்தில்ஒடிதற்கு
வாகாஈஸ்பரனார் வரப்பேறுதான்கொடுத்தார்
வானத்தைநோக்கி வலதுகரத்தைநீட்ட
தானத்துமந்திரவாள்தான் வந்துசேர்ந்ததுவாம்
மந்திரவாள்வந்து வலுவாகச்சேர்ந்தபின்பு
இந்திரமாஜாலம்எடுத்தனன் க[illegible]மானை
பன்னிரண்டுநாளை பயணமுள்ளதூரமட்டும்
பன்னிரண்டுகாலும் கடந்த[illegible]யில்பரவாமல்
விண்ணில்நிமிர்ந்து விரைவாகவேஅவனும்
கண்ணிமைக்குமுன்னே கடிதாகச்சென்றனனே
வித்தைபயிலும்மினு மினுத்தான்பட்டணத்தில்
வந்தான்கதிரோன் மலையிலடைந்ததுவே

கதிரோன்மறைந்து கடுகவிருள்வந்தபின்பு
சதிராகவந்து பிணந்தான் அடக்கும்காடதிலே
இடுகாட்டில்வந்து இலக்கறியமாட்டாமல்
தடுமாற்றமாகதனித்திருக்கும் வேளையிலே
தீண்டும்அரவுகடித்து செத்தவளை தானெடுத்து
கொண்டுவந்துவைத்தார்கள் கூண்ட இடுகாடதிலே
அன்றுவலுப்பேயனோ டானஈனுப்பேச்சி
இன்றுகொண்டுவந்தபிண மெளிதாகவேபொசிக்க
பாராமலிங்கேவருவார்க ளென்றுசொல்லி
பாரப்பாரணைபோட்டு பாடையதன்மேலேவைத்து
காட்டுகரிசெந்நாய் கழுகுபருந்துகடுவாய்
கூட்டமிட்டுவந்து பிணம்கொண்டுபோகாதபடி
குழைமாறுபோட்டொளித்து கூடிவந்தபேர்களெல்லாம்
வழிமாறுடனவர்கள் மனைதனிலேபோனார்கள்
எல்லோரும்தங்கள் மனையேகிபோனபின்பு
வல்லபிழைசங்கிலியும் வலுசாவுசங்கிலியும்
கையதிலேகொண்டவர்கள் கருங்கழுகுபோல்பறந்து
தந்திரமாயவர்கள் சங்கிலிகொண்டிப்போது
இந்தராச்சாமம் இருபேரும்வருவரெனவே
நாம்வந்தவேட்டையின்று நன்றாகவாச்சுதென்று
தாமும்எழுந்திருந்து சப்தப்படுத்தாமலே
பாடையின்கீழ்போட்டிருந்த பாணுக்குள்ளேபுகுந்து
ஆடையைமேல்மூடி அவனொளித்துதான்பதுங்கி
ஒண்டிபதுங்கி ஒளித்திருக்கும்வேளையிலே
அன்றிராச்சாமம் அவர்களிருபேரும்
இருப்பிளகிவேந்தரைப்போ லிருகண்ணுந்தான்சிவந்து
பருங்கழுகுபோல் பறந்துபாடையின் மேல்விழுந்தார்
ஈனனென்றபேயனுடன் யீனுப்பேச்சிதானும்
ஊனப்பிணத்தை உயிர்தேற்றிகேட்பதற்கு
பொருந்துபிழைசங்கிலியும் பிழைசாவுசங்கிலியும்
வருந்தியபாடைக்குள் வைத்தங்கிருபேரும்
தந்திரமாக உயிரைத்தர வெழுப்பி கேட்குமுன்னே
மந்திரவாளாலே வலுவாகவெட்டிவிட்டான்
பாரவலுப்பேயன் பதறிஅலறியோட
வீரமணிவாளாலே வெட்டினான் காணம்மானை
கத்திபட்டுபேயனுடை கைமணிக்கட்டு அற்று
சக்திகெட்டுசாவுபிழைசங்கிலி போட்டோடிவிட்டான்
பேயனுடன்பேச்சி பேதலித்துப்போனபின்பு
நாராயணனருளால் நாகமுனிஉடனேவே
வெற்றிபெருசங்கிலியும் வீரதண்டையும்பறித்து
பத்திரமாய் நாமள்பலிப்பறிய வேணுமென்று
பாரண்வந்தவனும் பசுங்கிளிமேலேகிடக்கும்



மரணமடைந்தநல்ல மங்கையரைப்பார்த்துரைப்பான்
புகழாய் ஒருபெண்ணதையும் பூதலத்தில்நான்முடித்து
இவளுங்கடக்காரி நமக்கு ஈஸ்பரனார் ஏவலென்று
சங்கிலிவேண்டி நாமள்தான் போகவந்தவிடத்தில்
மங்கிலியம் சூட்ட விதிவந்து விளைந்ததென்று
பய்ய ஒருபுறததில் பக்கத்திலேயிருந்து
மையழகும் கண்ணாள் வடிவழகும் முகமும்
வாவியினுள்ளே மலர்ந்தசெந்தாமரை போல்
ஆவிஉயிர்போயும் அழகுகுறையாமல்
சஞ்சலமாய் சற்றேசரிந்துறங்கும் பேர்களைப்போல்
கஞ்சமுகத்தாள் அழகை கண்டவனும்தான் மயங்கி
யேங்கிபெருமூச்சுவிட்டு இருகண்ணால்நீர்சொரிய
தாங்கிமடிமீதில்வைத்து தன்மார்போடேசேர்த்து
இலங்குமுகத்தாளுடைய ஏற்றவடிவைப்பார்த்து
புலம்புவான் தன்னிலவன் போதமறந்தேஉருகி
கன்னல்கரும்பே கனக நவரத்தினமே
உன்னைமணமுடித்து உன்னோடு வாழாமல்
பண்பாருஞ்சொல்லுடைய பாவையரேநானுமிங்கே
உன்பாடுகாண எனக்கு ஊழ்விதிதானெனவே
எரியிலடக்காமலுன்னை இன்று வைத்துகாத்துதான்
அரிஅயனும் உன்னை எனக்கமைத் தாரென்றுசொல்லி
தன்னில்தனைத் தேற்றி பிழைசங்கிலியைதானெடுத்து
உன்னிதமாக அவள் தன் உச்சிதலை மீதில்வைத்தான்
உயிர்பிழைக்குமசங்கிலியை உச்சிதனில்வைத்தபின்பு
மயிர்தொங்கிநின்ற உயிர்வந்ததுகாணம்மானை
மேனிவெதும்பி விழியுமையுந்தட்டி முழித்து
தரணிதனில்அவளுக்கு சந்தியுமுண்டானதுவே
மடிந்தஉயிர்மீள மகாதேவர் நல்லனருளால்
கிடந்தவள்வைத்தவர்க்கு சேட்ட மதுஉண்டாகி
தியக்கம்தெளிந்தவளும் சேஷ்பிரிந்தபின்பு
அசந்தமனதில் அறிவுவந்து தோன்றியதும்
விசந்தீர்ந்தபின்பு அந்த மெல்லியருமேதுசொல்வாள்
எங்கிருந்து நானிப்போ யிங்கிருப்பதேனோ
அங்கேயிடுகாட்டில் நம்மையாரோடு வைத்தார்கள்
ஆடையுமமூடி அதிசய பாணும்போட்டு
பாடையின்கீழ் படுத்துறங்குகாரணமேன்
திடனாகநாமுந்தெளிய உறங்கையிலே
யிடுகாட்டில நம்மையெடுத்து இங்கேவைத்தவரார்
என்றுசொல்லி பின்னுமவள் எண்ணியவள்தானினைந்து
அன்றுமாநங்கை அறிவுவந்து ஏதுசொல்வாள்
அரவுகடிக்கஉயிர் அந்தத்தில் போனபின்பு
விழாவாயெடுத்து நம்மையெவன்காட்டில் வைத்ததுண்டு

வென்றுசொல்லி மாரிமுகம் ஏரிட்டுப்பார்க்கையிலே
மன்னுபுகழ்மனிதனைப் போல்அந்தமன்னவனும்
பொன்வடிவு போலிலங்கும் பூவையாள்தந்தனையும்
தன்மடியில் போட்டவனுந் தானிருக்க கண்டனளே
கண்டவுடன் அவளுங்கனபிரியமாய் மகிழ்ந்து
வென்றியுடன் நம்மை விசம்தீர்த்தவரெனவே
பார்த்தாளவனுடையபாவினையும் ஒப்பினையும்
செங்காமரையில்வளர் செந்தாமரைமுகமும்
வர்ணவடிவழகும் வாக்குவடிவுசுந்தரமும்
பொன்னினுடைவாளும் புகழ்வீரசங்கிலியும்
தன்மடியில்போட்டவனும் தானிருக்க கண்டனளே
கண்டவுடனே அவளுங்கனபிரியமாய்மகிழ்ந்து
கண்டுமயங்கி கருத்தழிந்து ஏதுசொல்வாள்
வீமனோசீவகனோ வேந்தனரிச்சந்திரனோ
காமன்அழகுஇந்த காவலர்க்குப்போதாது
சீராகநம்முடைய சீவனைக்காப்பாற்றினவர்
யாரோதெரியாதென்றவளறியப் போகுதில்லை
என்றுசொல்லி மின்னாள் இவன்தன் வடிவுதன்னை
கண்டுமய்யலாக காதல்கொண்டுதான்மயங்கி
முன்னேமயங்கி முழுமயக்கமானதிலும்
மன்னனுடஆசை வலுமயக்கம் ஆனதுவே
அயர்ந்தவனை தேற்றிவெகு ஆதரவாய்வார்த்தைசொல்லி
மகிழ்ந்து மனர்தடவி மாதுமனதைத்தேற்றி
குளிர்ந்தமொழிசொல்லியவன் கூறுவான்வார்த்தையொன்று
இழந்தஉயிர்தன்னை உன்மேல் இச்சைக்கொண்டு நான்வருத்
உன்னைமணமுடிக்க உன்னிடத்தில் இங்குவந்தேன் [தி
என்னைமுகம்பாராமல் ஏன்கிடக்கிறாய் எனவே
சொல்லியவன்தேற்றியவன் சோகமுந்தீர்ந்ததுவாம்
மயக்கந்தெளிந்தபின்பு மன்னவனும் மங்கையரும்
தயவுமுடன்வார்த்தை தங்களிலேதான் பேசி
பேசுமொழிகளெல்லாம் பெருகஅறிந்தபின்பு
வாசமலர்குழலாள மன்னவனோடேதுசொல்வாள்
ஆசைமொழிசொல்லி அகற்றி தன்னைவிட்டுவிட்டு
தேசவழிநீர்போனால் தேடிவரமாட்டேனோ
என்றவளும்சொல்ல அந்த மன்னவனுமேதுசொல்வான்
ஒன்றுக்கும் அஞ்சாதேநான் உன்னைவிட்டுப்போவதில்லை
உலகறியகைப்பிடித்து உன்னைமணம்செய்யுமுன்னே
கலைமான் கடிபோல் காட்டில் விளையாடுவோ நான்
உலைமெழுகுபோலுருகும் உற்றமங்கையைத்தேற்றி
பூச்சொரியும் சோலையின்னும் பொற்கொடியாள் தன்னோ
வாய்ச்சரசம்சொல்லி அவர் மகிழ்ந்து விளையாடி [டே
அத்தலத்தில்நன்றாய் அவர்களிருபேருமாய்



வெற்றிலையும்தின்றவர்கள் வெளிப்புறத்தில் எச்சில்துப்பி
விடியஒருகூருமட்டும் விளையாடிதானிருந்து
மடியில் அவளைஉறக்கி மகிழ்ந்துதான் கிடத்தி
தையல் அறியாமலவன் சாவுசங்கிலியைவைத்தான்
உய்யஉயிர்சோர்ந்து ஒளித்தோங்கிநின்றதுவே
நேரம்விடியுமுன்னே நேசபாதேசிகள் போல்
பாரையிடு காட்டைவிட்டு பட்டணத்தில்வந்தனனே
வீரநெடுந்தெருவில் மினுமினுத்தான் பட்டணத்தில்
சாரமுடனே அவனும் சந்தி.தம்பலந்தன்னிலே
சந்தியில்வந்துசரிந் துறக்கங்கொண்டனனே
நந்துலவு மானபுகழ்நாகமுனிவன் புதல்வன்
அப்போதவனும்வந்து அங்கவனுந்தானுறங்கி
மெய்ப்பாய்க்கதிரோன் விடிந்ததுவே அம்மானை
விடிந்தபின்எழுந்து நல்லவேந்தரும் ஆமைச்சரோடே
மடிந்தவள்தனையடக்க மனிதர்பலபேரோடே
படிந்தவர்சூழுஞ்சேனை பரிகலத்தோடேநீங்கள்
கடந்தவர்நடந்து நல்ல கன இடுகாட்டில்வந்தார்
வந்தவளைந்தெல்லோரும் வாய்த்த இடுகாட்டிலே
கொந்தளமாய்நின்றவர்கள் கூறுவார்வார்த்தைகளை
யிடுகாட்டிலேசடலம் இங்குவைத்துபோனபின்பு
வடுவாகப்பேயன்வந்து வாய்ப்பட்டாலும்
கடுவாய்கழுகுநரி கைப்பருந்ததாலும்
பாருங்கள்என்றுசொல்லி பாராசர்தானுரைக்க
சாருங்குழைமாறு சாற்றினதைத்தானீக்க
வந்துசிலபேர்கள்அந்த வாணுதலைபார்க்கையிலே
கொந்துசெரியுங்குழலாள் கொலுவுறக்கஞ்செய்தாப்போல்
கிடக்கும்கிடப்பை கெளிதமுடனேபார்த்து
அடக்கவும்போகாதிவளுக்கு அடங்கிக்கிடக்குதுகாண்
கேற்றிருந்தலச்சணமும நிலைகளதும்வெவ்வேறு
பார்த்திருக்க இன்றுமுகம் பரிமளமாய்காணுதென்பார்
வானிலுயிர் சேர்ந்து மடிந்துறங்கும்பேர்களுக்கு
மேனியிடம்ஆனதும் விம்மிஉலையாதோ என்பார்
காயம்கலங்கிஉயிர் கண்ணுறங்கும்பேர்களுக்கு
வாயில்வெற்றிலைசிவப்பு வந்ததென்னமாயமென்பார்
பேச்சியோடுபேயன்பிணம் பிடுங்கித்தின்னுமல்
ஆக்கினையாய்க்காத்தவர்கள் யாரென்பார்சிலபேர்
மற்றதெல்லாம்போகட்டும்காண் மடிந்துகிடக்கும்பேர்க்கு
வெற்றிலைதான் தின்றதுப்ப மேதினியில்கண்டதுண்டோ
உண்டோதான் முன்னாள் உலகிடத்திலேநாமள்
கண்டதுண்டோ இந்த கலியுகத்தையென்பாரும்
ஆளுக்கொருவார்த்தை அவரவர்கள்தான் கூடி
குழவளைந்துநின்று சொல்லுவார்இப்படியே

கண்டவர்களெல்லாந்தான் கைவிரலைமூக்கில்வைத்து
நன்றுநன்றுஇப்புதுமை நாம்கண்டதில்லையென்பார்
காட்டிலிவளைவைத்துக் காக்கவொண்ணாதென்பாரும்
வீட்டிலிவளையெடுத்துவிரைந்துகொண்டு போவோமென்பாரும்
அருமைக்குழலாளுக்கு ஆவிவந்துசேருமுன்னே
திரும்பஎடுத்து இவளை சுடக்கவொண்ணாதென்பாரும்
எங்கெங்குமுள்ளவர்கள் இப்புதுமையைதான்கேட்டு
அங்கங்கிருந்துவரும் ஆடவரும்மாதர்களும்
மண்ணில்படிந்தவள்தன் வாய்த்தபுதுமைபார்க்க
எண்ணத்தொலையாது எள்குருணிகோடிபடை
யிடுகாடுதன்னில்வந்து எங்குமலைந்துசேரும்
படைவீடாய்க்கூடி பார்த்தனர்காணம்மானை
இப்படியேதான்செருமி யெல்லோரும்நிற்கையிலே
மெய்ப்புடையவேந்தன் மின்னுமுடிராசாவும்
ஆளடித்துநீக்கி அனைவருக்கும்புத்திசொல்லி
வாழ்மயிலாள்தன்னை வசமாகவேயிருத்தி
குளிர்ந்தநிழலில்வைத்து கொள்பட்டிலைக்கூடி
இழந்தஉயிர்வருந்த ஏற்றமுடிமன்னவரும்
மந்திரிமாரோடே அந்தமன்னவருமேதுசொல்வார்
எந்தவூராளுமெங்கிருந்து இங்கொருவர்
வந்தவர்களுண்டானால் மந்திரிமாரே நீங்கள்
ஆராய்ந்துவிசாரித்து எல்லோருந்தானறிய
வேந்தன்மகளாரைவிஷந்தீண்டி மாண்டவளை
எக்குலத்தாராலும் எங்கிருந்துவந்தாலும்
கக்கிசமாயரவங்கடி மீட்டமன்னனுக்கு
ஏலக்குழலாளை யெல்லோருந்தானறிய
மாலையிட்டுநாங்கள் மணமுடித்துத்தருவோமென்று
உரமாகவே இந்தமொழி உலகறியவிளம்பி
பறைகாரனைவருத்தி பறைசாற்றுமென்றுரைத்தார்
வேந்தன் இவையுரைக்க விரைவாயவந்தமந்திரியார்
பார்க்காமல்வந்து பறைகாரனைவருத்தி
அழைக்கும்பொழுதோடிவந்து அரியபறைகாரனவன்
தழைக்கும்புகழ்மந்திரியை தான்தொழுதேதுசொல்வான்
நீண்டபுகழ்வளருமந்திரிகலியாணனங்கே
ஆண்டவனையென்னை அழைத்ததேதென்றுசொல்லி
வந்துபணிந்து வணங்கும்பறைகாரனுடன்
சிந்தையுற்றுமந்திரிமார் செப்பும்வார்த்தையொன்று
அரவுகடித்தவிசம் ஆராலும்மீட்டவர்க்கு
தருவோமமணமுடித்து தாராசன்தன்மகளை
யென்றுவிளம்பி யெல்லோருந்தானறிய
கட்டாகவேநீ கடுகஒருநாழிகையில்
பட்டணத்தைச்சுற்றிப் பறைசாற்றுமென்றுரைத்தார்



சொன்னமொழிகேட்டு தொழுதுபறைகாரனவன்
அந்நேரஞ்சென்று அழகுபறைதானெடுத்து
வட்டமிட்டுசுற்றி வளமாய்மொழியுரைத்து
பட்டணத்தைச்சுற்றி பறைசாற்றினன்காணம்மானை
நிறையோசையாக நெடுந்தூரந்தான்கேட்க
பறையறையுஞ்சத்தம் பலபேருந்தானறிந்தார்
மூந்தபறையை முழக்கி அபயமிட்டு
சந்திக்தெருவில் தான்வரும்வேளையிலே
யெளியவனாயிருப்பான் என்று போலிவனும்
வழியிலேயெழுந்திருந்து வந்தமறித்தேதுசொல்வான்
தெளிவாகஇந்தமொழி செப்பிப்பறைஅறைந்தாய்
ஆரொருவர்வந்து அரவுவிஷந்தீர்த்தவர்க்கு
தாராசன்பெற்றமகள தன்னைமணமுடித்து
ஓமென்றுசொல்லி நமக்குண்மைசொல்வாராகில்
நான்வந்து அந்தவிஷம் நாழிகையிலேமீளவைப்பேன்
அந்தமொழிகேட்டு அதிப்பிரியமாய்மகிழ்ந்து
நகைதகளிகூர்ந்து சிறந்தபறைகாரனவன்
சந்தோசமாகவந்து தாராசனுக்குரைப்பான்
நாட்டைஅரசாளும் நல்லபுகழ்மன்னவனும்
ஒற்றன்தனைஅழைத்து ஓடவிட்டான்சீக்கிரத்தில்
அப்போதுஒற்றன் அம்புவிரைந்தாப்போல்
தப்பாமல்சென்றவனும் தாராசனைத்தொழுது
அஞ்சிஒதுங்கிவெகு ஆசாரமாய்ப்பணிந்து
மிஞ்சிபுகழ்மன்னவர்க்கு விண்ணப்பமேதுசொல்வான்
நாங்கள்பறைசாற்றி நடந்துவரும்வேளையிலே
யெங்கிருந்தானோ இப்பானைப்போலொருத்தன்
வந்துவழிமறித்து வளமானதுகேட்டு
இந்தவிதந்தீர்ப்பவர்கள் இல்லையோகாண்என்றுசொல்லி
பறையறையவேண்டாம் பாரிலுள்ளோர்களறிய
அறையாமல்மன்னவனும் ஆஞ்சிபஞ்சாகப்பொருந்தி
பாம்புவிஷம்மீட்டவர்க்கு பாரறியதன்மகளை
சோராமல்நல்லமணஞ்சூட்டி வைப்பாராகில்
மீளுவோம்நாம்விசனமகேட்டுவாருமென்றார்
யாரும்புகழாமே அறிவிக்கவந்தேனென்றார்
ஒற்றர்உரைத்தமொழி உண்மையுடனெல்லோரும்
கேட்டங்கதிசயமாய்கெட்டி கெட்டியெனறுசொல்லி
இந்நேரம்கூட்டி யிமைக்குமுன்னேவாருமென்றார்
அந்நேரம்மன்னவர்கள் ஆளனுப்பினார்கடிதாய்
வேந்தன்விடுதூதர்கள் விரைந்துகடிதாகவேதான்
சூழ்ந்துநெருங்கிவரும் துணைமக்கள்தன்னுடனே
சந்தோசமாகநல்ல தாரணியோர்களறிய
வந்தவர்களெல்லாம் வகைந்துசெருமிநிற்க

பூட்டும்சிலைவீரணிந்த பொன்னுமுடிமன்னர்முன்னே
கூட்டிவந்துவிட்டார்கள் குளிந்தரசர்தான் காண
கண்டுமகிழ்ந்தவனும் கைதந்தெழுதான் காவலனை
அன்றரசனும்மகிழ்ந்து நீயாருடபிள்ளாய்என்றுரைத்தான்
அரசனேயென்னுடைய அன்னைபிதாவையறியேன்
விரயவேயென்னூரும் வெகுதூரமாயிருக்கும்
நாகசித்தன்மைந்தன்என்று நம்மை உரைப்பார்உலகோர்
ஏகமாய்நாமூவே இருப்போம்மலைதனிலே
மலையைவிட்டுநாமுமிங்கேவந்துநெடுநாளுச்சு
இலைமலரில்முன்னுவிடறு செய்தபோர்களைப்போல்
பரந்துதிரிவோம் பலவிடமும்நாமுமிங்கே
இரந்துகுடியார்காண் எங்கள்குருவானவரும்
யார்க்கும்விசந்திர்ப்போம் அரவுபிடிக்கமாட்டோம்
வாகுமாறுகவர்க்கு மந்திரம்நன்றாய்பலிக்கும்
போக்குமொழிசொன்னதுண்டால் போனஉயிர்மீளாது
திரைவளைந்துமந்திரத்தை செபித்துஉயிர்தனையும்
வரவழைத்தாலுன்மகளை மணம்நமக்குசெய்வமென்று
கைபோட்டுமெய்யாக கடவுள்மேலாணையிட்டு
மெய்யாகச்சொன்னால் விசத்தைநானுமீள்வேனென்றான்
அந்தமொழிகேட்டு அரசனவன்கைபிடித்து
முந்தஉரைத்தமொழி முழுவதுபேஉனக்கு
பேரானஈஸ்வரனார் பெருமாள்திருவாணை
மாறேன்நானென்றுசொல்லி வலக்கைமிதக்கொடுத்தார்
அரசனவலக்கைபோட்டு ஆணையதுஇட்டபின்பு
திரைவளைந்துமந்திரத்தை செபிக்கவென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அருகில்நின்றசிலபேர்கள்
வந்துமணிப்பட்டெடுத்து வளைந்தார்திரையாக
கோட்டுத்திரைவளைந்து கூடாரமும்போட்டு
நாட்டமுடனே அவர்கள் நாழிகையிலேமுடித்து
வளைந்ததிரைக்குள்புகுந்து மந்திரத்தையுச்சரித்து
இழந்தஉயிர்மீள இப்போதழைக்குமட்டும்
வல்லூருந்திண்புயனே மந்திரிமார்களேநீங்கள்
எல்லோரும்தூரத்தில இருக்கவேண்டுமென்றான்
சொன்னமொழிகேட்டு சூழ்ந்துநின்றபேர்களெல்லாம்
அந்நேரம்நீங்கி அவர் அப்பாலேபோயிருந்தார்
இருந்தபின்னெழுந்திருந்து இவன்திரைக்குள்ளேசென்று
பழந்தவளருகேநன்றாய் பரிவுடனிருந்துகொண்டு
பொருந்திய பிழைசங்கிலியைப் பெண்ணுடையசிரசில்வைக்க
திருந்தியகூட்டிலவந்து சீவனும் அமைந்ததென்றே
சீவன்பிறந்துதெளிந்து தியக்கம்தீர்ந்ததுவே
ஆவிகுழலாளுக் கறிவுவந்தவேளையிலே
மங்கையர்க்கும மன்னனுக்கும் மந்திரத்தைஉச்சரித்து



எங்கும்புகழ் மன்னவரும்ஏற்ற மந்திரத்தைஉரைத்தான்
பூந்தாமரையாளேபெண்ணமுதே நம்மனிலே
நேற்றுநடந்தபுதுமை நீணிலத்திலுள்ளவர்க்கு
சொல்லாதேஉன்னை மணஞ்சூட்டவேவேணுமென்றால்
வல்லாண்மையாக உன்னைமாலையிடவேணுமென்றால்
அரிவையரே உன்னைவளர்த்த அன்னைபிதாவானவரும்
ஒருவர்தனக்கு இந்தஉள்ளடக்கம் சொல்லாதே
பலவந்தமாகஇவன் பாம்புவிசம் தீர்த்தவர்போல்
உம்மந்திரமாகஉரைத்தனன் காணம்மானை
ஓமென்றுசொன்னாள் உடனேவெளியில்வந்தான்
தானென்று உலகாளுந்தாராசன் முன்பதிலே
வந்தான்காண் அந்நகல்மந்திரவாதியவனும்
உந்தனக்காய்நல்ல உலகாளும்மன்னவனே
அவ்வாவுதீண்டிஉயிர் அந்தரத்தில்போனவளை
கச்சிப்பட்டு நானுங் கடுவிசத்தை மீட்டதினால்
பாம்புவிசம்தீர்ந்தவளுக்கு பசைப்புவந்ததெனவே
வான்புகழும்மன்னவனே மகளைவந்துபாருமென்றான்
பைய்யவந்துமன்னவனும் பைங்கிளியை பார்க்கையிலே
எய்யும்இயல்விழியாள் இமைகட்டிதான் முழித்தாள்
முழியும்விழியழகும் முகத்திலொளிபானதும்
களிகூர்ந்து மன்னவரும் கண்குளிரக்கண்டபின்பு
ஆவிமகளையெடுத்து அன்பாகமுத்தமிட்டு
காவிவிழிநீரோட காவலவன்வாய்புலம்பி
மோந்துமகளார்தன் முகத்தை முகத்தோடுவைத்து
ஏந்தியெடுத்திருத்தி யிங்கிதமாய்முத்தமிட்டு
இங்கிருந்தாயிங்கேயெம் மகளேயென்றுசொல்லி
மகளைமடிமீதில்வைத்து வளைந்ததிரையைநீக்கி
பவளமணிமார்பழகன் பாரிலுள்ளோரனையழைக்க
வேந்தன்அழைக்க அந்த மேதினியிலுள்ளோர்கள்
சூழ்ந்துநெருங்கிஅவர்கள் [illegible]லையாய்பெருமபடையாய்
வான்தட்டில்வளரும்மழைமேகம்போல்திரண்டு
தேன்கட்டில்ஈயதுதான் செருமிவளைந்தாற்போல்
பூங்கொடியுடையாளை ஆண்டிவந்து பார்ப்பதற்கு
மண்போட்டால்கீழேவிழமாட்டாது [illegible]
தான்நெருங்கி [illegible] நெருங்கினார்
ஆள்நெருங்கிப்பார்த்தவர்கள் அதிசயங்காணம்மானை
பார்த்தவர் செருமிநிற்க பாவையர்கள் [illegible]ம்
வேர்த்துடல்வருந்தப்ப மெல்லியர்கவரிவீச
காற்றுவருவதற்கு காசினியோரனைவரும் [illegible]
வீற்றிருந்தாசர்கோமான் விளம்புவாரம் அரசரோடே
அமைச்சர்தனைவருத்தி ஆனபுகழ்மன்னவனும்
குமைச்சல்கள்ஆனதையும் குக்களிப்பைத்தான்மாற்றி

தந்திரம்சேர்மன்னவர்கள் தானிருக்கும் வேளையிலே
மந்திரிமார்களோடே அந்தமன்னவனு மேதுசொல்வான்
எங்கிருந்து பார்ப்பதற்கு இங்குவந்த பேர்களெல்லாம்
அங்கவர்கள் தங்மனையில் எல்லோரும்போனாலும்
அந்தரமாய்கடித்த ஆடரவத்தின்விசத்தை
மந்திரத்தால்மீண்ட மருமகன் போகாவண்ணம்
காத்துப்பதனமதாய் கைக்குள்நிறுத்திருந்தால்
வேற்றுமையாய் உங்களைநாம் வெட்டியிருப்போமென்றுரை
வேந்தனுரைக்க அதமிக்க துரைமக்களெல்லாம் [த்தார்
சூழ்ந்துநெருங்கி அவரை சூழ்ந்திருந்தாரம்மானை
பவளஇதழுடைய பாரரசன் தன்மகளை
மகளைவளைந்திருந்தார் வந்தபெண்கள் ஆயிரம்பேர்
மூடாவுக்குள்ளே முதன்மகளைத்தானிருத்தி
யேடாருமார்பன் யெழுந்தருளினார் வெளியில்
வெளிதனில்வந்துமன்னன் வேதியர்களையழைத்து
களிபுகுந்தரசர் கோமான் நல்லநாள் கேட்டபோது
அழிவதொன்றில்லைநாள்தான் அமிர்தமாம்யோகம் இன்று
மொழியுரைத்தவனுமிக்க முகூர்த்தமாமென்றுசொல்லி
ஜோஷியரு சொன்ன மொழிசுற்றிலுள்ளோர் தான்கேட்டு
ஏதுபோலாச்சு இராசனுக்குமாலையிட
இந்தஉலகில் பலராசாக்கள் தானில்லையோ
வந்துராட்சித்தவனுக்கு மாலையிடுவோமெனவே
பெருமையுடனாசன் பெற்றெடுத்தபெண்மகளை
அருமையுடன்நல்லமணம் ஆள்புவியில்கூட்டாமல்
சீரத்துநாட்டுவழி தேசத்திலேயிருக்கும்
ஆருமத்தானுக்குஅமைத்திடுதோ தெய்வமென்பார்
ஆருக்கும்ஒருத்தனுக்கு ஆளைபிடித்தாற் கொடுத்தால்
வாக்குரைத்தாலத்தை மொழிமாறுமோவென்பாரும்
பார்விஷந்தீர்த்தவர்க்கு பாரினுள்ளோர் சிலர்
போகதிரவியமும் பொன்னையும்கொடுத்து
போவென்றுசொல்லிவிட்டால் போகாதோவென்பாரும்
கூவென்றுசொல்லிவிட்டால் குற்றம்வருமென்பாரும்
காட்டிலிவனைக்கடத்திவிட்டோமானாலும்
நாட்டிலஅரசனம்மை நாக்கை அறுப்பானென்பார்
திகைப்பார் எழுந்திருப்பார் சலித்திருப்பார்
விப்பாரிலுள்ளவர்கள் வேந்தனுக்கு நான்பகரி
மன்றுடச்சொல்லுதற்கு வாய்திறக்கமாட்டாமல்
எண்ணுதைகையெண்ணிவர்கள் இருக்கையிலே
தேறிஒருமன்னன் தெளிந்தராசமன்னிலேவந்து
கூறவான்செய்தஐயா ராஜகுட்பிட்டுக்கொண்டணிவிட்டு
அரசர்பெருமானே எல்லோருக்குந்தான்கேளுமேலே
ஒற்றைமணிக்குடைக்குள் மேதினியையாண்டவனே



மாறுதகீர்த்தி வளரும்பெருமானே
வீராயடியேன்ஒரு விண்ணப்பம்செய்கிறேன்
கடிமீட்டமன்னனுக்கு கனவரிசைதான்கொடுத்து
வேண்டியபொன்னும் வெகுமானமும்கொடுத்து
ஆண்டவனேநீர்தான் அனுப்பிவிடேனுமையா
தன்னூர்க்குப்போக அவன் தன்னைஅனுப்பிவிட்டு
மின்னுரைவேறுமணம் வேந்தனுக்குச்சூட்டுமென்றான்
இந்தப்படியேமணம் இப்போதுசெய்யாமல்
வந்தஇராப்பனுக்கு மாலையிடுவோமெனவே
செம்பன்முடிசூடி தேசங்களிலேயிருக்கும்
அம்புவியையாளும் அரசர்க்குமாகாது
சொன்னமொழிகேட்டு துங்கமுடிமன்னவனும்
மன்னர்பெருமான் மறுத்துரைத்தாரம்மானை
அறியாதுரைத்தாய் அதியரசன்முன்னாளில்
நெறியாகத்தன்வார்த்தை நிலைதவறாதபடிக்கு
மகரந்தனைபிடித்து வந்தபண்டாரந்தனக்கு
திரைசேர்மடந்தையரை செய்துகொடுக்கலையோ
பூரத்திலேதிரியும் பிச்சைவித்துவான்களுக்கு
குருதியிருந்ததையை கொடுத்தானில்லையோ
பண்டுஅரிச்சந்திரர் பகரும்ஒருமொழிக்காய்
குன்றுமலதேசமதை கோசிகனுக்கீந்ததில்லையோ
அப்படிதானல்லவோ அருட்பெறும்பெற்றவர்கள்
இப்படியொத்தப்பெரியோர் இனம்பல்பேர்களுண்டு
என்னசொன்னீர்இந்தமொழி யெந்தனுக்குஏறாது
நான்சம்மதித்ததுண்டால் நட்டம்உங்களுக்கேது
குறித்தொருவர்க்குமணம் கூறியபெண்ணணையும்
மறுத்தொருவர்க்கீதால் வசைவரும் உனரீபோ
மெய்யாகவதுவெறும் வீணாகப்போமோஉரைத்தாய்
அப்பாலேபோவென்றரசன் சினந்துரைப்பார்

## வேறு

வேந்தர்தம்இந்தவார்த்தை வேகமுற்றுரைத்தபோது
சூழ்ந்திடும்போகளெல்லாம் சொல்படியேகேள்ப்போமென்
போந்துலகுஆளும்வேந்தன் புத்திரன்சுவாமியென்ன [ன
சேர்ந்தினிமாவணெல்லோருஞ் செய்பணிவிடைஅருளுமென்
பணிவிடைஉங்களுக்கு பாங்காகச்சொல்லுகிறேம் [றார்
கணிதமுடன்எங்குமுள்ள காசினிபோர்மறிய
இத்தலத்தில்நாமள் இருக்கும்மாளிகைகோயில்மட்டும்
நத்தலமாய்நீங்கள் நடைகாவணங்களிட்டு
பட்டுவிதானமுடு பலவிதமாய்த்தான்வகுத்து
எட்டுத்தெருவும் இதமாய்அலங்கரித்து
தோரணங்கள்சூட்டி துலங்குமணியேடைகளும்

பூரணங்களாய்த்தெருவில் பூந்தேர்களும்நிறுத்தி
தாழைமலரும்நல்ல தாமரைப்பூமாலைகளும்
வாழைக்கமுகுநல்ல வாய்த்தகரும்புடனே
பொன்மாலைநன்மாலை நல்லபூமாலைபலவுடனே
அம்மாலைகளெல்லாம் அழகாய் அலங்கரித்து
நேர்த்திகளாகவெங்கும் நிலைவிளக்குதானிறுத்தி
கோத்திரத்திலுள்ளோர் கொலுவிருக்கமேடைகட்டி
தூக்குவிளக்குடனே தூண்டாச் சுடர்விளக்கும்
வாக்குடனேயிந்த வகைகளெல்லாம் சீக்கிரத்தில்
கலியாணமென்றுசொல்லி காசினியெல்லாம் அறிய
வலுவாய்பறைசாற்றி வாருமென்றுதானுரைத்து
அரசன்மொழிதட்டாமல் அந்தப்படியே அவர்கள்
பணிவிடைகளிட்டு மணிப்பந்தலதுவிட்டபின்பு
அவனியெங்கும்சேனைபடை ஆனைகுதிரைத்திரளும்
ஒட்டகத்தால்வண்டி ஒருலக்ஷங்காலாளும்
பட்டயம்கேடயங்கள் பதினெட்டு ஆயுதமும்
வில்லணியும்வாளணியும் சேர்ந்த சர்துரைஸ்தானிகளும்
ஜாதிபதினெட்டுவகை சலுப்பர்துலுக்கர்களும்
காதிவருந்தோட்டியரும் கருத்துடையசெட்டியரும்
முத்துக்குடையுமுறுகருவாள் போர்க்குடையும்
பத்திபத்தியாக பவளமணிக்குடையும்
சந்திரவட்டச்சயமாந்து பூக்குடையும்
இந்திரவர்ணக்குடையும் இடையருச்சேடிகளும்
வெஞ்சாமரையும் விருதுக்குஞ்சமானதுவும்
பஞ்சவர்ணத்தீவட்டி பகல்வெற்றிகளுடனே
அஞ்சுவர்ணக்கொடி அசையாட்டிக்காரர்களும்
பல்லக்குக்காரர்களும் பட்டணமுமணையாயமும்
வல்லவடநாட்டு வண்ணியரும்செல்வணியரும்
தண்டியல்போர்வீரர்களும் சதுர்கோடிப்படைகளும்
கண்டிலக்குமல்லையர்கள் காலாளாய்வாரவர்கள்
மத்தளம்கொம்புகுழல் வாத்தியங்களானதுவும்
வெற்றிமுரசதிர விருதுபலஊதிவர
பத்திவிளக்கும் பலவிளக்குந்தானிறுத்தி
குத்துவிளக்கேற்றி குலைவாழைகள்நிறுத்தி
நாகசுரம்செம்பு நவரிக்குழல்வீராணமும்
சேகராமான இடிகோடை யிடிபோல்முழங்க
கொட்டுக்குவில்முரசு குமுறுகடல்போல்முழங்க
கருநூச்சுத்தி கருமருந்துபூரணம்
ஒருகாததூரம் ஒழுங்காககுத்துவெடி
கடைவெடியும் கம்புவெட்டிச்சக்கரமும்
மட்டில்லாதிந்த வகைகளெல்லாம் தானடத்தி
போய்பிழைக்கவந்தவனை பூதலத்தோர்தானறிய



மாப்பிள்ளைக் கோலம்விதானித்தாரம்மானை
பன்னீரால்நீராட்டி பரிமளங்களும்அணிந்து
மின்னுருங்காதுக்கு முகனப்பணியணிந்து
முன்கைமுதாரி முறுக்குவளைகச்சவடி
தங்கமுறுக்குவீரசங்கிலிகள் பொன்னரைஞாண்
கச்சப்புரமிடையில் கட்டினார்கனிவுடனே
பச்சைமரகதத்தால் பத்துவிரல்மோதிரமும்
இச்சையுடன்மார்பில் ஏகவடப்பதக்கம்
வச்சரிக்கையான புகழ் மன்னனாந்தவீருக்கு
பொற்சரிகைக்குல்லாவும் பொன்னால்முடிசூடி
இந்திரவர்ணபட்டெடுத்து இடையிலேஉடுத்தி
மந்திரவாளும்எடுத்து மாப்பிள்ளைதங் கைகொடுத்து
சேனைநெருங்கித்திசை களெட்டும்தான்முழங்க
ஆனையின்மேலே அலங்காரமாகவைத்து
நாகமணியாளென்ற நந்நுதலாள் தந்தனையும்
வாகமாய்அலங்கரித்து வாய்த்தபல்லக்கிலேத்தி
நடைகாவணத்தூடே நடைசங்கீதமாக
விடையேறும்ஈஸ்வரனார் விமலர்திருவருளால்
விட்டகுறையால் விதியா விருப்போர்க்கும்
பட்டணத்திலிட்டமணி பந்தலுக்குள்வந்தனராம்
பந்தலுக்குள்வந்து மணிப்பலகையின்மேலிருத்தி
வேந்தனுக்குஅந்தநல்ல மின்னிடையாள்தந்தனக்கும்
வலுவரசன்பெற்ற மகளார்க்கும் மாப்பிள்ளைக்கும்
குலமரபிலுள்ளநல்ல கோத்திரமுறைமுடித்து
சாத்திரத்திலுள்ளநல்ல சடங்குகளெல்லாம்முடித்து
மாத்திரைக்குள்நல்ல மணிமாங்கலியமுந்தரித்தார்
நாகமணிமாதுதனை நாகமுனிமைந்தனுக்கு
வாகுமணிப்பந்தலுக்குள் வையகத்தோர்தானறிய
பட்டணத்திலுள்ள பலபேரும்தானறிய
கட்டாயமணமுடித்து கைப்பிடியுங்கூடியபின்
பணப்பெட்டி ஆயிரமும் பரிகரிகாலாளும்
கணக்கில்லாதபுரவுங் காவேரியுங்குளமும்
வளமானநெற்பகுதி வையகத்திலுண்டான
கோடானுகோடி குடிவாரங்கள்தன்னுடனே
சேரும்சப்பலுங்குடியுஞ் சீரணமாகவார்த்து
ஆதிமறைவேதியர்க்கு அன்னதானம்முடித்து
மாதுமணவாளனுமாய் மணவறையிலேயிருந்து
இருந்தபொழுதிலவர் எங்கெங்குந்தானிருந்து
சிறந்தகாலியாணமதில் சிறப்பாகவந்தவர்கள்
அன்னங்கறிசோறும் அழகானவெள்ளிலையும்
வர்ணமுடன் நல்ல வகைகளெல்லாந்தான்கொடுத்து
எல்லோருந்தங்கள்மனை யேகிபோனபின்பு

வல்லபுகழாமையாரும் வரிசையுள்ளமங்கையரும்
இருந்துசிலநாளாய் யிவர்வாழும்நாளையிலே
மருதுபுகழ் சேவியர்க்கும் மாமனுக்குமேதுசொல்வான்
குன்றாதநல்லபுகழ் கோமானே நீருமிங்கே
நன்றாகவேயிருந்து ராச்சியத்தை ஆண்டிடுவீர்
அன்றுமடிந்தபேர்களை அன்றடக்கஞ்செய்யாமல்
பாண்போட்டு காத்தவர்கள் ஈனன் ஈனப்பேச்சியுடன்
ஓநாய்போலோடிடவே வாராபோர்களுக்கு
நன்றாய்பயின்றுவந்து நாட்டில் அரசாண்டிருந்தீர்
எண்ணமேலே அவர்கள் இங்குவாராதபடிக்கு
பேச்சியொடுபேயன் பிணங்காதபடிக்கு
ஆக்கினைகள்செய்து அவனையிங்குவாராமல்
தடுத்துவிலக்கி அவன் தன் சிரசைநான்பிடித்து
விடிந்துமுழிக்குமுன்னே வீறுடன்வாரேனெனவே
வாய்ப்பகட்டாய்ச்சொல்லி வலியசேவலைவாங்கி
பொய்ப்பகட்டாய்வார்த்தைசொல்லி போகதொடங்கினனே
மாமனுடன்மருமகனும்தானனுப்ப சீக்கிரமாய்வாருமென
இந்திரஜால இலகுப்பிரயாசமென்ன [றான்
மந்திரத்தைஉன்னியவன் வந்தான்மலைதனிலே
ஈனகிரியென்ற இசைந்தமலைதனிலே
ஞானமுனிவன் புதல்வன் நாழிகைக்குள்வந்தனனே
வந்துமலையிலுள்ள வளமானதுபார்த்து
சிந்தையுற்று அம்மலையில் சீர்களெல்லாம்பார்த்து
வல்லடத்தான் திண்புயத்தான் வெறுபேயன்பேச்சியுள்ள
கல்லடர்ந்தகலப்புடையைக் கண்டனன் காணம்மானை
கலப்புடைகண்டபோது காவலன்மனதுநொய்த்து
இப்புடைசனிவிப்போது இருவருமிருப்பாரென்று
மெய்ப்புடன்கச்சைகட்டி வீரவாளெடுத்துப்பூட்டி
வைப்புடனவர்கள்வாழும் வலுப்புடைதன்னில்வந்தார்
வந்துபுடைவாசலிலே மந்திரவாள்கைபிடித்து
சிந்தைகளிந்தவனுந்தேறி நிற்குமுன்னே
பேச்சியொடுபேயன் பிணம்பிடுங்கின்பதற்கு
பாய்ச்சல்புலிபோல் பதிந்தவர்களேகிவிட்டார்
இருபேருந்தன்பனைவிட்டேகியேபோனபின்பு
பெருமைமலர்க்குழலாள் பேச்சியகள்தானொருத்தி
வந்துநிற்கும்மன்னனுடை வாக்குமடிவுந்திறமும்
சிந்தையுறக்கண்டு தியங்கியேயககமற்று
அங்கவளுங்கண்டு அவன்மேல்வெகுமையலாய்
எங்கிருந்துஇங்கேதான் ஏன்வந்தீரென்றுரைத்தாள்
கொங்கலருமின்றோ கோதையரே நீகேளு
வந்தேன் நானுன்னைஎந்தன் வசமாக்கவேணுமென்று



தந்தையாரும்உந்தன் தாயாரும்எங்கேயென்றான்
பேச்சியொடுபேயன் என்னைபெற்றெடுத்தமாபாவி
பாய்ச்சல்புலிபோல பதிந்தவர்களேகிவிட்டார்
பக்ஷிப்பறவைகளும் பாரிலுள்ளமாடாடும்
எச்சளியோர்வலியோர் எதிர்த்தமனுஷரையும்
கொன்றுகொலைகள்செய்து கொடும்பிணங்களைப்புசித்து
இன்றுவருவார்கள் ஈனன் ஈனப்பேச்சி
சீரென்னனோர் தீப்போல்விழிசிவந்து
ஆரென்றும்பாரார் அசைபிடுவார்கண்டீரோ
வங்குநரிபோல் வலுப்பிணங்கள்தின்றவர்கள்
பங்கப்படுத்திஉம்மை பாதகங்கள்செய்திடுவார்
வலுகடுவாய்போலே வலுபிணங்கள்தின்றவர்கள்
கொலைசெய்வாரும்மை குளிர்ந்தமொழிசொல்லறியார்
வங்கணமாகநல்ல வார்த்தைகளைச்சொன்னாலும்
தன்குணமில்லாதார் தயவறியமாட்டீரே
கோபிக்கும்பேயன் கொடியஈனப்பேச்சி
பாவிக்கினையாக பழிபோகவந்தீரோ
ஈனன் ஈனப்பேச்சி யிருபேரும்வந்தபின்பு
வந்துமக்குளன்னை அவர் மாலையிட்டுத்தாவிட்டால்
எந்தவிதநிலையு மேகவேணுமுடனே
ஆனாலுமின்னம் ஒரு ஆண்பத்திசொல்லுகிறேன்
ஈனனேடுஈனப்பேச்சி என்றஇருபேரும்
வருமளவுஞ்சற்றே மறையுங்காணொருபுறத்தில்
இருபேரும்வந்தவுடன் இன்பமாகத்தான்பேசி
உம்மிடத்தில்வந்து ஒருபூசல்செய்யாமல்
நன்மையுள்ளபுத்திசொல்லி நாமவனை ஆணைகொண்டு
வன்மையுடனும்மை வாலழைத்தால்நீர்வாரும்
அழைக்குமட்டும்நீர்தான் அப்பாலிருமெனவே
பழுகில்லாமங்கைநல்லாள் பகர்ந்தமொழிகேட்டு
சிரித்துமகிழ்ந்தவனும் செப்புநல்வார்த்தையென்று
ஒருத்திஉனைப்போலே உறுதியுள்ளாள்காணேன்
நீர்ச்சிப்பிக்குள்ளே நிறைந்தமணியதுபோல
பேச்சிக்குநீயும் ஒருபிள்ளையெனவேபிறந்தாய்
மோசமில்லாநன்மலையில் முட்டுமரங்களுடன்
வாசமுள்ளசந்தனமும் மரத்தோடுநிற்பதுபோல்
பேச்சிவயிற்றில் பிறந்திட்டாய்நீயும் அன்று
தாழ்ச்சியில்லாபுத்தி தரிப்பித்தார்ஈஸ்பரனார்
என்றுசொல்லிமன்னவனு மிகஇதமாய்மகிழ்ந்து
பண்டுஒருபுருஷர் மிருகத்தின்பால்வாங்க
வீரன்மலைக்குள் விரைந்தொளித்தவாறதுபோல்
கோமான் திருவருளால் கோலமலைகலப்புடையில்
ஓமென்றிவாரும் ஒளித்திருந்தாரம்மானை

ஒளித்தவனிருந்தபோது ஒருநொடிதன்னில் அந்தப்பேச்சி
பழித்தவன்பேயன்பேச்சி பலவிடத்திருந்துமீள
காந்தவளிருந்த கலப்புடைதன்னில்வந்து
சுழித்தவள்மகளைப்பார்க்க சோர்ந்தவள்சரியக்கண்டார்

## பேச்சி மகள் கலியாணம்

சரிந்தமகளைப்பேச்சி தட்டி அடித்தெழுப்பி
திருந்த ஒருவார்த்தை செப்பினள்காணம்மானை
ஆவியுடன் தீபிட் டடுப்புலையும்ஏற்றாமல்
பாவிமகளே படுத்துறங்கக்காரணமேன்
என்றமொழிகேட்டு ஏந்திழையுமேதுசொல்வாள்
இன்றுமினிமேலும் ஏலாது வேலைசெய்ய
ஆச்சுதலைவலிகள் ஆலோசனைக்கடிதாய்
கைத்தாயமாகநானுங் கண்துயின்றேனிப்போது
காய்ச்சிகலக்கியுங்கள் கையால்குடிப்பதல்லால்
பேச்சிபெற்றபேச்சி என்னைப்பேயேற்றங்கொள்ளாதே
இந்தநோய்தீர்ந்து எழுந்திருந்தேனானாலும்
உங்களைக்காணாமல் ஒருஊர்வழிநான்போவேன்
போவேன்மறுதேசம் பொச்சாது உங்களைவிட்டு
தாழ்வானகுண்டுகுழிதன்னில் விழுந்துமடிவேன்
குவளைவிழியாளும் கூறினதைத்தான்கேட்டு
மகளேகுறையுனக்குவந்ததுவோ என்றுரைத்தார்
குறையேதுதானெனக்குக் குமரிருந்து தான்சடைக்க
பறையாதவார்த்தை பரதேசம்போவேனென்று
என்னைவிட்டுத்தேசவழி யேன்போகணுமுனக்கு
உன்னைமணஞ்செய்ய ஒருமாப்பிள்ளையைச்சீக்கிரத்தில்
கொண்டுவருவோமெனவே கூவினார்தாயவர்கள்
அன்றவளைநோக்கி அந்த அன்னைபிதாவுக்குரைக்க
களிகூர்ந்துமன்னனிரு கண்குளிரக்கண்டபின்பு
களிசேர்ந்தமின்னாள் நளினமுற்றுவதுரைப்பாள்
தேடித்திரிந்தெனக்கு சேகரிக்கவேண்டாங்காண்
நாடிஒருவரிங்கே நம்மிடத்தில்வந்ததுண்டு
அழைக்கவருவார் அஞ்சுகிறார்உங்களுக்கு
இழைக்கஅவரைஒரு ஈடுசெய்வதில்லையென்று
மலையாமலெந்தனுக்கு வலக்கைபோட்டாணையிட்டு
தலையிலடித்துண்மையுடன் சத்தியமுஞ்செய்வீராகில்
நட்பாகஇங்கேவந்த நல்லபுகழ்மன்னவனை
இப்போஅழைப்பேனென உரைத்தாளேமெல்லியரும்
வந்தமன்னன் தன்னைஒரு வந்திசெய்வதில்லையென்று
அந்தப்படிஅவளுக்கு ஆணையிட்டுத்தான்கொடுத்து
உண்மைசெய்தபோது ஒளிந்தவனைத்தானழைக்க
தன்மையுடனே அவனும் நாழிகையில்வந்தனனே



வந்தான்கதிரவன் வானிலுதித்தாற்போல்
செந்தாமரைபோல் சிவந்தமுகத்தழகும்
மந்திரவாளழகும் மார்பில்முத்துத்தாவடமும்
செந்தூரப்பொட்டும் சிகைமுடியழகும்
வர்ணமுத்துமார்பழகன் வடிவுமுடியழகும்
பொன்னுமுத்துமாலைகளும் பூண்டபணியழகும்
கண்டுமனமகிழ்ந்து காணப்பேயன்பேச்சி
அன்றுஉபசரித்து அமுதுகறியுங்கொடுத்து
உண்டுபசியாறி உகந்துமகளார்தனைத்தான்
வையகத்தில்பேயன்மணஞ்செய்துகொள்ளுமென்று
தையலந்தபேச்சிமகள் தக்கதொருமாலைதனை
துய்யசரடுகட்டி சொற்பெரியமன்னர்வசம்
கையைப்பிடித்தவர்க்கு கையளித்தாரம்மானை
வாசம்புகழ்மார்பனந்த மலைக்கிடங்கில்வாழும்
பேச்சிமகள்தன்னைமணம் பெருமையுடனேமுடித்து
மாதுமணவாளனுக்கு மகிழ்ந்துமலைப்பேயன்
சீதனம்வார்க்கும்போது செப்பலுற்றார்மாப்பிள்ளையும்
வன்னமுத்தானும் மலையில்வளர்மன்னவனே
என்னவகைசீதனங்கள் எங்களுக்குதாருமென்றார்
அந்தமொழிகேட்டு அம்மலையிலபேயனவன்
சிந்தையுடனிம்மலையில் தேன்சொரியும்மாவுகளும்
கொலைசெய்துநாமிதுமுன் கொன்றுதின்றபேர்களுட
பொன்னுடைமையானபல பூஷணங்களானதெல்லாம்
உன்னுடைமையென்னுடைமையுள்ளதெல்லாம்உன்தனக்கு
தாரேன்நானிந்த கயிலப்பானைமுதலாய்
மாறாமல்சீதனங்கள் வார்க்கிறேனென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அருமையுள்ளமாப்பிள்ளையும்
இந்தவகையெல்லாம் எங்கள்மலைதன்னிலுண்டு
உண்டெனக்குப்பொன்னுடைமை உற்றதிரவியமும்
பண்டுள்ளோர்எங்களுக்கு பாட்டனார்தேடிவைத்த
பொன்னும்பணமும் பொருட்டோதாமெந்தனுக்கு
சின்னமதிநுதலுக்குச் சீதனங்கள்வார்ப்பீராகில்
வண்ணமுடன்நீ வளர்க்கும் வலியசேவலானதையும்
பொன்னுமணிப்பெட்டகமும் பூட்டுந்திறவுகோலும்
இந்தவகைப்படியே எங்களிருபேர்களுக்கும
தந்ததுண்டால்எங்களுக்குத்தான்போதுமென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அம்மலையின்பேயனவன்
சிந்தைமகிழ்ந்தவனும் சீதனமாகவார்த்து
அரியபுகழான ஆள்வீரன்தன்தனக்கு
வருடம்ஒருநாள் வளமாகவேகூவும்
சாவலுடனேகேட்ட தங்கமணிப்பெட்டகமும்
ஆவலுடன்கொடுத்து அப்போதுகையளித்து

மணமுடித்துப்பேச்சி மகளும் மணவாளனுமாய்
மனமகிழ்ந்துநன்றாய்த் தெளிந்தங்கிருக்கையிலே
ஈனன் ஈனப்பேச்சி எப்போதும்போலவர்கள்
வானில்பறவைபக்ஷி மாடாடுபுள்ளினங்கள்
தேடியிருபேரும் திசைநோக்கிப்போனபின்பு
நாடிஅந்தமன்னவனும் நன்றாயெழுந்திருந்து
வல்லமையாய்த் தேடிவைத்த வளுதயிலப்பானைதன்னை
பார்க்கும்பொழுதிலந்த பத்தரைமாற்றுத்தங்கம்
தீர்க்கப்பழுப்பாய் சிவந்திருக்கக்கண்டனனே
கண்டுமகிழ்ந்தவனுங் கைவிரலைத்தான்முக்கி
மன்னுபுகழ்மன்னவனும் மறுத்துவிரலைப்பார்க்க
பெருவிரலுக்குமடுத்த பின்விரலானதிலே
ஒருவிரலுந்தங்கமதாய் ஒட்டியதே அம்மானை
தன்விரலைமுக்கித் தயிலப்பானைதனிலே
தன்விரலும்பொன்விரலாய் தங்கமதாய்போனதுவே
கண்டு மனங்கலங்கி காவலனப்போது
இன்றிவர்கள் வந்துகண்டால் ஏதுசெய்வாரோ அறியேன்
வன்பயன்பேச்சி வந்துகண்டால்காணாமல்
தன்சீலையைகிழித்து தன்விரலைத்தானபொதிந்து
விரலைப்பழஞ்சீலையினால் விரைந்துசுற்றும்வேளையிலே
திருவையிளங்குழலாள் செப்பமுடன் கண்டுசொல்வாள்
துய்யபுகழுடைய சொல்பெரியமன்னனே
கையிலென்னபட்டதுகாண் காவலனேயென்றுரைத்தாள்
என்றந்தமின்னாளியம்புமொழியைக்கேட்டு
மன்னுபுகழ்மன்னன் மறுவார்த்தையேதுசொல்வான்
உள்ளலகுக்கத்திகொண்டு உடனேயெந்தன் கையதினால்
வெள்ளோலைவார்த்தேகை விரலில்வந்துபட்டதுகாண்
இந்தமொழிவேந்தன் எடுத்துரைத்தவேளையிலே
சந்தம்றுங்குழலாள் கலகலெனவேசிரித்து
வாரவைத்தஓலைதன்னை வார்த்தகால்வழுவாது
சேரடையாயந்தமொழி செப்பினீர்பெண்ணோடே
நல்லதுகாணிச்செய்தி நானறிந்தகாரியந்தான்
வல்லதுவாயும்மையொரு வந்திசெய்யும்பேர்களில்லை
ஈனன் ஈனப்பேச்சி யிங்கேவருமளவும்
ஆனாலுமிச்சேலை அவிழாதேயுமென்னவே
சொல்லியிருபேரும சுகமாயிருக்கையிலே
வல்லியபேயனுமே வலுபேச்சி ஆனவளும்
அந்திப்பொழுதில்அலறி வெகுதூர்சுற்றிந்து
வந்தாரிருபேரும் வாழுகிறகலப்புடையில்
கலப்புடையிலவந்து கருத்தாய்ப்பசிதீர்ந்து
மலப்புடையபேயன் மருமகனைப்பார்த்தளவில்
கைவிரலில்சீலைதன்னை கண்டவனுமேதுசொல்வான்



மைப்பரவுங்கண்ணாளே வடுவேதெனக்கேட்டேன்
எந்தனுடதாயாரே மெய்யபமார்த்தமதாய்
பொன்தயிலப்பானையிலே புகழாகவேயிருக்கும்
ஏதென்றுசொல்லியவர் விரலைத்தான்முக்கி
சூதொன்றுமில்லாத சொல்ப்பெரியமன்னவரும்
பார்க்கும்பொழுதிலந்த பாக்கியவான்தன்விரலில்
ஆர்க்கமுடன்தங்கம் அடாரப்பிடித்ததினால்
அம்மானார்நம்மையினி ஆக்கினைசெய்வாரெனா
தய்யில்பதறிச் சடைத்துமுகம்வாடி
கள்ளத்தனமாகக்கத்தி பட்டதுஎன்றுசொல்லி
வெள்ளைபழஞ்சீலையினால் விரலைமிகப்பொதிந்து
சஞ்சலித்துமெத்தச் சடைத்திருக்கிறானே
கொஞ்சுங்கிளிமினாளுங் கூறினார்காணம்மானை
யென்றமொழிகேட்டு ஈனமாப்பேயனவன்
சென்றுமருமகனை சிக்கெனவேதானெடுத்து
தலைமறையும்மட்டும் அவன் தங்கத்துள்ளேமுக்கி
சிலைபோலேதூக்கித் திரும்பவெளியில்விட்டான்
விட்டபொழுதிலவன் மேனிவடிவழகும்
வட்டஅரிச்சந்திரன் போலேவடிவழகும்
வாவியுன்மேலேவளமாயெழுந்தருளும்
சூரியனைப்போலே துலங்கியதேயம்மானை
மாநிலத்திலில்லா வடிவுப்பிரகாசமதாய்
மேனியைப்பொன்னாக்கி வெகுமானஞ்செய்தவரை
பண்டுகையைவெட்டிப் பறித்தோமேயென்றுசொல்லி
அன்றவன்தன்கையை அவதானமாக்கிகொண்டு
உன்னிஒருமந்திரத்தை உச்சரித்தவேளையிலே
முன்னதுபோல்கையும் முளைத்ததுவே அம்மானை
பேய்க்குணத்தைமாற்றி பெருமபினாங்கள்கேடாமல்
கைபிடித்தபெண்ணும் கனவரியசாலையும்
மெய்யுடையமன்னவனை வெகுமானமாகவேதான்
மாணிக்கமானநல்ல வர்ணமணிப்பெட்டகமும்
தாணிக்கமானவரிச்சாலையும் உள்ளேவைத்து
நல்லபுகழ்மன்னன் மாமனுமைத்தொழுது
நல்லவளமாகவும்நான் நாட்டிலேபோவதற்கு
அந்தமொழிகேட்டு அம்மலையில்பேயனவன்
எந்தவகைஉங்களிரு பேர்க்குமேனுமென்றான்
ஆவலுடன்பொன்னுடைமை ஆறுடைமையில்லாமல்
சாவலுடன்எந்தனுக்குத் தானேபோதுமென்றுரைத்தான்
ஊருக்குப்போய்உங்களுக்கு ஓலையிட்டநேரமதில்
வாருமென்றுசொல்லி வழிகொண்டாரம்மானை
பொன்னுந்தலைமீதில் பெட்டகத்தையுமெடுத்து
கண்ணிமைக்குமுன்னே கடியதாயிருபேரும்

இந்திரமாஜாலமெடுத்துச் சடுதியிலே
பொந்துமலையும் பலவனங்களும்கடந்து
ஆழ்ந்தவிருள்நீங்கி சூரியனார்தோன்றுமுன்னே
விரைந்துகடியதாய் மினுமினுத்தான் பட்டணத்தில்
வந்தார்கள்மின்னுமுடி வாழுரசன்முன்பதிலே
வந்தமருமகனை வாழுரசன் கண்டபின்பு
சிந்தைமகிழ்ந்து சிரித்துக்கலகலெனவே
சச்சந்தமாலை அந்த தன்மருமகன் தனையும்
இச்சையுடன் கூட்டி யிலங்குமணி மாலையவள்
நன்றாகவந்தபின்பு நாகமணிமாலையவள்
கண்டுபாதம்பணிந்து காவலனைக்கைத்தொழுது
அந்தஊர்தனிலுள்ள ஆடவரும்மாதர்களும்
வந்தவர்களெல்லாம் வளமாய்உபசரித்து
ஈனகிரியில்எவராகிலும் போனவர்கள்
போனவர்கள்மீள பிழைத்துவரக்காணாது
எதுபோலாச்சுதிவன் செய்தவீரியந்தான்
பூதலத்தில்முன்னாளில் பொன்னுமுடிபாண்டியனும்
தேவிதலைவலிதான் தீரவேவேணுமென்று
காவில்புலிப்பால் கறந்துவரச்சொன்னதற்கு
அரியோன்திருவருளால் அய்யனார்முன்னாளில்
வரிப்புலியும்பிடித்து வாய்த்தகுட்டியுமெடுத்து
சிலையழகன்நன்றாக தெய்வமுடிபாண்டியன்முன்
மலைப்புலிகொண்ட அன்ன மதுரைதன்னில்வந்தாப்போல்
சாவலுடன்பொன்னதுவுந் தங்கமணிபெட்டகமும்
ஆவலுடன்கொண்டுவந்தான் ஆள்வீரனென்பாரும்
குறளிவித்தையுண்டுஇவன் கையில்யென்பாரும்
உலகுதன்னிலிப்படிதான் ஒருவருண்டோவென்பாரும்
பட்டும்பணியும் பலவரிசைசெய்பாரும்
கொட்டுமுரசதிரக் கூடிவந்துபார்ப்பாரும்
வட்டமதாய்கூடி வளைந்துநின்றுபார்ப்பாரும்
எட்டுத்தெருவும்இடம் கிடையாதென்பாரும்
சோலைக்கிளிமாதர் சுருள்கள்கொடுப்பாரும்
மாலைப்பதக்கம் மணிமார்பிலிடுவாரும்
சங்கீதமானபொன்னின் சங்கையுள்ளமன்னனுக்கு
முன்கைமுதாரியுடன் முத்துவடமீவாரும்
தீட்டும்புகழுடைய தீர்க்கமுள்ளமன்னனுக்கு
வீட்டுக்குவீடு விருந்துகொடுப்பாரும்
கள்ளவிழிமடவார் கண்டுமையல்கொண்டேங்கி
வள்ளகுழலார்கள் மயங்கிடுவார்கள்சிலபேர்
சோலையிளங்கிளிபோல் தோகைமடவார்சிலபேர்
மாலையிடாரோநம்மை மன்னவனென்பார்சிலபேர்
ஆரமுடைமார்பும்அணி தனமுந்தாவெனுங்கே



சேரநலம்பாராட்டி சேரானோவென்பாரும்
மாமோகந்திர மருவிவிளையாடிநம்மை
[illegible]மாகவந்து தருவானோவென்பாரும்
சேரத்தனமின்னார்கள் செருமிவளைந்திவனை
பார்த்தவர்கள் ஆவி பறிக்கவந்தானென்பாரும்
சிவகனோநான்முகனோ தேவேந்திரன்தானோ
கான்முகனோசூரியனோ சந்திரனோஎன்பாரும்
தான்மயங்கிநம்மை சருவிவிளையாடாமல்
காமிசிங்கிபூட்டிநம்மை கண்ணிட்டானென்பாரும்
வண்டமிழ்சேர்மன்னன் வடிவுபிரகாசமதாய்
கண்டுபெருமூச்செறிந்து காதல்கொண்டுநிற்பாரும்
இப்படியேமின்னார் இவன் தனக்கங்கேமயங்கி
நற்புடையமின்னார் நடுநடுக்கமும்தீர்ந்து
மின்னுமுடிசூடும்நல்ல வேந்தர்பெருமாளவனும்
மன்னர்பெருமாள் மருமகனாரைநோக்கி
சொல்லுவான்வார்த்தைஒன்று சொற்பெரியமன்னனுடன்
கல்லுவரமான கானமலைச்சோலையிலே
ஆனைமதம்பொழியும் அடவிமலைச்சோலையிலே
போனவிடத்திலுமக்கு பெண்ணுமிந்தபெட்டகமும்
ஈனன் ஈனப்பேச்சி யிருந்தமலைக்குமட்டில்
வந்தவகையேதுமக்கு மாப்பிள்ளைநீர்சொல்லுமென்றார்
அந்தமொழிகேட்டு அரியபுசம்மன்னவனும்
மாமனார்கேட்க மருமகனாரேதுசொல்வார்
ஏதுச்சொல்லப்போறேன்நான் ஈனமலைபேயனுடன்
சேதப்படுத்தாமல்அந்த சேயிழையைக்கொண்டுவந்து
பத்தாளுப்பள்ளமுள்ள பாதாளக்கலப்புடையில்
வைத்தான் இவளை வதைகள்செய்யவேணுமென்று
அப்போதுநானும் அவர்க்குமுன்னேசென்றொளித்து
தப்பாமல்வெட்டிஅவன் தலையையும்அங்கேஜெயித்தேன்
பேயன் உயிர்மடிந்தான் பேச்சிதம்பி ஓடிவிட்டான்
வாசலுக்குள்ளிவளும் வந்துவிழுந்தென்காலில்
பொன்னின்முடிமன்னவரே பூவுலகிலும்மோடே
என்னைக்கரையேற்றுமென்று சொல்லிதாள்விழுந்தாள்
ஆனதினால்நானுமிந்த ஆயிழையைக்கூட்டி
கட்டாகப்பேயனுட கலப்புடையைப்பார்க்கையிலே
பெட்டகமும்பொன்னும் புடைக்குள்இருந்ததுக்காண்
சும்மாவுமவாராது திரவியங்கள்ஆனதுதான்
அம்மானார்தந்தமக்கு ஆகுமென்றுநானெடுத்தேன்
கொண்டுவந்தேனிந்தவகை கொப்பனவேதானுரைத்தான்
கேட்டபின்அரசன்தானும் கிருபையாயிருந்துரைப்பான்
தாட்டிமைஉமைப்போல் யாரும்சமர்த்தரைகாணேனென
வாட்டமொன்றில்லையெந்தன் மகளுடன்மகளும்வந்தாள்

நாட்டமாய்க்கூடவைத்து நடத்துவீரென்றான்மன்னன்
மருமகனுந்தமக்கு மக்களிருபெண்களுக்கும்
திருமணந்துலைத்து சிறப்பாய் அணிபூட்டி
பெற்றமகள்தனிலும் பிறகுவந்தபெண்மகளுக்கு
உற்றஅணிகளது ஒட்டிரெட்டியாய்ப்பூட்டி
பந்தலிட்டுநல்லபல வாத்தியங்கள்முழங்க
சந்தோசமாகநல்ல சடங்குமிகுதிசெய்து
மலையிலிருந்துவந்த வாழ்மயிலாள்தந்தையும்
தலையினெழுத்தாலே தனமகளெய்தேறியவனும்
சலியாமல்மன்னவனும் தாரணியோர்களறிய
கலியாணமும்முடித்து கைப்பிடித்துத்தான்கொடுத்து
அமுதுகறிசோறுபடக்காயும் வெற்றிலையும்
குமுதமொழியினும் கொற்றவருந்தான்பொசித்து
பட்டணத்திலுள்ள பலபேர்கள்தங்களுக்கும்
கட்டாகநல்ல கறிசோறுதான்கொடுத்து
நல்லபடியாக நடந்துவரும்வேளையிலே
வல்லபுகழ்மன்னனந்த மாமனாரைத்தொழுது
யாருக்கும்நல்லபுகழானவனே யென்னுடைய
ஊருக்குப்போகஎனக்கு உத்தரவுவேணுமென்றார்
சொன்னமொழிகேட்டு சொல்பெரியமன்னவனும்
மின்னும்நவரத்தினங்கள் வேண்டியதெல்லாம்கொடுத்து
கொடுத்துவெகுதூரம்வந்து கொலுவாய்வழிஅனுப்பி
எடுத்துமகளைமுகர்ந்து இங்கிதமாய்வார்த்தைசொல்லி
கோமான்திருவருளால் குறைகள்ஒன்றும்வாராமல்
சீமானேஉனது சீமைக்குப்போய்வாருமென்று
ஏத்தரியமன்னன் இவர்கள்மூவர்களையும்
சாத்திரையும்சொல்லி அவர் தங்களையும்போகவிட்டு
பண்டுபோல்மன்னன் பதியில்வந்தாரம்மானை
மன்னுபுகழ்மன்னவரும் மாதரிருபேரும்
இட்டமாய்அங்கோரிடர்கூருவாராமல்
பெட்டகமும்கொண்டுவழி போயினார்காணம்மானை
உன்னிஒருமந்திரத்தை உச்சரித்தவேளையிலே
பன்னிரண்டுநாள்பயணமும் ஒருநாழிகையிலே
மங்கையருந்தாமும் வழியில்ஒருநாழிகையில்
தங்காமலவந்தார்கள் சம்பந்தமாநகரில்

## மங்கையர்க்கு மர்ம முரைத்தல்

சம்பந்தநகரில்வந்து தான்நகர்விடியுமுன்னே
முன்வார்த்தையெல்லாம் மொய்குழலார்க்குச்செப்பி
செம்மந்தஇசங்குமுள் செடிக்குள் ஒளித்துவைத்த
சம்பந்தஆமைக்கூட்டின் சட்டையையெடுத்துவைத்தான்



ஆமையுடன்சட்டை அரிவையர்கள்முன்புவைத்து
தாழ்மையுடன்வார்த்தை தானுரைத்தாரம்மானை
பெண்சுருபமாயிந்த பூதலத்திலுள்ளவர்கள்
என்சுருபம்கண்டவர்கள் இல்லையிந்தசீமையிலே
இருபேருநீங்கள் என்சுருபம்கண்டதல்லால்
ஒருபேருமென்சொருபம் உலகுதன்னில்கண்டதில்லை
தேனே அருசுவையே தெள்ளமுதேசீராசே
மானேமரகதமே வஞ்சியர்க்கெல்லாம்அரசே
கன்னல்கரும்பே கனகமணிரெத்தினமே
வர்ணவரிக்குயிலே வயிரவைடூரியமே
பொன்னே அரும்பொருளே பூவின்திருமணமே
முல்லைநகையாரே முன்னடந்தகாரணங்கள்
சொல்லத்தொலையாது தோகையரேஉங்களுடன்
மடக்கொடியேயென்சொருபம் மனிதர்க்குககாட்டாமல்
அடக்கமாகத்தான் ஆமைக்கூட்டிலிருந்தேன்
பொங்குகடல்சூழலகில் பூதலத்திலுள்ளவர்கள்
இங்கிருக்கும்பேரொருவர் என்சுருபம்கண்டதில்லை
அடக்கமாய்நீங்கள் அறிந்தகருமங்களெல்லாம்
உங்கள்மனதில் உடனறிந்தகாரியத்தை
எங்கும்உரையாதிருங்கோ என்றவரைஆணைகொண்டு
காவலன்பின்னுமந்த காரிகைமார்களோடே
ஆவலுடன்சொல்வான் அடக்கமுடன்ஒருவார்த்தை
முன்னேஒருபெண் முடித்திருப்பதுண்டுஇங்கே
அன்னைபிதாவும்இந்த அவனிதனிலுள்ளவரும்
ஆமைஉருவென்று அறிவார்களல்லாமல்
வாணமையாயெந்தன் வளமைவளமானதெல்லாம்
இருபேரும்நீங்களென்சுருபம்கண்டதல்லால்
ஒருவருமெந்தன் உருவறியமாட்டார்கள்
பொய்கொண்டபேர்கள் பொருந்தாதுஎந்தனுக்கு
மெய்கண்டதாலே விளம்பினேனுங்களுடன்
நீங்களறிந்த நிலைமையுள்ளகாரியத்தை
பாங்காகவேறே பலபேர்களுக்கும்சொல்லாதீர்
என்றிவர்கள்தம்மை இருநயமாய்ஆணைகொண்டு
மன்னுபயில்மன்னன் மறுவார்த்தையேதுசொல்வான்
என்றுதெரியாதுகாண் எங்கள்மனையும்வளமும்
சொன்னாலும்நீங்கள் தொகுப்பறியமாட்டீரே
நாட்டுக்குளிந்த நகரானப்பட்டணத்தில்
வீட்டுக்கடையாளம் மேவக்கேள்மெல்லியரே
தெற்குத்தெருவதிலே தென்மேலமூலையிலே
நிற்கும்ஒருசெண்பகமும் நெடியமாவும்கமுகும்
மாதுளையும்வாழை வருக்கைப்பலாமரமும்

சீதளமாய்நிற்குமெந்தன் சீமானார்வாசலிலே
பேரீந்துகண்டுளங்கள் போனவாசலிலே
அருங்கயமானகிணறும் ஆடுதுலாவானதுவும்
முருங்கைமரமுமெங்கள் முற்றத்தில்நிற்கும்காண்
இந்தஅடையாளம் இலக்காகவேஇருக்கும்
அந்தவீட்டத்திலென்னை அவதானமாயெடுங்கோ
பாவையரேநீங்கள் பார்த்திருக்கஇப்போது
ஆமையின்கூட்டில் அகத்தேபுகுதுகிறேன்
புகுந்ததால்சடையாமல் பூவையரேஉங்கள்கையால்
ஏந்தியெடுத்தென்னை இதமாகஉம்தலைமேல்
வைத்துசுமந்தால் வழிசொல்வேன்உங்களுக்கு
மெத்தகனக்காது மேனியதுஎன்னுடம்பு
இயல்பாகவேமெத்த எடுக்கஇதமாயிருக்கும்
தலையிலிருந்துவழி தப்பாமல்நானுரைப்பேன்
கற்றபுகழாமையது கட்டாயுரைத்தபின்பு
உற்றபுகழ்மின்னார்கள் ஓமென்றுசம்மதித்து
சம்மதித்துமின்னார்கள் சத்தியமும்செய்தபின்பு
நன்மையுற்றதிண்புயத்தான் நாகமுனிவன்புதல்வன்
பூனைபுடைக்குள் புகுந்ததுப்போலவனும்
ஆனைமுகனருளால் ஆமைக்கூட்டில்புகுந்தான்
மட்டில்லாதவனும்பெரு மன்னவன்விட்டுவிட்ட
விடுகுறையாலிவன் அருகிருந்தாமையின்
சட்டையானதில்அன்று தரித்தனனகாணம்மானை
வாக்கினல்சிவ மோக்ஷம்சயவும்
வாண்மையே கருமங்கள்நீங்கவும்
போக்கவேணும் கொடுவினை அன்றுதான்
பூவில்செய்த பிழையதுதீரவே
ஊக்கமாகிய ஆமையின்சட்டையிலே
அன்றவனுங்காண் அகம்புகுந்தானென்றே

## தன்னில்லம்சேருதல்

உச்சந்தமாய்கூட்டின் உள்ளேபுகுந்தபின்பு
சச்சந்தமாலையந்த தங்கப்பெட்டகமெடுத்தாள்
வாகுபெறுஈஸ்பரனார் மலர்த்தாள்தனைத்தொழுது
நாகமணிமாலைஅந்த நல்லாமையையெடுத்தாள்
அன்னமெனவேநடந்து அரிவையிருபேரும்
முன்னேஒருபெண்முதுகில் வைத்தவாறதுபோல்
தான்சுமந்தாப்போலே தையலிருபேரும்
கோன்சுமந்தநல்லதிருக் கென்னைமுழுதனவே
இலைமலையில்செய்தபிழை இடர்தீரவேணுமென்று



தலைமீதில்வைத்தவர்கள் தான்சுமந்தாரம்மானை
எடுத்துசுமந்திங் கிருபேருமாகவேதான்
அடுத்தவர்களுக்குஆமை அரும்பாதைச்சொல்ல
முன்னேநெடுங்கதையாய் மூன்னோர்கள்சொற்கேட்டு
இன்னுளிலிக்கதையை எழுதிஅம்மானைகூற
பொன்காத்தானிக்கதையைப் பொருளுரைத்தவாறதுபோல்
கண்பார்த்துஆமையரும் கன்னியருக்குப்பாதைசொல்ல
சொன்னபொழுதேஅவர்கள் சொன்னலக்குத்தப்பால்
மன்னர்புகழாமை மனையில்வந்தாரம்மானை

## வேறுசந்தம்

வந்தனன் ஆமை மன்னன் மனைதனில்ஆசையோடே
தந்தைதாய்முன்பில்வந்து தாளில்தொழுதப்போதில்
வந்தேனென் உனக்குநல்ல மருமகள்தனையும்கொண்டு
விந்தையாய்அவரைஅங்கே வீட்டுக்குள்வருத்துமென்றான்
அந்தமொழிகேட்டு அபிராமவல்லியவள்
சிந்தையுற்றுவார்த்தைஒன்று செப்புவாளப்போது
முன்னேமுடித்தபெண்ணை முகம்பாராமல்திரிந்தாய்
இன்னமிந்தப்பெண்பாவம் ஏற்கவோநீபாவி
தாருக்குமாறுகச் சப்பாணிபோல்திரிந்து
போறவிடமெல்லாம்நீ பெண்கொண்டுவாராயே
மெய்வருந்திநீயுமிந்த வீடுமனைபாராமல்
கைமருந்தைப்போட்டிவரைக் கன்னமிட்டுவந்தாயோ
ஆளுக்கழியானுக்கு ஆக்கிவிடுவோமெனவே
ஏழைசிறுக்கியிவ ளெங்கிருந்துஇங்குவந்தாள்
அபிராமிசொல்லும் அழிவார்த்தை ஆனசெல்லாம்
விதவிதமாய்ப்பெண்கள் விடமாய்க்கூட்டாமல்
இருக்கும்பொழுதிந்த ஏற்றபுகழாமையரும்
உருக்கமாய்வார்த்தை ஒருசகாமலைதானவரும்
தேன்போலேவார்த்தை சிறப்பாகவேஅவனும்
தான்பாகவே அவனுந் தாயார்தனைத்தொழுது
ஆசாரவார்த்தை ஆமைகூறுவாலவனும்
தாயாரைநோக்கிஅவன் சாற்றுவான்ஒருவார்த்தை
அத்தனருளாதுலகை ஆளரசனிடத்தில்
கொற்றவனார்முன்பில் குணமாகவேயெனையும்
அன்னம்போலவேயெனை அவதானமாகவேநீ
வர்ணமயிலனைய மாதாவேயன்தாயே
என்னையெடுத்துதன் தலையிலேற்றிச்சுமந்துகொண்டு
சன்னமொழிசொல்லி சமாதானம்பேசிவிட்ட
சேர்ந்தபுகழ்வளருந் தேசம்அரசாளுகின்ற
வேந்தன்முன்பிலென்னை விரயவைத்துவாருமென்றார்
அந்தமொழிகேட்டபிராமவல்லியவள்

சிந்தைசடைத்து அவள் தீப்போல்விழிசிவந்து
முந்தஒருவார்த்தை மொழிந்தாள்காணம்மானை
பண்டுஒருசுமைதான் பந்தல்மட்டும்நான் சுமந்தேன்
இன்றுசுமையென் தலைமேல் ஏற்றுகிறாய்நீயெனவே
அன்னஉரைக்க அந்த ஆமையருமேதுசொல்வான்
என்னையுமுன் அம்பேநீ யெத்தனைநாள் சுமந்தாய்
ஈரஞ்சுமாதம் யென்னையுமுன் உந்தியிலே
பாரஞ்சுமந்துவெகு பாடுபட்டுநீமேழவைத்தாய்
அன்றுநீசுமந்த அருஞ்சுமையேயல்லாமல்
இந்தஒருசுமைதான் இனியில்லைகாண் மாதாவே
செப்புமொழிகேட்டு சேயிழையுமேதுசொல்வாள்
ஒப்புகளும்கதையுரைத்தாய உண்மையுள்ளவென்மகனே
ஏற்றபுகழாயெடுத்துரைத்தாய்நீ யென் மகனே
வார்த்தையினாலென்னை மழுப்பாதேயென்றுரைத்தாள்
மண்ணுலகிலுள்ள மனிதர்சிலபேர்நகைக்க
உன்னைச்சுமக்கவென் ஊழ்விதிதானெனவே
தாட்டிமையாய் ஆமையாரைத் தன்தலைமேலெடுத்து
பெட்டகமுமெடுத்து வெளிபோயினார்காணம்மானை
பரிந்துஉலகிலுள்ளோர் பார்த்துமிகவேநகைக்க
விரைந்துகடிதாய்வந்து மெல்லியபிராமவல்லி
கண்டவர்களெல்லாம் கலியுகமாகப்பார்க்க
கொண்டுபுறப்பட்டாள் கோலநெடுந்தெருவிலே
தெருவில்நடந்தவர்கள் சீர்வேந்தன்முன்பதிலே
அதில்வரும்போதில் அங்கிருக்கும்பேர்கள்சொல்வார்
இந்தாபாருங்கோ இதுவும்நல்லகோலமதாம்
வலைதனிலேபட்டகிந்த வல்லாமைதன்னையிவள்
தலைதனிலேவைத்தவளுந் தான்சுமந்துநடமருகே
எங்கிருந்து இங்கேயிவள வாராள்பேச்சியென்று
அங்கிருக்கும்பேர்கள் அனைவோருமிப்படியே
சொல்லி அனைவோருஞ் சுகமாயிருக்கையிலே
வல்லிஅபிராமி அந்த வாழ்பெரிய ஆமையரை
மண்டலத்தையாளுகின்ற வான்பெரியமன்னவர்முன்
கொண்டுவந்துதானிறக்கி கோதையரும் வைத்தனராம்
வைத்தபோது அந்த வாழாசன்மனருசலித்து
மகளாலேதத்தும் வினையாளியவனுடைய
குட்சம்அபியாமல்நாமள் உற்றமொழி உரைத்ததெல்லாம்
ஊழ்விதியின்படியாலே மைதார்க்குழலாள்என்
மகளுக்குமாலையிட நான்வந்தேனென்றான்
என்றுமன்னனிருந்த வந்தநாள்தன்னிலே
நன்றுமன்று இது நன்மகளார்பழவினையால்
இன்றுகொண்டிதையிங்கு வந்தாரென்றார்



என்றுசடைத்துமன மெண்ணுகதெண்ணியெண்ணி
கன்றுமுகம்வாடி கவிழ்ந்து தலைகுனிந்து
தண்டமிழ்நூல் ஆசாரயுஞ் சம்பந்தராசனவன்
மண்டலத்தோர்காண முகம்வாடியிருக்கையிலே
ஆமையார்தன்னை அபிராமி அங்கிருத்தி
தாமக்குழலாளுந் தன்மனையில்போனபின்பு
சுற்றிவளைந்து துரைமக்கள்தானிருக்கும்
பத்திபத்தியாக நல்லபாளையககாரிருக்க
ஆனைகுதிரையணி யணியாகநெருங்க
சேனைத்தலைவர்செருமி வளைந்தங்குநிற்க
உம்பளக்காரர்களும் ஊழியஞ்செய்யும்பேரும்
கம்பளதொட்டியருங் காலாள்களானவரும்
ஆளும்பலஊர் அரசர்களுந்தானிருக்க
வாளும்பரிசை வல்லாயுதம்நெருங்க
வில்லணியும்நல்ல வாளணியும்வேந்தர்
துரைதானிகளும் வல்லணியாய்சூழ்ந்து
மகிழ்ந்து அந்நேரந்தனில் கூறுவான் ஆமையவனும்
மன்னன் திருமுன்பில் வளைந்திருந்தபேர்காண்
நாட்டமுடனே அவனும்நல்ல மணிப்பெட்டகத்தை
பூட்டைதிறந்தவனும் பெட்டகத்திலுள்ளிருந்த
வாய்த்ததளை சங்கிலியும் வலுசாவுசங்கிலியும்
ஏற்றபுகழாகஈனன் வரிச்சாவலையும்
இந்தவகைமூன்றும் எடுத்தவன் தனகையாலே
சிந்தைமகிழ்ந்தெல்லோரும் செருமிவளைந்தேபார்க்க
விரயமணிமார்பன் மேவலரைவெற்றிகொண்ட
அரசனிருக்கும்அழகிய சிம்மாசனத்தில்
வானவர்கள்மெச்சு மரகதசிம்மாசனத்தில்
தானவனும்வைத்து சரியிருப்பாகவேதான்
தேறுபுகழ்மன்னனுட சிம்மாசனமதிலே
கூடவந்துதானும் கொலுவிருந்தானம்மானை
அரியபுகழ்மன்னனுட ஆசனத்திலேறியவன்
சரியாகவேகூடி தானிருக்கும்வேளையிலே
கண்டவரிச்சாவல் கூவுதற்குவேளையதாய்
ஆண்டுவருஷம் நிறைந்தது அந்நேரம்
வருஷம்நிறைந்து ஆண்டு வந்ததெனவே அறிந்து
அரியதிருச்சாவல் ஆரவாரத்துடனே
உச்சிதமாய்ச்சாவல் உடனேயிறகுதட்டி
கூக்கூக்கூவெனவே கூவியதே அம்மானை
வன்னமுத்துச்சாவலுடன் வாயிலிருந்துசொரியும்
சன்னமுத்துநற்பவளந் தங்கநவரெத்தினமும்
நாகமணிமுத்துடனே நல்லவைடூரியமும்

வாகுபெரும்பச்சை மரகதம்கோமேதகமும்
ஆணிக்கமான அளவுவரிச்சாவலுடன்
மெய்ஞ்ஞானஈஸ்பரனார் விமலன் திருவருளால்
சிம்மாசனத்தில் சிறப்பாகவேநிறைய
மாரிசொரிந்தாப்போல் வரிச்சாவல்வாயாலே
சோராமல்சொரிந்ததுவே சொற்சந்தம் அம்மானை

## அரசனுடன் வாதிடல்

இவ்வகைசொரிந்தப்போது இருந்தவரெல்லாம்மெய்த்து
செவ்வகையிவன் தானிப்போ தேவனோதிருமால்தானோ
எவ்வகையாய்நாமள் இவன்தன்னை அறிவோமென்ன
அவ்வகை அறியாவண்ணம் அமைச்சனார்திகைக்கலுற்றார்
திகைத்திருந்தமன்னவர்க்கு செப்புவார்மந்திரியார்
வகுத்தபடியால்நமக்கு வந்ததினாலென் செயலாம்
பாரிலரசன் பரிகளமாயிப்போது
வாரியெடுத்தரசன் வரியசாவலானதையும்
தன்வசமாக அரசன் சங்கிலியைகேட்டளவில்
நல்வசமானபுகழ் நாகமுனிவன்புதல்வன்
சொல்லுவான்வார்த்தையொன்றுசொற்பெரியமன்னனுடன்
வெல்லும்புகழுடைய வெற்றிமுடிமன்னவனே
சாவல்நவரெத்தினமும் தங்கமணிப்பெட்டகமும்
ஆவலுடனுமக்குஆக்கிவைத்தேன் கண்டீரோ
வீரம்அறியவென்னை வேண்டிவரச்சொன்னதினால்
பாரறியவேண்டிஉந்தன் பட்டணத்திலிங்குவந்தேன்
கொண்டுவந்ததெல்லாம்நீ கொள்ளைசெய்யவென்று
வேணுமென்றால்ஒன்றும் கிடையாதுகண்டீரோ
கள்ளத்தனமாககலியாணம் செய்வமென்று
உள்ளப்பொருளெல்லாம் உடன்பறிக்கவேதுணிந்தீர்
தாரேன்உமக்கதுவுஞ் சங்கிலிநமக்கு
வருகுதுகாண்உமக்கு வரிச்சாவலானதுவும்
சிந்தையுடன்ஓர்வார்த்தை செப்பக்கேள்மன்னவனே
மாங்கிலியம்பூட்டி மணஞ்செய்வதில்லையென்றும்
சங்கிலிகாணுமக்கு தாறதில்லையென்றதைத்தான்
முழப்பமதாயெனனோடெதிர்த்துசண்டையிடுவீராகில்
வழக்காலுமைவிட மாட்டேன்காண் கண்டீரோ
செய்யும்உரைகேட்டோர் சிரித்துக்கலகலென
கைவிரலைமூக்கில்வைத்துக் கொண்டுநின்றபேர்கள்சொல்வார்
ஆமையல்லவேயிவனும் ஆண்மையுள்ளவீரனென்பார்
வாண்மையுள்ளான்தன்னை வம்புசொலலாதேயுங்கோ
எட்டுக்குளந்தனிலும் மெங்கும்தண்ணீர்காட்டி
தொட்டவழக்கைவிடான் தோற்பதுங்காணாது



...MORE, MADRAS-600 ...
102165
KU, A
N56

சரியிருப்பாய்மன்னன் தன்னோடிருந்தவர்தான்
காண்டகள்வனிவன் வம்பனென்றுசொல்வார்கள்
படியேசொல்லி அனைபேரும்நிற்கையிலே
பெரியமன்னனுடன் செய்யும்புகழ்மந்திரிமார்
வாய்பொத்திதெண்டனிட்டு வாழரசன் தன்னோடு
செய்புத்தியாகவேதான் செப்புவார்மந்திரிமார்
தேறிநீர்முன்னே மணஞ்செய்வோமென்றவார்த்தை
மாறினால்ஈஸ்பரர்க்கும் வானவர்க்குமேற்காது
ஏழைக்குநல்லமொழி சொல்லிமறுத்ததில்லை
சூழும்வெகுபாவஞ் தோசமதுதீராது
தாழாமலேயிவனைத் தான்வெருட்டிவிட்டாலும்
பாழாகிஉம்முடைய பட்டணத்தில்தீங்குவரும்
உண்மைஒருவனுக்கு உறுதிசொன்னதுமறந்தால்
நன்மைகிடையாதவர்க்கு நாதனருள்கிட்டாது
கிட்டாதுமோச்சகதி கீழ்நரகத்தில்வீழ்வார்
தட்டாமல்பேறுபெற்றோர் தன்பெருமைகேட்டிலையோ
பூர்வத்தினால்நல்லபுகழ் பெரியமன்னவனே
பேறுபெற்றபேர்கள் பெருமையின்னம்சொல்லுகிறேன்
பண்டுஒருபுதுமை பாண்டிவளநாட்டில்
வெற்றியுள்ளமன்னன் வீரகுபேந்திரன்தான்
மறுத்துமொழிசொல்லாமல் வாக்கொன்றுசொன்னதினால்
குறத்தலையனுக்கொருபெண் குன்றாமலீந்ததினால்
வென்றிஅரிச்சந்திரனும் மெய்யொன்றுசொன்னதினால்
குன்றாமல்தன்நாட்டை கோசிகருக்குஈந்ததிலையோ
உள்ளம்சோதிக்கவென்ன உண்ணவந்த ஆண்டார்க்கு
பிள்ளை அறுத்துகறிசமைத்து பேணிகொடுக்கலையோ
தாய்க்குத் திரையாக்கி தாரமதைஈடுசெய்து [லையோ
வெய்யோன்பார்த்தும் பொறுத்தும்வெண்சொர்க்கம் ஈந்தி
ப்படியல்லவோபெரியவர்கள் ஈசனருள்பெற்றார்கள்
ப்படியும்மாதை மணமீந்துகொடுங்காணிவர்க்கு
ப்பறைகள்சொன்னால் தவப்பேறுகிட்டாது
இங்கேபிறந்தவர்கள் இறப்பதுவும் நிச்சயங்காண்
அங்கேபரகதிக்கு ஆகும்வழிதேடுமையா
வீராஉன்கீர்த்தியிந்த மேதினியெங்கும்விளங்க
மாறாமல்பெண்ணை மணம்செய்வோமென்றார்மந்திரிமார்
மணமதுமுடிக்கவென்று மந்திரிமார்கள்செப்ப
குணமதாய்யெனதுநல்ல கொற்றவன்தேர்ந்துநன்றாய்
சினமதில்கொப்புண்டாக்கி தேசத்தில்அறிக்கைசெய்து
கணபதிதனைத்தொழுது காவணமிட்டான்மன்னன்
காவணங்களிட்டு கதலிக்குலைநிறுத்தி
பூமணக்குமாலைகளும் பொற்சரிகையுந்தூக்கி
பட்டுவிதானங்களும் பலவகையாயணித்து

கொட்டுமுரசதிர கொம்புகளுந்தான்முழங்க
மத்தாளம்தம்பூராக்கள் வாத்தியங்கள தான்முழங்க
கைத்தாளநட்டுவர்கள் கையில்வட்டந்தான்பிடிக்க
ஆரவாரமாய்அரசர் துரைமக்கள்வர
சேரத்திரண்டு செருமிவளைந்துநிற்க
பட்டணத்திலுள்ள பலஜனங்களனைவரும்
வட்டக்கடல்போல வளைந்துசெருமிநிற்க
சேனைத்திடமண் திரைகடல்போல்முழங்க
ஆனைப்படைகள் அலங்காரமாகவர
ஒப்பிடித்துபெண் அந்த உள்ளறைக்குள்ளிருக்க
மாதரிருக்கஉள்ளறைக்குள் மங்கையர்கள்தன்னோடு
பேதையிளங்கன்னியர்கள் பெண்கள்சிலபேர்களவர
கூடிவளைந்துமின்னார் கொஞ்சிவிளையாடி
கட்டியர்கள்கூடி சென்றுவளைந்து செரும
கூடியேமின்னை ளிருந்துவிளையாடுவதை
கற்புடையமாதுநல்லாள் கன்னிசம்பந்தமாலை
வீறிட்டுமின்னாள் விளையாடும்பாவனையை
ஏறிட்டுப்பாராமல் இங்கிதங்கள் செய்யாமல்
வள்ளல்குழலாள் மனமேமிகவாடி
கள்ளத்தனமாககவிழ்ந்து கண்ணீரால்மெழுகி
தழுவிக்கொஞ்சினதை நல்லாளசம்பந்தமாலையவள்
ஒருவனுக்கும்தன்னுடைய உள்மயக்கம்சொல்லாமல்
அம்புவியில்நாளித்த ஆமையார்க்கோஎன்றுசொல்லி
விம்மிபெருமூச்செறிந்து மேனியெல்லாம் தள்ளாடி
தோழியர்கள்தன மடியில் துவண்டுறக்கம்செய்தாப்போல்
ஆளிலழுகி அயர்ந்துறங்கும்வேளையிலே
சம்பந்தராசனுட தங்கமணிமண்டபத்தில்
உம்மந்தமான சடங்குள்ளதெல்லாம்தான்முடித்து
அந்நேரம்மன்னர்கள் ஆரவாரத்துடனே
மன்னுபுகழாமையரை மாப்பிள்ளைகோலஞ்செய்து
கோலங்களசெய்துநல்ல கூண்டமணிமாலையிட்டு
ஏலங்குழலாள் இசைந்துகுரவையிட
வாத்தியங்கள்கொம்பு வகைவகையாய்த்தான்முழங்க
காட்சிவெகுவாக காவலனப்போது
முத்துவெடிமுழங்க கொடிவிருதுதான்சேரும்
பத்திபத்தியாகப் படைத்தலைவர்கள்தான்செரும
அபிராமவல்லியுட அரியகரையாளனுடன்
தவறுமலேஅவர்கள்தங்கள் மருவுஞ்சனமும்
ஆடல்பரியேறிநல்ல அன்னைபிதாமுன்வரவே
கூடிவரவேயிவர்கள் கோத்திரத்திலுள்ளவரும்
சித்திரக்கோகால்விட்டு தெருவீதியானதிலே
அஸ்திரவேல்விழியாள் அபிராமவல்லியவள்



பந்தங்களாச்சுப் பகல்வெற்றிதன்னுடனே
வந்தரசர்கோமான் மருமகனார்தந்தனையும்
வாலுருவுஞ்சோமனைப்போல மாப்பிள்ளையும்பின்வரவே
காலுநெடுந்தெருவும் நன்றாய்உலாவிவர
சித்திரமாய்நல்ல சிறந்தபுகழாமையரை
அத்திறவேல்மின்னார்கள் எல்லோருங்கொண்டாடி
மந்திரவாளுமிலங்க மாப்பிள்ளையை அந்நேரம்
கொந்தளமாயவர்கள் கொண்டுவந்தார்பநதலுக்குள்
பல்லக்கைவிட்டிறங்கி பந்தலுக்குள்வந்தபின்பு
முல்லைநகையாள் முழித்திளகியேசடைத்து
ஏதுபோலாச்சிநமக் கிந்தவிதியெனவே
மாதரெல்லாம்நம்மை வசையாகபேசுதற்கு
ஆமையர்க்குநம்மை அயன்விதித்தாரென்றுசொல்லி
தாமக்குழலனைய சம்பந்தமாலையவள்
தந்தையொடுதாயாருந் தன்னறியாமலவளும்
கஞ்சிக்குடித்து கண்ணுறங்கும்பேர்களைப்போல்
கஞ்சிகுடித்தவளும நடுங்கிவிட்டாளம்மானை

## மணப் பெண் நஞ்சுண்டிறத்தல்

உயிரதுமடிந்தசெய்தி உடனறியாதபேர்கள்
தைரியமாகநல்ல சடங்கதுசெய்வதற்கு
வைரமுத்திலங்குநல்ல மரகதம்போலொத்த
பைங்கிளியாள்தன்னை பந்தலில்வருத்துமென்றார்
என்றவார்த்தை இயம்பிடவே இயல்பானசேடியர்
சென்றந்தப்புரத்திலே சேயிழையாளவள்தான்
மன்றிலேமாது மடிந்துகிடப்பதை
கண்டுமாதர்காஞ் சென்னிகொட்டினார்
வலுவாய்உயிர்மடிந்த மங்கையரைக்கண்டுமின்னாள்
தலையிலடித்தவருந் தானழுதாரம்மானை
அபயமிட்டசத்தம் அறிந்துதவமாலையவள்
குய்யோமுறையென்றுசொல்லி கொம்பனையுமோடிவந்து
வந்துமகளைப்பார்த்து வாய்குழறிதான்விழுந்து
சிந்தைகலங்கியவள் சேர்ந்தமுகத்தோடறைந்து
பஞ்சிபோல்பின்னி பறிப்பாள்தலைமுடியை
வயிற்றிலடிப்பாள் விழுவாள்வண்ணமயிலாளே என்பாள்
பயித்தியங்கொண்டவள்போல் பரபரப்பாய்முழிப்பாள்
வலைபுகுந்தமான்போலே மங்கைதவமாலையவள்
ஆலையில்கரும்பதுபோல் ஆவியெல்லாம்தள்ளாடி
அய்யோமகளேயென்னை அகற்றிவிட்டாயெனவே
கையைமுகத்தோடறைந்து கவிழ்ந்துநிலத்தில்புரள்வாள்
பூங்குழலாள்கூந்தல் புழுதியின்மேல்தான்புரள

ஏங்கிவிழுவாளழுவாள் எங்கேபறப்போமென்பாள்
குவளைவிழியழகி கோதைதவமாலையவள்
மகளைவந்துசேர்த்தெடுத்து வாரிமுகத்தோடணைத்து
முத்துவாள்வாயை முகத்தைமுகத்தோடுவைத்து
குத்தியடித்தே அழுவாள் கூகூவெனவேஅலறி
பிடியேமடமயிலே பெண்ணமுதேசேயிழையே
மடியிலிருத்தி அவள் வாய்மொழியைக்கேட்பமென்று
நானழுதக்கண்ணீரை நன்றாகநீதுடைத்து
என்னருமைஅம்மே யென்மகளேகேளாயோ
ஒளியாமலென்னோடு உன் துயரம்சொல்லாமல்
ஐயோநீஉன்னுடைய ஆவியைவிட்டாய்மகளே
அன்னமேதேனே அமிர்தப்பசுங்கிளியே
உன்னைவிட்டுநானிங்கே ஒருநாழிகைப்பொழுது
கனிவாய்மொழியாளே கன்னமுதேஉன்னைவிட்டு
இனியாரைநம்பிநா னிங்கிருப்பேன்என்மகளே
காவிக்கருங்குழலே கலிங்கமுத்தேஒப்பினையே
பாவிநான்காண பலன்பெற்றேனில்லையையோ
கனிசேர்கருங்குழலில் நல்லமுகப்பல்லொளியும்
வழுவில்லாதேயிலங்கு மரகதமேநின்றிலங்க
பண்ணனையசொல்லாளே பாவினியேநானினிமேல்
என்றுதான் காண்பேன் இலங்குதவமாலையவள்
வாதாகளந்தனுட மகளோடேயென்னுடைய
நாக்கைப்பிடுங்கி நான் விடுவேனென்றுசொல்லி
அணியும்பொழுதவர்கள் சூழ்ந்துநின்றோர்தான்விலக்கி
வனிதமுடன்கைப்பிடித்து வாணுதலாளை இருத்தி
ஆசாரவார்த்தை அவரவரேபுத்திசொல்லி
தாயாரைஅங்கிருத்தி தந்தையர்க்குபுத்திசொல்லி
உம்மந்திரமாக உலகாளுவேந்தனென்ற
சம்பந்தருடனவர் தானிருக்கும்வேளையிலே
மன்னுபுகழ்மந்திரிமார் வந்தரசனைத்தொழுது
உகமுடித்தாப்போல் உலகாளுமன்னனேகேள்
மகள்மடிந்தாள்காணுமினி மந்திரிமார்உரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உரைகுழறியன்னவனும்
எரித்தமனமாகிமன்னன் எண்ணமெல்லாம்புண்ணாகி
ஏங்கிபரதவித்து எண்ணமுற்றுமீண்டும்சொல்வான்
தீங்குவந்தால்நாமினி செய்வதுவும்ஒன்றுமில்லை
ஆனாலும்ஈஸ்பரனார் மேலாணைமறவாதபடி
தேனுரையிந்த செகமேழுந்தானறிய
ஆமைக்குச்சொன்ன அதிகமொழிஆனதெல்லாம்
வாண்மையுடனுரைத்த வார்த்தைதவறாதபடி
செய்யசமைந்தேன் சிவன்தனக்குஏற்றதில்லை
அய்யோநான்பெற்ற அதிட்டமிதுவோவெனவே



நாட்டைஅரசாளுகின்ற நல்லபுகழ்மன்னவனும்
பூட்டறைக்குள்சென்று புகழ்மகளையெடுத்து
மகளையெடுத்துமன்னன் மடிமீதில்வைத்தவனும்
புகழாகமன்னன் புலம்பலுற்றானம்மானை
அன்னமேதேனே அமிர்தப்பசுங்கிளியே
கன்னலேயெந்தனிரு கண்மணியாய்வந்தவளே
பொன்னேபொருளேயென் புத்திரியாய்வந்தவளே
என்னைமறந்தெங்கேநீ யேகிவிட்டாயென்மகளே
தந்தைக்குநல்ல தவப்பேறுவேணுமினி
சிந்தைகுளிரநீதான் சிவகதியைத்தேடாமல்
இறந்தாய்நீயிப்போது என்னபலன்தானுனக்கு
சிறந்தபுகழானவளர் சீமைதனிலேஉனக்கு
மணக்கோலங்காண வகுத்தமணிபந்தலுக்குள்
பிணக்கோலமாகவும்நான் பெற்றவிதியித்தனையோ
நிறையோசைவாத்தியங்கள் நின்றதிருப்பந்தலுக்குள்
பறையோசைகேட்கவும்நான் பாவியும்நானன்றோ
வாரணம்போல்எந்தன் மகளேநானுந்தனுக்கு
காரணமேநானிந்த காட்சிகாண இருந்தேன்
பொன்னனைஈஸ்பரனார் பூமலர்பொற்பாதகதி
உன்னாலேமோட்சகதி உண்டாகுமென்றிருந்தேன்
புகழாகவேஉலகில் புண்ணியங்களானதெல்லாம்
மகளாலேநானும் வரம்பெறலாமென்றிருந்தேன்
வாக்குமாறாமலுன்னை மாலையணிஞ்செய்யுதற்கு
தாக்காகவென்னைத் தவம்பெறநீவொட்டாமல்
வஞ்சவினைநீக்கும் வரமொன்றுதேடாமல்
நஞ்சைகுடித்திறந்தாய் நன்மைவருமோமகளே
ஒன்றாகநின்றபொருள் உண்மைஅறிந்தேயிரங்கி
நன்றாகமோட்சகதி நன்மைதருமென்றிருந்தேன்
தட்டாதமோட்சம் தவப்பேறுகிடைத்தற்கு
வீட்டுதில்லையிப்போ விடுகுறைதானிருந்து
கல்லும்விசும்பும் கடல்கண்ட தட்டப்பாரையும்
எல்லாம்படைத்த இறைவனொருவரொழிய
மண்கொண்டபூவுலகில் மாயாலத்திலுள்ளவர்
கண்கண்டரூபமாயிந்த காட்சிகளெல்லாம் அழியும்
ஆவியுஞ்சொலலும் அழியாதொன்றேயென்று
பாவிமகளே பயமறியமாட்டாமல்
ஒருவனேஎவ்வுயிர்க்கும் உயிராகநின்றவர்தான்
மறைவாகவேயிருந்து மாயமாய்விளையாடுகின்ற
இறையவனேயென்று இரவாதிருப்பவர்கள்
பார்மேலேயிருந்து பரிமாணம்பார்ப்பதெல்லாம்
நீர்மேல்குமிழி நிச்சயித்துஎனமனதில்
மகள்மடிந்ததாலே மனக்கிலேசமில்லாமல்

தவமிழந்ததென்று தலையிலடித்தே அழுதான்
மெய்ப்புடையகற்புநிலை மேதினியில் மேவாமல்
இப்படிநீயிருந்ததினா லென்னபலன் அம்மா
முன்னாலேநான் மொழிந்தமொழிமாறாமல்
அன்னமேநான் அதியரசன்கீர்த்தியைப்போல்
வார்த்தைமாறாமலுன்னை மாலைமணஞ் சூட்டுதற்கு
ஊத்தையுறுகூட்டிலுன் உயிர்வைத்துபார்த்ததில்லையோ
கல்லழிந்துபோனாலும் காசினியில்உள்ளமட்டும்
சொல்லழியாதுவெகுநாள் சூரியனுருள்ளமட்டும்
புகழேநடக்க பொருந்தாமலுன்னுடைய
மகளேஉன்னுவிதன்னை வம்பில்மடிந்தாயெனவே
மாணிக்கமானமகா பொருளைத்தேடவென்றால்
ஏணிப்பளுதாயிருக்கும் வெகுதூரமானதா
யெட்டாததூரமிருக்கும் இறையோன் தனக்கு
தட்டாதமோட்சகதிதான் தருமென்றிருந்தேன்
என்றழுதுமன்னன் இருகண்ணால்நீர்சொரிய
மண்ணுலகிலுள்ளோர்மனம் உருகிப்பார்த்துநிற்க
மெலிவில்லாமலிருந்து மேதினியோர்தங்கள்முன்னே
கலியாணம்செய்யவந்த காவலன் தன்தனக்கு
மணமானபெண்ணை மணம்செய்யவந்தவர்க்கு
பிணமானதைமுடிக்க போறோமேநாமென்று
நெஞ்சலுத்துமன்னன் தியங்கிமயங்கினது
சஞ்சலித்துமெத்தத் தடுமாறும்வேளையிலே
அந்நேரம்தன்னில் ஆமையுருவானவனும்
வர்ணப்பலகையின்மேல் மாப்பிள்ளையாயிருந்து
சகலகலைகற்ற முனிவன்புத்திரனும்
அகதிமலிந்துவாடும் அரசன்முன்சொல்லவென்று
பலகைவிட்டிறங்கி அரசனுடமுன் வந்து
தணிப்பான் அக்கினியை தண்ணீர்விட்டாற்றுவதுபோல்
மாமன்மனந்தேறி மருமகனுரைப்போது
ஆமையுருவானோன் அறிவுபலசெப்பலுற்றான்
நன்றாய்ச்சடைத்தீரே நல்லபுகழ் மன்னவனே
இன்றிருந்தோர்நாளை யிறவாதிருப்பாரோ
அண்டர்பிரானை ஆதிசிவனே அல்லால்
உண்டோஉலகில் உயிரழியாதபேர்கள்
நன்மைவந்ததானால் நாமனுபவித்தால்
தீமைவந்தால்தியங்குவார்கள் உண்டோதான்வேறே
முன்னிருந்துமாண்டுமுடிந்த பலபேர்கள்மெத்த
இன்னம்பிறப்போர் இறப்பதுவும்நிச்சயங்காண்
உரைப்பாகவார்த்தை வெகுஊர்கருமம்பேசுவது
மறப்பாவைசூத்திரங்காண் வல்லவனேபல்லுயிரும்
இடமாகவேஉலகில் சீவனுள்ளபல்லுயிரும்



உடல்கண்டிருந்ததல்லால் உயிர்கண்டிருந்ததில்லை
மறுகண்டபூவுலகில் மன்னவனேபல்லுயிரும்
உருகண்டதல்லாதே ஓசைகண்டதுண்டோகாண்
கசப்புமினிப்பும்புளிப்பும் காற்றும்வெயிலும்பனியும்
மசக்கிவரும்பிணிகள் வாராதோயாபேர்க்கும்
பேரிளமையின்பழுப்பும் பிணிநோவுசாக்காடும்
ஆருங்கருவில் அமைத்தபடியேவருங்காண்
வழுவில்லாமலுலகில் வாழலாமென்றாலு
மெழுகியவனால்வருங்கா ணிவ்வுலகில்யாபேருக்கும்
தானினைத்தவண்ணம் தவப்பேறுகிட்டாது
எண்ணாதீர்வீணில் இறந்தஉயிர்வந்ததுண்டோ
சீரானபூவுலகில் செல்விதன்னைபெற்றெடுத்து
ஆராரோவென்றிவளை ஆராட்டவில்லையோநீர்
பிறந்தவுடனிவளைப் பேசினீர்காண் ஆரெனவே
இறந்தவெறும்வுடக்கை யென்மகளென்றால்வருமோ
மாயவலைக்குள்மயங்கிது காணுந்தனுள்ளம்
காயம்உருகி கலங்கியது காணுந்தனுள்ளம்
பாசம்உருகி பதறுமலுந்தனக்கு
நாயனருள்தேட நல்லபுத்திவந்ததுகாண்
சவத்தைவிரும்பின சங்கடங்களில்லாமல்
சிவத்தைவிரும்பித் தேடினீர்புண்ணியனே
உறுதியாகச்சிவனை உண்மைகொண்டபேர்களுட
இருதயத்திலீஸ்பரனார் இருப்பதுநிச்சயந்தான
மங்கைபதியில்வாழும் அதியரசனனவனும்
அங்கவன்தான்சொன்ன அதிசயங்களானதுவே
அப்படிப்போலும்முடைய அஞ்சுபஞ்சாவும்பொருந்தி
கைப்பிடித்தநந்தமக்கு கட்டிபோதருகில்
சவமென்று சொல்லாமல் சங்கரனார்தன்னருளால்
சுகமென்றிவளைமணஞ்சூட்டுவிக்கவேணுமென்றார்
பொய்யாதவார்த்தை பிரமாணந்தப்பாமல்
வையகத்தில்மாலையிட்டு மன்னவனேதாருமென்றார்
மகளைமணமுடித்து மன்னவனே நீர்தருகில்
புகழ்மறவாதுஉந்தன் போதராவுதயபாது
உன்மனம்தேறி உடனேதருவீராகில்
சம்மதித்தானந்தம் குதர்க்கமில்லையென்றுரைத்தார்
சிரித்தவனறிந்துமெய்த்து செளமியாசனத்தைநீக்கி
வருத்தமேதுக்கிப்போ வரும்விதிவந்ததானால்
கருத்தழிந்தவரோயென் கைபிடித்தழைக்கவந்தார்
ஆமையார்மெத்த அவதாரங்களுரைக்க
மாமனையும்கூட்டி மணிப்பந்தலுக்குள்வந்தனராம்
வந்துமணிப்பந்தலுக்குள் வாத்தியங்கள்நின்றதிர
இந்துமுதலானை யெடுத்திருத்தினார்கள்

அணிந்தபணியுடனே ஆபரணங்களிலங்க
பணிந்துமடவார் செருமபாவையரையப்போது
மணிப்பலகைமேலேவைத்து மன்னனையுந்தேவியையுங்
களிப்பாய்உலகோர் கலியுகமாகப்பார்க்க
சலிப்பாய்மகளுக்கு சடங்குசெய்யவேணுமென்று
சேர்த்துமணிமார்போடே சென்றுமகளையெடுத்து
பார்த்தவர்கள்தானிரங்கப் பந்தலுக்குள்வந்தனராம்

## மங்கைக்கு உயிர் கொடுத்தல்

பந்தலுக்குள்ளே அந்தப் பாவுசேர்குழலினளை
விந்தையாயெடுத்துவந்து மெல்லியர்புடைசூழ
கொந்தளத்தரசர்கோமான் குவலயத்தோர்கள்மொய்க்க
சாந்தமாய்பலகைமீதில் தான்வைத்துசடங்குசெய்தார்
செய்தான்சடங்குகள்தான் சேயிழைக்குமன்னனுக்கும்
மெய்ப்பாகவாத்தியங்கள் மேளதாளமுழங்க
முழங்கபலமேளம் வெடியிடிபோலேமுழங்க
களங்கமடவார்கள்சிலர் கன்னியர்கள்தான்செரும
அட்டதிசையெங்கும் அவரவரேதான்செரும
பட்டுமடிந்தவளை பலகையின்மேலேயிருத்தி
அபிராமவல்லிபெற்ற ஆமைஉருவானவர்க்குச்
சவதானமான அந்தச் சம்பந்தமாலையர்க்கு
சொத்திலங்குமன்னர் குலமரபுதப்பாமல்
சாத்திரத்திலுள்ள சடங்குசெய்தாரம்மானை
வல்லாண்மையான வலியபுகழ்மன்னனுக்கு
எல்லாச்சடங்கு மியல்பாகவேமுடித்து
கருமந்தொலையவென்று காசினியோர்மகிழ
சம்பந்தமாலையவள் தன்னைஅந்தமன்னனுக்கு
வையகத்தில்மாலையிட்டு மாங்கிலியமுங்கூட்டி
கைய்யதுபிடித்தபோது கண்ணிலுருவ்சாட
அய்யய்யோமகளேயெந்தன் அதிட்டமித்தனையோவென்ன
மைய்யதுதுவழுங்கண்ணாள் மகள்தனக்கினிமேலே நான
செய்வதுசிவலேயென்ன சீதனம்வார்க்கவென்றான்
எண்ணத்தொலையாது இருகண்ணால்நீர்சொரிய
கண்ணீரைமாற்றி அந்தக்காவலனப்போது
தாதுசெரிமார்பனந்த சம்பந்தராசனவன்
ஏதுவகைசீதனங்கள் என்மகளுக்குத்தான்கொடுக்க
வந்தார்காண் திருவாகவர்ண மணிப்பந்தலுக்குள்
பொற்கெண்டி ஆனதிலே போதமரைநீ முகர்ந்து
மைக்கொண்டகண்ணாட்கும் மருமகனார்தனக்கும்
என்னவகைசீதனங்கள இருவருக்குங்கொடுக்க
தாகமாயிந்தமொழி தாரசன்தானுரைக்க
மாமனுருரைக்க மருமகனாரப்போது



முன்னேஉரைத்தமொழி தவறாப்புண்ணியனே
இக்கோரஞ்சீதனங்கள் எங்களுக்குத்தாரீரால்
தெளிந்தபுகழ்எந்தன்மகள் சீவன்வரவேணுமென்று
களித்துமகிழ்ந்தெல்லோருங் கலியுகமாகக்காண
மூழித்துமகள்எந்தனுட முன்னேவரவேணுமென்று
அப்படியேசொல்லி அரனார்தனைத்தொழுது
இப்படியேசீதனங்கள் இருபேருக்கும்வாருமென்றார்
என்றமொழிகேட்டு இயலரசனப்போது
நன்றெனவேயீஸ்பரனை நன்றாய்அடிபணிந்து
வளையதிரைவளைந்து வண்ணமணிப்பந்தலுக்குள்
தெளிவாகமன்னவனுஞ் சிந்தையுற்றாங்கே
அவகதிகளில்லாமல் அந்தஉயிர்மீள்வதற்கு
சிவகதியாகஎங்களுக்குச் சீதனம்என்றேவார்த்து
மெய்யுறதிகொண்டு விமலனருள்போற்றுகையில்
அய்யரிரங்கி அருள்கொடுத்தாரம்மானை
புண்ணியவான்நீர்வார்த்து புறத்தேவந்தவேளையிலே
நண்ணுபிழைசங்கிலியை நாகமுனிவன்புதல்வன்
உம்மந்திரமாகஉட்பொருளை நெஞ்சில்வைத்து
சம்பந்தமாலையர்க்கு சங்கிலியைவைக்கையிலே
ஆண்டவனார்சித்தம் அருளாலிவள்தனக்கு
மாண்டஉயிர்மீள வந்தனர்காணம்மானை
உயிரதுவந்துமின்னாளுடன்முழித்தெளிந்தபோது
பயிரதுதழைத்துநல்ல பாக்கியமும்வந்ததென்ன
தசரதராமரும் சிவசிவாவென்றெல்லோரும்
துயரதுநீங்கிநன்றாய் துன்பமுற்றிருந்தாரன்றோ
சீவன்பிரிந்தவள்க்கு தெளிவுவந்தவேளையில்
தாபந்தெளிந்ததுகாண் சம்பந்தராசனுக்கு
மண்ணுலகிலுள்ளமானுடர் பலபேர்களுந்தான்
கண்ணுதலாள்மங்கையரைக் கண்டுநளினமுற்று
கண்டுகலியுகமாய் கைவிரலைமூக்கில்வைத்து
நன்றுநன்றுஇப்புதுமை நாங்கள்கண்டதில்லைஎன்பார்
கண்டுவளைந்தவர்கள்கூறுவார் வார்த்தையொன்று
மாண்டவுயிர்மீளவந்த மாயமென்னவென்பார்
கண்ணுதலோன்தானோ கடவுள்பரமேஸ்வரனோ
மண்ணுலகிலுள்ளமானிடர் இவனில்லையென்பார்
ராசன்மகள்தன்னுயிரை மீட்டுவித்தபுண்ணியவான்
முறைசேர்மடந்தையரை மீட்டவன்காண்என்பாரும்
இப்படியேசொல்லி இருக்கின்றநேரமதில்
கட்புடையசோறுகறி நன்றாகவேகொடுத்து
சடங்குமுடித்துஜனங்கள் பலபேர்களுந்தான்
மடங்கள்பதிதோறும் மனைதனிலேபோனார்கள்
கொத்திலங்குமின்னார்க்குக் கூண்டபுகழ்மன்னனுக்கு

மன்னுபுகழ்மன்னன் மாளும்மருமகனும்
அன்றுவெகுநாளாய் அவரிருக்கும்வேளையிலே
கடக்கவிருந்தாசன் காரிகையும் மன்னவனும்
நடக்கும்புதுமையெல்லாம் நன்றாகவேகேட்டு
எல்லாம்அறிந்து இருதயத்திலேஅடக்கி
யாரும்அவர்கள் அரண்மனைவாசலிலே
சேரும்புவியிலுள்ளோர் தென்னவர்க்கும் ஏறாது
மாப்பிள்ளையும்பெண்ணும் வடிவழகுகண்டவர்கள்
கொப்பளித்துநம்மை கெடுக்காச்சைமொழிவாரென்று
அறியாமலேஇவரை அப்பால்ஒருபுறத்தில்
பதிவாயிவர்க்குப் பரியானதுமுடித்து
நேற்றவர் தான்வந்து நிலைமையளித்ததுவும்
பெண்ணுடைய பெருமைகளை நாமினி
சொன்னாலசனைக்கேடு சூழ்புவிக்குமேறாது
அப்பிவளைந்தவனை ஆக்கினைகள்செய்யாமல்
தப்பிவிட்டான்நேற்று கடத்தோடுஓடாமல்
என்றவர்கள்தம்மி லிருந்துவிசாரமிட்டு
அன்றவர்கள்செய்த அந்தரங்கமானதுவே
ஊக்கமாய்வார்த்தை உரைத்ததெல்லாம்பட்டணத்தில்
மதுரமொழியாள்செய்தி வளமையாய்உரைத்தெல்லோரும்
சதுரமாயிருந்தபேர்கள் தங்கள்தன்மனையிலேகி
கதிரவன்அடைந்தபோது காவலன்பின்னுங்கூத்து
பாதவித்தாசன் நன்றாய்ப்பார்க்கவேணுமென்றார்
மறுநாள்கதிரவன் வானிலுள்வந்தபின்பு
கெடுவாகவேகூத்து கேள்விக்கவேணுமென்றார்
கெடுவாகவேகூத்துகேட்கவேணுமென்று
ஒத்திணங்கியேஊரிலுள்ள பேர்களெல்லாம்
பித்தாநாளும்கூத்து பெருமையுடனே அவர்தான்
அன்றவனும்பண்டதுபோல் ஆமையுடன்கூட்டை
மன்றல்சொரிகுழலாள் மகிழ்ந்துவரும்வேளையிலே
சிறக்கும்புகழானசெப்பரிய மன்னவனும்
புழக்கடைதன்னில்வந்து போகவரத்திரிவான்
வட்டாரமாய்திரிகை வளையவட்டமிட்டாப்போல்
கொட்டாடியேதிரிவான் கூத்தையிருந்துபாரான்
எல்லாருங்கூடி யிருப்பதற்குத்தான்புறத்தே
குல்லத்தனமாய் கொலுவாகவேதிரிவான்
அடுத்திருக்கும்பேர்கள் அவன்வடிவைகண்டவர்கள்
பொன்னெடுத்துமெத்தையிட்டு பூமலர்மேல்விரித்து
தன்னெழுத்துவரையை தானறியமாட்டாமல்
மைப்பாவுங்கண்ணாள் மணவாளன் தன்னுடனே
கைப்பாணிதானுங் கலந்துவிளையாடாமல்
பள்ளிஅறைதனிலே பருவமானமாயவனும்



வெள்ளிவிளக்குவைத்து விதவிதமாய் அலங்கரித்து
சேர்ந்தபுகழாமையனை சேயிழைதன்கையாலே
ஏந்தியெடுத்தவனை யிங்கிதமாய் முத்தமிட்டு
சருகிவிளையாடி சம்பந்தமாலையவள்
உருகிமனந்தேறிஉடனேது வார்த்தைசொல்வாள்
ஏதுபோலாச்சுதுநீர் என்னைமுகம்பாரும்
வையகத்தில்மாலையிட்டு மாண்டஉயிர்மீளாமல்
ஆக்கினையாய்நீரேயிந்த ஆமைஉருவாயிருந்து
ஏய்க்கிறீர்யெந்தனையு மென்னுடையமன்னவரே
மன்னவரேயென்னை மருவிவிளையாடாமல்
என்னைச்சிறையாக இருத்திவைக்கவந்தீரோ
பட்சிபறவைகள்முதல் பட்சமுண்டுதங்களிலே
உச்சிதமாயென்னோடு உளமில்லையோஉமக்கு
கல்லுருவாகஇவள் நாளும்சொன்னமொழி
கல்லுருவுங்கண்டதுண்டால் கலப்புநம்மால்சுரக்கும்
மன்னுபுகழாமை மனதிரங்காதேயிருந்தான்
அன்னுபுகழுடைய கோதையரும்அப்போது
முந்தியின்சீலைகொண்டு முகமறைத்துக்கண்பிசைந்து
பதுங்கிஒதுங்கியழுத பாவையரும்அப்போது
எழுதியவரால் எனக்குவந்ததங்கமதை
பழுதுசொல்லப்போறோமோ பங்கெடுக்கிறாரெனவே
தழுவியெடுத்தவனை சப்ரமஞ்சந்தன்னில்வைத்தாள்
வழுவிவிழுவான் தரையில் வாக்குரையாளிவளோடு
கூண்டதொட்டில்விட்டிறங்கி கோதைசம்பந்தமாலை
மீண்டெடுத்ததுண்டால விழுந்துதரையில்புரள்வாள்
கனகமுலையோடவளுங் கையாலெடுத்தாலும்
ஆரணங்குபோலேசுருண்டு ஆமையன்கிடந்துக்கொள்வான்
தொட்டெடுக்கமுள்ளெலிபோல் சுருண்டுகிடந்துகொள்வான்
பட்டணத்தைச்சுற்றி மடமடெனவேதிரிவான்
தாமக்குழலனைய சம்பந்தமாலையவள்
ஏதுசெய்வோமென்று இறையோனெழுத்தெனவே
வேதாவிதியெனவே விம்மி அழுதேயிருந்தாள்
[illegible]கவள் துயரம்நீங்க அரசனுட அருளினாலே
[illegible]க்தலிவனுக்குநல்ல பாக்கியம்வருங்காலம்
பொழுதவன்விடிந்தபோது பூதலம் ஆளும்வேந்தன்
வழுவில்லாக்கூத்துப்பார்க்க மன்னவனருளினாலே
அப்படியேதானுமவன் அங்கிருக்கும்வேளையிலே
மெய்ப்புடையமன்னன் அந்த வேந்தர்பெருமாளவனும்
சம்பந்தராசன் தலத்திலத்தனைபேர்களையும்
உம்மந்தமாக உடனேவரவழைத்து
அழைத்துபலவூர் அரசர்களையும்வருத்தி

களித்துமகிழ்ந்து களிகூர்ந்தங்கெல்லோரும்
பட்டணத்திலுள்ளபல சனத்தையும்வருத்தி
வட்டக்கழனியிட்டு வந்ததுரைமக்களெல்லாம்
கூத்துக்கொலுவாகவெகு கோடியாடைகள்தரித்து
ஆற்றும்சபைதனிலே ஆடிவரும்நாடகத்தை
பார்த்துமகிழ்ந்து பலநாடகம் ஆட
நாடகங்களானபல நாட்டியங்கள் ஆனதுவும்
ஆடல்பலவிதமா யெல்லோருந்தான்பார்க்க
பட்டணத்திலுள்ள பலசனங்களும் அறிய
கொட்டிமுழக்கி அவர் கூத்தாடும் அந்நேரம்
மத்தளசத்தம் வலுவாய்த்தொனிமுழங்க
கைத்தாளக்காரர் கையில்வட்டந்தான்பிடிக்க
பாட்டினுடராகமதை பண்பாகவேகேட்டு
ஆடிவரும்கூத்தை அனைபேரும்பார்த்திருக்க
கன்னிகைசூர்ப்பநகை காந்தாரிநாடகமும்
பண்ணுமந்திரமன்னன் பலபேரும்பார்த்திருக்க
சென்னிமன்னன்சொன்ன தேசத்தில்முன்சமைத்த
பொன்னுருவிநாடகமும் பூவையர்கள்தான்காண
இந்தப்படிகூத்து எல்லோரும்பார்க்கையிலே
பந்தங்களாச்சி பகல்வெற்றிநின்றெரிய
அர்த்தராச்சாமம் அடித்தார்மத்தளத்தை
சிந்தையுடனேகேட்டு செயலுடைய ஆமையரும்
பாட்டினுட இன்னிசையும் பம்பைதவுல்கொம்பதுவும்
தாட்டிமையாய்கேட்டுத் தனித்திருக்கமாட்டாமல்
மங்காத ஆமை மயங்கிஒருசாமமதில்
சங்கீதம்பார்ப்பதற்கு தான்போகவேணுமென்று
ஆரும்ஒருவர் அறியாமலேயிவன்தான்
ஆமையின்கூட்டைவிட்டு அபிதானமாகவேதான்
ஊமைபோல்சத்தம் உரையாடாமல்பதுங்கி
வந்தான்வெளிதனிலே மாஜாலவித்தையினால்
செந்தேன்மொழியனையாள் தேடுகிலுங்காணமல்
கொஞ்சும்புகழாமை கூட்டையவன்கையதனால்
பஞ்சணைமெத்தைக்குள் பதிவாகவேஒளித்து
எத்திசையிலுமுள்ளோ ரெடுத்துகொடுபோகாமல்
பத்திரமாகக்கூட்டை பதனமாகவேஒளித்து
ஒளித்துவெள்ளியில்வந்து உச்சரித்துமந்திரத்தை
களித்துமனமகிழ்ந்து நாகமுனிவன்புதல்வன்
இந்திரமாஜால மெடுத்துவெகுஉச்சிதமாய்
மந்திரவாளும் வலுவீரச்சங்கிலியும்
தங்கநிறமேனி சங்கமதுபொன்னாலே
தொங்கலுடையநல்ல சூரியனைப்போலழகும்
பொன்னுமுத்துமாலைகளும் பூஷணங்களானதுவும்



கஸ்தூரிப்பொட்டழகும் கையிலுடைவாளழகும்
விஸ்திராமன்வெகு வெண்மதிபோல் அழகும்
மாநிலத்திலில்லா வடிவுபிரகாசமதாய்
மணிலத்தில்கூடி நின்றகழனியிலே
கூடிஒன்றுபோலிருந்து கூத்துப்பார்க்கும்போது
நாடிஅந்தத்தலத்தில் நாழிகையிலேகடிதாய்
அந்தமுருகாமனை ஐரெட்டிப்போலழகாய்
வந்தானவனுநல்ல வானில்கதிரொளிபோல்
கழனிக்கு அப்பால் கடக்கஒருபுறத்தில்
புகழழகுமன்னன் புறமாகநின்றனனே
நின்றவனைக்கண்டு நிலைமையுள்ளமன்னவர்கள்
அன்றுமயங்கிஅவனை அழகறியமாட்டார்கள்
தன்மட்டுந்தாமிருந்து சங்கீதம்பார்த்தவர்கள்
மின்வெட்டி அற்றாற்போல் விழிகள்மிகவுருண்டு
பட்டணமாக பரிவாயிருந்தவர்கள்
தட்டழிந்துமெத்த தடுமாறியேமயங்கி
காதலுடனே கருத்தாய் இருந்தவர்கள்
பேதலித்துமன்னனுட பேரழகைக்கண்டவர்கள்
பார்த்ததுரைமக்கள் பலபேருமென்சொல்வார்
இவனோதிருமாலோ தேவேந்திரன்தானோ
எவனோயிவனை யிலக்கறியமாட்டாமல்
கார்கொண்டதனிக்குடை காவலனப்போது
யாரென்றாலும்நாமள் ஆகரிக்கவேணுமென்று
தாலுகஉட்கழனி தன்னிலிருக்கும்பேர்கள்
ஆனாலும்கிட்ட அழைத்திருக்கவேணுமென்ன
வடக்கிருக்கும்பேர்கள் வாருமிங்கேயென்றழைத்தால்
கடக்கேஅவ்விடமிட்டு கடந்துகிழக்கேவருவான்
கிழக்கிருக்கும்பேர்கள் கிட்டேயிங்கேவாருமென்றால்
நளுக்காய்நளுக்கி நடந்துதெற்கேவருவான்
தெற்கிருக்கும்பேர்கள் சிறப்பாகவேஅழைத்தால்
மிக்கபுகழ்மன்னவனும் மேற்குவந்துபார்த்துநிற்பான்
கொலுவிருக்குமன்னவர்கள கூடுகைக்குசெல்லுகையில்
கலைமிருகம்போல்வெருண்டு கடிதாகவோடலுற்றான்
ஓடியவன்யாளிகையில உள்ளறைக்குள்ளேபுகுந்தான்
கூடியவழுவாமைக் கூட்டுக்குள்வந்துபுகுந்தான்
நாடகங்கள்பார்த்ததுவும் நாட்டமுடன்வந்ததுவும்
தேடும்புகழனைய தேவிஅறியாமலவன்
கதிரோன்விடிந்தபின்பு காரிகையாள்விழித்தாள்
சதிர்கழனிதன்னில் சங்கீதம்பார்த்தவர்கள்
எல்லோருந்தாங்களேகியேபோனபின்பு
வல்லாமையோடே மனையளவும்வந்தவர்கள்
சந்திஅரண்மனையுஞ் சாவடியும்மேடைகளும்

வந்திருக்கும்பேர்கள் வளைந்திருந்து தங்களிலே
தங்களிலேபேசி சமுசாரமாயவர்கள்
திங்கள்நுதலாளுடைய செய்திகளும்வாதுகளும்
மந்திரிமாரும்நல்ல வாசல்பிரதானிகளும்
அந்தரங்கவார்த்தை அபரவிரோதங்களிலே
மன்னன்மகளார் வளமைதனைநாமளினி
என்னசொல்லபோறோமோ வென்றுசொல்லியவர்கள்
வாண்மையுள்ளமன்னன் மகள் தனையுமிப்போது
ஆமைக்குச்செய்ததனை யாபேர்க்கும்பேச்சாச்சே
கூத்திருந்துபார்த்ததுவும் கோலமணிந்துவந்ததுவும்
கருத்துரைத்துவந்தவனைக் கைதுசெய்யப்போகாது
பார்த்திருந்துமன்னவன் தன் பாவனையைக்கண்டுரைப்பார்
நேற்றுவந்துகூத்து நிலையில்நின்றுபார்த்தவனும்
வந்துநிற்கிறான்காண் வாவழையுமென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு அப்போதுஓடலுற்றான்
ஓட்டத்தைக்கண்டு உடன்சிலபேர்கள்தொடர
வீட்டுக்குள்சென்று விரைவாய்புகுந்துகொண்டான்
மன்னுபயில்மின்னாள் வளமாயறியுமுன்னே
பண்டுவந்துஒளித்தான் பதுங்கிகூட்டினிலே
அங்குவந்துகூட்டில் அபிதானமாய்ஒளிக்க
கங்குல்விடிந்து கதிரோனுந்தான் உதித்தான்
விடிந்தபின்னெழுந்து மின்னாள்வேதனையாமெத்த
சடைத்தவள்கவிழ்ந்துகொண்டு தரைதனில்துன்புறுத்தி
கடிந்தசொல்விசனமெல்லாம் கருத்தினில்கேட்டபோது
வடிந்ததுகண்ணில்தண்ணீர் வடியவேதிகைத்திருந்தார்
பவ்வந்தக்காரர்பல வார்த்தைசொன்னதினால்
சமபந்தமாலேயவள் சஞ்சலித்து மூச்செறிந்து
அன்னம்அருந்தாமல் அதிகிலேசமாய்மனதில்
என்னவிதமோவெனக்கு ஏச்சுமிகஉண்டாக்கி
அனைபேருங்கூடிநம்மை அழிவுவசைபேச
மனையிலொருபேருமெந்தன் மனமறியாமலிங்கே
வந்தவர்களில்லையெந்தன் வாசலடிகடந்து
இந்தமொழிகேட்க இறையோன்விதித்தானோ
அற்பாக்களெல்லாமோர் ஆணிதெறித்தால்நீங்கும்
கற்புக்கதவு கலங்காதென்றேயிருந்தேன்
தன்னை அறியாமல் பாவம்வளருமென்பார்கள்
என்னை அறியாமலெனக்குவாதிவந்ததுவே
ஆனைவிளாங்கனியை அப்பியெடுத்தல்லாமல்
தானுகவேகனியுந் தங்குமோகாணுக்கியிலே
நமனை அறியாமலுயிர் நற்சடலம்விட்டிடாது
சிவனேயென்னுடைய சிந்தைஅறியாமலிப்போ
வந்தவர்களில்லை மனதறிய இங்கொருவர்



## தன்னுரு வெளிப்படல்

இந்தமொழிகேட்க ஈசன்செயலெனவே
பாங்கியரைத்தேடாள் பாக்குவெற்றிலை அருந்தாள்
பொருந்துவிழிமடவாள் பூவணையிலேசரியாள்
திருந்துமலர்க்குழலாள் திருநீறுதான் பூசாள்
வெந்நீர்குளியாள்தன் மேனிதனையும்பேணாள்
பன்னீரும்சூடாள் பரிமளங்களும்பூசாள்
பாங்கியர்களோடே பரிந்துமொழிபகராள்
தூங்கிவிழுவாள் துயரமாய் சஞ்சலித்து
வெய்யகலைகநமக்கு வந்தவிதிமாயமென்ன
கையில்துரும்புகுத்தி கவிழ்ந்துமுகம்வாடி
தேங்குமலர்க்குழலாள் செல்விசம்பந்தமாலை
யேங்கிஅழுது இவளிருக்கும்வேளையிலே
சோதிபரமேஸ்பரனார் சேர்தனையாலிங்கிவர்க்கு
மாதுமனத்துயரம் மாற்றுகின்றநாளையிலே
திண்ணமுடன்பெண்ணைமணஞ் செய்திருந்தநாளையிலே
பெண்ணைமுகநோக்கிப் பேசாதமன்னவனும்
கஞ்சமுகமுடைய காரிகையாளைநோக்கி
வஞ்சமுறஆமைஉருவான மன்னவனுமேதுசொல்வான்
வல்லபஞ்சேர்மாதே மடமயிலேசேயிழையே
கல்லிடையுங்காடுங் கடுமுரடுங்குமடும்
குண்டுகுழிமேடு குமடுபள்ளம்ஆனதுவும்
சண்டுசருகான தலங்களெல்லாந்தான்திரிந்து
மேனிஉடலெல்லா மெலிந்துவலைந்துநலிந்ததுகாண்
கோணிடையர்போலே கொடுங்காட்டிலேதிருந்தேன்
பெண்ணேஎன்மேனி புண்ணாகநோகுதுகாண்
எண்ணெயொடு புண்ணுக்கு ஏற்றவெந்நீரும்வெதுப்பி
தருவாயேயாகில்சடவு துயர்தீருமென்றான்
என்றமொழிகேட்டு இலங்குசம்பந்தமாலை
மைவேல்விழிபனைய மங்கையர்க்குஏவல்செய்யும்
கைவேலைசெய்யுமகனக வல்லிதனை அழைத்து
தேங்குமலர்க்குழலாள் சேயிழைபாளதனமனையில்
தூங்கும்உறிதனிலே சொகுசுடனேசேர்த்துவைத்த
கந்தகறுப் பூங்குழலாள் கன்னிசம்பந்தமாலை
பாவுசெறிகுழலாள் பெண்கொடியாள் அந்நேரம்
சீயக்காய்நெல்லிப்பருப் பும்செவ்வரைப்புமிளகும்
வெதுப்பியவள் அங்கே வெந்நீருங்கொண்டுவந்து
கொல்லைப்புறமான கோட்டைக்கதவடியில்
கன்மந்தொலைவதற்கு காவலவன்முன்பதிலே
வெள்ளமிறக்கிவெதுப்பி யெண்ணெய்கொண்டுவந்து
வள்ளைக்குழலாளும்வைத்தாள் வெளிதனிலே

வெளிதனிலேவைத்தபின்பு வேந்தன்மகளைநோக்கி
களிகூர்ந்துகாவலவன் கன்னியர்க்குரைதுசொல்வான்
சிலைபோலேஅழகுடைய தேன்மொழியாளேகேளு
தலைமெழுகுமட்டுந் தலைவாசலையடைத்து
அப்பாலேநில்லு அடுக்க வரவொண்ணாது
எப்போதும்போலே யிருங்கோ ஒருபுறத்தில்
எண்ணெயொடுபுண்ணாக்கு என்கையால்தேய்ப்பதல்லால்
திண்ணமுடன்வேறொருவர் தேய்க்கவொண்ணாதெந்தனுக்கு
இட்டமுடன்யெண்ணெ யெடுத்தொருவர்கையதனால்
தொட்டொருவர்தேய்க்கில் தோசமுண்டுமின்னாரே
வேறொருவர்தேய்த்தந்த வேர்வைமேலேவிழுந்தால்
மாறாதுபாவம்வரும பிணிகள்தீராது
மூத்தோர்கள்சொன்ன முறைமைதனைக்கேளாமல்
சாஸ்திரவிரோதமாய் தலைமெழுகேன் கண்டீரோ
முல்லைநகையாரே மொழியும்வகைகேளீர்
கொல்லைப்புறத்தில் அந்த கோட்டைமதிலுக்குள்ளாக
எண்ணெய்ப்புண்ணாக்கறைப்பு மேற்றிவெந்நீரானதுவும்
ஒன்றும்குறையாமல் உள்ளேவைத்துதான் பூட்டி
குளித்துவருமளவுங் கூடத்தில்நில்லுமென்று
நலிந்துமடவார்கள் நல்லதெனக்கொண்டாடி
சொன்னபடிநின்றவர்கள் தூரநிற்கும்வேளையிலே
அந்நேரம்சென்றவனும் அடைத்துத்தாழும்பூட்டி
தாழ்பூட்டிஆமையுட சட்டைவிட்டுவெளியில்
வாள்பூட்டுஞ்செங்கரத்தான் வந்தான்வெளிதனிலே
தனியாகவேஅவனுந்தானே யிருந்துகொண்டு
மனிதரூபமாகஎண்ணெய் மெழுகுமந்தவேளையிலே
அந்நேரமதன்னில அரிவையபாங்கியாளை
இந்நேரந்தன்னிலவ னேது செய்கிறார்எனவே
யாரும்அறியாமலவள் அப்பாலேநின்றுகொண்டு
சீராகக்கோட்டைச்சுவரை அறுத்துத்துளைத்து
கைபோகுமட்டும் கடப்பாரையாலிடித்து
மைகொட்டும்கண்ணாள் மனமகிழ்ந்துபார்க்கையிலே
துலங்குகதிர்வீசும் சூரியனார்தனைப்போல்
இலங்குபிரகாசமுள்ள இவருடைய பேரழகும்
வர்ணவடிவவன் வாய்த்தஉடைஒப்பனையும்
இன்னதென்றுசொல்லி யெழுதவுமேபோகாது
ஒருகண்ணால்பார்த்தவளும் உள்ளமெல்லாம்தான்குளிர்ந்து
இருகண்ணால்பார்த்தாலென்ன சொல்லப்போறோமென
ஆமையென்றுசொல்லி நம்மைஆதரவுசெய்யாமல்
பாவையரையேமாற்றி யெந்தன்பாவத்தையேற்றாரே
அரைத்திருந்தசந்தனத்தை அள்ளியணங்கொள்ளாமல்
மடித்திருந்தநானுமிவர் வாசம்அறியாமல்



ப்படியேநம்மையிவர் ஏய்க்கின்றார்என்றுசொல்லி
ம்புடையமாதுமின்னாள் கன்னிசம்பந்தமாலே
கனிவாய்மொழியனையாள் கனபிரியமாய்மகிழ்ந்து
இனிமேல்துயர்நமக்கு இல்லையென்றுமின்னாளும்
வாசமலர்க்குழலாள் மங்கையரும் அப்போது
நாயகன்திருமனது நமக்கிரங்கினார்எனவே
அன்னங்கறிசோறடைக்காய் பலகாரமெல்லாம்
தன்னுடையகையால் சமைத்தாள்சடுதியிலே
வேண்டியபதார்த்தமெல்லாம் மெல்லியரும்உண்டாக்கி
கூண்டபுகழ்மன்னன் குளித்துமெழுகியபின்
கதவுதிறக்கும்மட்டுங் காரிகையாளந்நேரம்
சிதமாகவேஅவளுஞ் சுவரோடொளித்துநின்றாள்
மெய்ப்பாகவந்து வெளியில்வரும்வேளையிலே
கட்டியெடுத்தவளும் கனமார்போடேசேர்த்து
வட்டவளையானதிலே வைத்தனள்காணம்மானை
மெத்தையில்சரியச்சொல்லி மேனிசால்முருக்கிபின்னும்
நித்திரைவிழிக்குமுன்னே நிமைக்குள்ளெழுந்திருந்து
பத்திரமாககண்ட பரிசைத்தான் சொல்லவென
தந்திரமாகத்தங்கள் தகப்பனார்மனையில்வந்தாள்
வந்தமகளைநோக்கி வாழ்பெரியமன்னவனும்
சந்தோசமாகத் தயவுமொழிபேசாமல்
வெம்பிச்சடைத்து மெலிவாகவேஅரசன்
சம்பிமுகம்வாடி சடைத்திருந்தாரம்மானை

## ஆமைத்தோடு பறிபோதல்

பெற்றதகப்பன் பெருமூச்சிவிட்டதெல்லாம்
உற்றமகளார்உடன் அறிந்து வேதுசொல்வாள்
அரசர்பெருமானே அம்புவியை ஆண்டவனே
விரைசேரும்திண்புயனே வேலவர்கள்கோமானே
அட்டதிசையெல்லாம் உன் ஆக்கினையாய்நடக்கும்
மட்டுப்படுத்தி மணிக்குடைக்குள் ஆண்டவனே
ஒன்னலரைவென்று உலகாளுஞ்சீமானே
வன்னதிருமனது வாடியிருப்பானேன்
திடனுசுநீர்வாளுஞ் சீமையிலேவேறொருவர்
படையாகவந்திறங்கி பாளையங்கள்செய்ததுண்டோ
பொன்னும்பரிகலமும் பூதலத்திலுள்ளவர்கள்
மன்னர்களும்உடனே வந்துகப்பம்கேட்டதுண்டோ
இந்தமொழிதந்தையுட னேந்திழையாளும்உரைக்க
சிந்தையுற்றமன்னன் திரும்பமகளோடுரைப்பான்
உன்னாலேயெந்தனுக்கு உள்மெலிவல்லாமல்
என்னாலேவேறே துயரில்லையென்றுதானுரைக்க
வென்றமொழிகேட்டு வேந்திழையாளும்மறுத்து

அன்றுதகப்பனுடன் ஆயிழையுமேதுசொல்வாள்
வெப்பாகவிப்படியே வார்த்தைசொன்னீரென்னுடனே
உப்புப்புழுத்தாலுலகில் மருத்ததுண்டோ
மெய்ப்புகழும்மன்னவனே மேதினியில்என்னுடைய
கற்புவழுவாது கதிரோனே தெற்கானாலும்
தையலாளுக்காய்நீர் சடைத்திருக்குந்தன்மையெல்லாம்
பைங்கிளியாங்காணும் பரமார்த்தமோ உமக்கு
வெம்பிச்சடைத்து மெலிந்திருக்கவேண்டாங்காண்
அம்புலியோர்தம்மை அழைத்துக்கழனிகூட்டி
வட்டகழனியிட்டு வந்த துரைமக்களெல்லாம்
கொட்டிமுழக்கிப்பல கோலங்களுஞ்சமைத்து
ஆடுங்கூத்தரெல்லாம் அரசர்பெருமானேநீர்
கூடுங்கழனிதன்னில் கூத்துப்பார்க்கும்போது
வேறொருவர்வந்து வேறுருவாகின்றவரை
கூறாகவந்துநின்று கூத்துப்பார்ப்பாராகில்
இங்கிருக்கும்பேர்களெவராகிலும் ஒருவர்
எங்கிருந்துவந்தீரிங்கே வாருமெனவே
ஆராகிலும்ஒருவர் ஆராய்ந்துகேட்டாக்கால்
வாரால்அடித்து வலுக்கயிற்றால்கட்டி
தும்பைச்சாறுவிட்டவனை தூக்கியடித்தேவலுவாய்
ஐம்பத்திநாலுபொன் அபராதம்வாங்கிவைப்போம்
என்றுபறைசாற்றி எல்லோருக்கும் ஆளனுப்பி
அன்றுபோலின்று ஆனகழனிகூட்டி
ஏற்றபுகழாக இலங்குமுடிகாவலனே
நேற்றைப்போல்கூத்துநீர் பார்க்கவேணுமென்று
தகப்பனார்தன்னுடனே சம்பந்தமாலையவள்
வகுப்பாகச்சொல்லிவிட்டு வந்தாள்தன்மனையில்
மனைதனில்வந்தபோது மன்னவனும்விழித்தெழுந்து
கனதனமின்னாள் காணா சாவலன்வெளியில்வந்து
தினசரிதிரிந்தாப்போல் தெருவினில் திரிந்துலாவி
மனைதனில் அவனும்வந்தான் வான்கதிரடைந்தனனே
அன்றுகதிரோன் அடைந்த ஆயிருள்வந்தபின்பு
உண்டுபொசித்தவளும் உள்ளுடைக்குமுன்னே
தண்டரளமார்பனந்த சம்பந்தராசனவன்
பண்டுபோல்கூத்து பார்க்கவேவேணுமென்று
அன்றுகழனிகூட்டி அனைவரையும்அழைத்து
சென்றிருந்துகூத்து தெளிந்திருந்துபார்க்கையிலே
ஒருசாமம்ஆகி ஊரடைத்தவேளையிலே
திருவையிளங்குழலாள் செல்விசம்பந்தமாலை
ஏற்றபுகழாலமனை யிவள்காணவேணுமென்று
சாற்றுமலர்மனையில் சன்ன உறக்கமாக
வள்ளல்குழலாளும் வாய்த்தமணிமெத்தையிலே



சன்ன உறக்கமாக கண்துயின்றாளம்மானை
விழியாமல்கள்ள உறக்கமாய் மூச்சுவிட்டு
அளிசேர்குழலாள் நன்றாகஉறங்கையிலே
ஆரமணிமார்பனந்த ஆடையின்கூட்டைகழற்றி
பாரமணிமெத்தையின் கீழ் பள்ளியறைக்குள்தான்
ஒளித்துமறைத்தவனும் உள்ளடக்கஞ்செய்வதெல்லாம்
விழித்தவளும்கண்டு விழியாதபேர்களைப்போல்
மடமின்னாள் அந்த மணவாளர்தனையும்
கடைக்கண்ணால்பார்த்தவளுங் காணாதபேர்களைப்போல்
இப்படியேமின்னா ளிவளுறங்கும்வேளையிலே
மெய்யுடையமன்னனந்த மெல்லிநல்லாள் தானுறங்கும்
பஞ்சணைமெத்தையதில் பையவந்துதானொளித்து
அஞ்சனக்கண்மின்னாள் அவனையிவளும்பார்த்து
கனிவாய்மொழியனையாள காரிகையாள் தானுறங்கும்
இனிமேல்விழித்து எழுந்திருக்கவேயிவளும்
சொல்லவெகுநேரமென்று சிந்தைமகிழ்ந்தே அவளும்
மெல்லப்பதுங்கி விருந்துபோலே அவனும்
வந்தான்வெளியில் மனையைவிட்டுமன்னவனும்
சந்தோஷமாய்கூத்து தான்போகவேணுமென்று
தொங்கலுடையுடுத்து சொரிகுழலைமுடித்து
முங்கைமுதாரி முறுக்குவளைச்சவடி
மாணிக்கமான வயிரமுத்துத்தாவடங்கள்
வேணிக்கனகமணி வர்ணப்பணியணிந்து
ஆதிபரநாதனருளால் அழகுதிருநீறணிந்து
காதில்பணியணிந்து கண்ணுதலில்பொட்டுமிட்டு
செந்தூரப்பொட்டும் சிலைபோல்திருவழகும்
சந்திரகாந்ததலைப்பாகையும் தங்கக்கரை அங்கிகளும்
பூவிட்டகுல்லாவும் பொன்னெழுத்துதாத்தாப்பும்
பாவிட்டநல்ல பரிமளங்களுமணிந்து
தங்கத்திருமேனி சரீரந்தெரியாவண்ணம்
பொங்குபுகழ்மன்னவன் பொற்சரிகைகச்சைகட்டி
மந்திரவாளும் வலுவீரசங்கிலியும்
சிந்தையுற்றுவானில் சிவனார்திருவருளால்
வந்ததுகாணிந்த வகைகளெல்லாம்மன்னனுக்கு
மன்னவனும்அந்த வகையெல்லாம்தானறிந்து
தென்னவர்கள்கூத்து தெளிந்திருந்துபார்க்கையிலே
வந்தான் கழனியிலே வாலஅரிச்சந்திரன்போல்
சந்தோஷமாகஅங்கே தானிருக்கும்பேர்களெல்லாம்
தாக்காவேயிருக்கும் தங்கத்துரைமக்களெல்லாம்
பார்க்கும்பொழுதிலவன் பகவான்பருதியைப்போல்

வந்துநிற்கும்மன்னவனை வாருமென்றுசொல்லாமல்
அந்தரசன்சொன்னமொழி ஆக்கினைக்குத்தான்பயந்து
வல்லாருந்திண்புயத்தான் மந்திரிமார்கள்முதலாக
வெல்லாருந்தம்மில் இருந்தனர்காணம்மானை
இப்படியேசங்கீதம் அவர்களெல்லோரும்பார்க்கையிலே
மெய்ப்புடையமன்னன் விடிகூருசெல்லுமட்டும்
கள்ளத்தனமாய் கழனிக்குள்வாராமல்
தெள்ளுபுகழ்மன்னன் தெளியநின்றுதான்பார்த்தான்
நின்றுநெடுநேரம் நிலைமேல்நின்றவனும்
அன்றுகழனிதன்னில் ஆடுங்கூத்துபார்த்தான்
செயலுடையமன்னன் சிலநேரஞ்சென்றபின்பு
கருத்தாகநாமும் கடக்கநின்றுபார்ப்போமென்று
பார்கொண்டமாலருளால் பாருலகிலுள்ளவர்கள்
யாரென்றொருவர்நமை யாராய்வதில்லையென்று
பாரமுடிமன்னன் பட்டணத்தோர்காண
நேரம்விடியுமட்டும் நின்றுவிட்டான் தலத்தில்
அத்தலத்தில்நின்றுநல்ல ஆமைஉருவானவனும்
கொத்தலருமன்னவனுங் கூத்துப்பார்க்கும்நேரம்
வெள்ளிமலைவேலவனின் விருதுக்கொடையைப்பிடித்து
கோழியதுகூவும் குரலோசையைக்கேட்டு
ஆச்சுதேநேரம் அறியாமல்நின்றோமே
ஏய்ச்சுதேகூத்துநம்மை யென்றவனுமோடலுற்றான்
ஓடும்பொழுதவனை உண்மையுடனேபார்த்து
கூடத்தொடர்ந்தவர்கள் கோபிக்காமல்வாசல்மட்டும்
கடிதாய்நடந்து கருத்தாகவேமனையில்
வடிவாளுடையமன்னன் வருவதற்குமுன்னாலே
தாமக்குழலனைய சம்பந்தமாலையவள்
ஆமையின்கூட்டை அபிமானமாயெடுத்து
ஆருமறியாமல்அவ ளந்தரங்கமாய்ஒளித்தாள்
பார்மணிமெத்தையின்மேல் பண்டுபோலவளும்
கள்ளஉறக்கமாக கண்துயின்றாளம்மானை
தெள்ளுபுகழ்மன்னவனுஞ் சென்றுமனைக்குள்புகுந்து
நன்றாய்ஒளித்துவைத்த நல்லாமைக்கூடுதன்னை
குன்றாதமன்னவனுங் கூர்மையுடன்தேடலுற்றான்
தேடியவன்காணாமல் சிந்தைசடைத்துமெலிந்து
நாடிஉடல்வேர்த்தவனு நாவுரைக்கமாட்டால்
மாட்சிமையாய்நாமள் மறைத்தசுருபமதை
காட்சிகொடுக்கவென்ன காரணங்கள்வந்ததென்று
ஏதுசொல்லபோறோ மினிநாமள்என்றுசொல்லி
மாதுநல்லாள்தானுறங்கும் மலரணையைத்தான்கடுகி



வந்துநின்றுமன்னனந்த மங்கைநல்லாள்தன்னை
எழுந்திருநீயெனவே யெழுப்பினர்காணம்மானை
எழுப்பெழுப்ப அந்த ஏந்திழையும் பஞ்சணையில்
கெளிப்பாள்முழிப்பாள் நித்திரையைவிட்டெழாள்
மன்னனெழுப்பும்வகை மின்னனையாள்தானறிந்து
சன்னஉறக்கமாக தானுறங்கும்வேளையிலே
திண்ணமுடன்மன்னன் சினந்துமுடுகிவந்து
இன்றுமுழுதுமிவள் உறங்குவாளெனவே
எட்டிமுடுகிவந்து ஏந்திழையாள்தன்னையும்
தொட்டதட்டிதட்டிஅந்தத் தோகைநல்லாளையெழுப்ப
சொல்லுவாள்வார்த்தையொன்று தூஷணங்களல்லாமல்
வெல்லும்புகழுடைய வேந்தேநீயாரோ
எங்கிருந்துவந்தாய் இதற்குமுன்கண்டறியேன்
சங்கையல்லவென்னையுநீ தட்டிஅடித்தெழுப்ப
அய்யய்யோஎன் னுடைய ஆமைக்கரசானவர்
மெய்யாகவெந்தனுட வேந்தரிவராகில்
படிகடந்துளந்தனுட பஞ்சணையைத்தொட்டு
கடிதாய்பிடித்துஅடித்து கட்டிஇறுக்கிச்சேர்த்து
ஆமைக்கரசனும்மை ஆக்கினைகள்செய்திடுவார்
வாண்மையுடன்சொன்னேன் வந்தவினைசூழுமுன்
போய்பிழையுஞ்சொன்னேன் புத்திஎன்றுகேளும்
கற்புடையமாதுமின்னாள் கன்னிசம்பந்தமாலை
சொன்னசொல்லைத்தான்கேட்டு சொல்பெரியமன்னவனும்
மன்னன்நகைபுரிந்து மறுவார்த்தையேதுசொல்வான்
செவ்வந்தகாரிமொழி செப்பினாயென்னோடே
பலவந்தம்பேசி பகட்டினால்விட்டுவிடேன்
ஆமைதன்கூட்டை அவமானமாய்ஒளித்து
பாமையமையேத்தி பகர்க்கிறாயேயவர்தலைதகளை
ஆனதினை கடத்தி அடிக்குள்மறையாதேயடி
மாதேநீகூடு மறைத்ததேஅல்லாமல
மாயமாயிங்கொருவர் வந்தெடுத்துப்போகவில்லை
நல்லதடிநீஉன் நாட்டிலுனைப்போலுமில்லை
சொல்லடிநீவைத்தவிடஞ் சொல்லாதிருந்திடில்
கொல்லுவேன்கையால கொலைபடுவாய்நீயுமிப்போ
வென்றுசொல்லிமன்னவரு மேந்திழையைத்தானெருக்கி
வண்டுறுக்கிமன்னவரு வாளுருவிநிற்கையிலே
சம்பந்தமாலையவள் தான்துணிந்துவேதுசொல்வாள்
உம்முடையகையால் உயிர்மடிவேனாகில்
நன்மைகிடைக்குமெனக்கு நாயகமேஉன்கையால்
வெட்டிவிடுங்காணுமினி மெய்யாகவேசொல்லுகிறேன்
சுட்டுவிட்டேன்சட்டையது திரும்பவரமாட்டாது

என்றுமின்னுள்சொன்னபின்பு ஏற்றமன்னர் ஏதுசொல்
நன்றுநன்றுஉங்களுட நாட்டில்நீ கேட்பார்யார்? [வான்
தங்கமணிப்பெட்டகமுந் தான்வலியச்சாவலையும்
உந்தனுடதந்தைதான் முன்உள்ளதெல்லாம் கொள்ளைக்கொ
தேசிகனார்தந்ததிரு ஆமைக்கூடுதன்னை [ண்டார்
நீபறித்துக்கொண்டாயே நிட்டூரிஉன்னிடத்தில்
நானிருப்பதில்லையெங்கள் நாட்டுக்குநான் போறேன்
உயிரிருக்கும்கூட்டை ஒளித்தகள்ளிஉன்னிடத்தில்
பொருந்தாதுநந்தமக்கு போறேன்பரதேசம்
அஞ்சாமலுன்னுடைய அன்னைபிதாவிடத்தில்
இருப்பதேஅல்லாது என்னிடத்தில்நீவேண்டாம்
பொறுப்பாய்வனந்தன்னில் போறேனெனச்சமித்தான்
என்றிருபேருந்தம்மில் இசைந்திடும்மொழிகளெல்லாம்
அந்தந்தநகரிலுள்ளோர் அறிந்துபின்விரைந்துவந்து
சென்றதில்சிலபேர்மன்னன் சினமதுஆழ்த்தலுற்றார்
சாந்தமதுஅடைந்தமன்னன் சிந்தையைதேற்றியவன்
சுகபோகஞ்செப்பியே சொல்வாழ்த்திபுகழ்ந்து
ஏற்றிஆசனமதில் இருக்கச்செய்தனர்காண்
இருந்தானரசன் இலங்கியசிம்மாசனத்தில்
திருந்தும்உலகிலுள்ளோர் செருமிவளைந்தெங்கும்நிற்க
கூடுங்கழனியின் முன் கூத்துப்பாத்துக்கடிதாய்
ஓடிவரும்போதிவனை உடன்தொடர்ந்துவந்தவர்கள்
மறையநின்றுகேட்டவர்கள் வளமையெல்லாம்தானறிந்து
திறலரசன்முன்பில்வந்து செய்திசொன்னார் அம்மானை
கூராமைக்கூட்டைவிட்டு கொற்றவனே உன்மருகன்
தேனார்மொழியாள் தெளிந்துறங்குமவேளையிலே
கஞ்சமலர்முகத்தாள் கன்னியிளவரசி
அஞ்சலிலைபார்த்து அயரஉறங்கையிலே
ஆமையின்கூட்டையிவர் அங்கொளித்துஇங்குவந்து
தாமமுடன்கூத்தினுட சங்கீதங்கள்பார்க்க
போறதற்குமுன்னே அந்தப்பெண்ணிளவரசு
மறைவாயெடுத்து மறைத்தாளென்றுசொல்லி
உறைவாளுருவிஅவர் உள்ளறைக்குள் தர்க்கமிட்டு
மேன்மையுடையபுகழ் வேந்தர்பெருமானரசே
தம்மிலிருபேருந் தாக்கமிடுகிறாரெனவே
அடர்ந்தபுகழான அரசர்பெருமானே
நடந்தபுதுமையெல்லாம் நன்றாகவேஉரைத்தார்
அன்றவர்கள்சொன்ன அதிசயத்தைதான்கேட்டு
மன்னுபயில்மன்னன் மறுவார்த்தையேதுசொல்வான்
இருபேரும்தானே இவர்களுடபக்கமதில்
அருகிலங்கேவேறொருவர் ஆரில்லையோவென்றுரைத்தார்
பொங்குசிலைமன்னவனே வந்ததுரைமக்கள்சிலர்



[illegible]ங்குவாமல்செருமி வளைந்துஜனங்கள்
பட்டணமாகபிரிந்து பதினாயிரம்பேர்கள்
பட்டணத்தாரெல்லாம் பதிவாகஇருக்கிறார்என்ன
அந்தமொழிகேட்டரசன் அகமிகமகிழ்ந்து
சந்தோசமாகஅந்த சம்பந்தராசமன்னன்
வந்துசொன்னபேர்களுக்கு வரிசைபலவேகொடுத்து
கூத்தைஅமர்த்தி கூடுங்கள்என்றுரைத்தார்

## சுயவரத் திருமணம்

ஏற்றதுரைமக்களிருந்தவர்களெல்லோரும்
வீரானராமருட வெள்ளைச்சேனையதுபோல்
வாராரேமன்னவரும் மந்திரிமாரும்படையும்
அடர்ந்துபடைகள்வர ஆனைகுதிரைதிரளும்
படர்ந்தகுடைநிழல பலவாத்தியங்கள்முழங்க
கவிவாணர்வாழ்த்த கட்டியங்கள்கூறிவர
சிவதண்டிகையேறி சிலபேர்முன்னடக்க
பட்டணங்கள்சூழ பாளையக்காரர்கள்வர
கட்டாணசொட்டை களிகையுடைவாள்பரிசை
வல்லயமும் கேடயமும் வல்லாயுதம்நெருங்க
எல்லையில்லாசேனை இருபுறமும்நெருங்க
சம்பந்தராசனவர்தான வருகற்சூழவனே
முன்வந்ததேவியரும் மூவூர்க்காரிகளும
உகமானசெய்தியுடன் கேட்டந்தவேளையிலே
தகமாலைத்தாயாரும் சம்பந்தமாலையிடம்
வந்தவளும்கண்டு மருமனையுஞ்சேர்ந்துகூடி
தெளிவாகவேஅவர்கள் சிந்தைமகிழ்ந்திருக்க
களிகூர்ந்தெங்கெல்லோரும் கருத்தாயிருக்கையிலே
அப்போதுமன்னன் அரசபடையுடனே
மெய்யாகவேவந்து வெடிகளிடிமுழங்க
படைமருங்கவநீகழமன்னன பார்மகளருகே
அடல்பெரியமாளிகையில் அரசன்வந்தாரந்நேரம்
வந்திடும்மாமனாரை மருமகனுங்கண்டு
விந்தையாய்இருப்பிடைவிட்டு விரைந்தெழுந்துஅவரைப்போற்
கந்தடப்புயத்கால்நல்ல கையினால்தொழுதுபோற்றி [றி
வந்தவர்முகந்துழுத்தி மருமகன்தன்னைசேர்த்தார்
சேர்ந்துகட்டிமன்னன் திருமார்போடேசேர்த்து
வேந்தனிவன் ஒப்பினையும் மேனிஅழகும்பார்த்து
பார்த்துமகளாருடை பாவந்தெளிந்துதன்று
சேற்றிலுவைந்தெழுளரும்செந்தாமரைமலரேபோல்
மேகத்தைநீக்கிஅந்த வெளியில்வந்தமதிமுகம்போல்
தீமைதனைநீக்கி சிவனார்திருவருளால்
ஆமையின்கூட்டை அரனாருளால்அகற்றி

யெங்குமுள்ளவருமெங்கள் மருவுஞ்சனமும்
கண்குளிர்ந்துநல்ல கலிதீர்த்தோமென்றுசொல்லி
தெளிவாகமன்னன் தெளிந்துறங்கும்வேளையிலே
வழிவளருநாகமா முனிவனுடையபுத்திரனும்
பண்ணுதமிழ்க்கீர்த்திபெற்ற பாரரசன் தனுடனே
முன்னடந்தவர்களும் முறையுள்ளகாரணமும்
பிறந்துவளர்ந்ததும் பெண்கொண்டசெய்திகளும்
மறந்தாமைக்கூட்டில் மறைவாயிருந்ததும்
எல்லாம்எடுத்துரைத்து இயலரசன்வேந்தனுக்கு
வல்லாருமார்பன் மறுத்தேதுசெப்பலுற்றான்
அரசர்பெருமானே யெந்தன் அம்மானே உன்மகளார்தான்
ஒருவரறியாமலேயெனக்கு உச்சரித்தகூடுதன்னை
கள்ளத்தனமாய்கவர்ந்து கொண்டாளிப்போது
வள்ளல்குழலனைய மங்கையரேஇனிமேல்
பொருந்தாதுநானுமினி பூதலத்தில்எந்தனக்கு
மந்தாருஞ்சோலை மலைக்கிடங்கில்போறேனென்
என்றமொழிகேட்டு இயலரசனிப்போது
நன்றுநன்றுநம்மோடு நல்லமொழிசொன்னதெல்லாம்
வல்லறமாய்ப்பெரு மாநிலத்திலுள்ளவர்கள்
இல்லறத்தில்நல்லறந்தா னெங்குமுண்டுகண்டீரோ
யெத்திசையும்போற்றிசெய்யும் ஏகபெருமாளவரும்
சத்தியில்லாமலிறைவர் தனியாயிருப்பதுண்டோ
உண்டோஉலகில் உருவெடுத்தசன்மமதில்
கண்டுஅறியீரோகாண் காட்சியிப்போது
கண்மூக்குவாய்மூலங்காது கரமும்முகமும்
பெண்ஆண்இரண்டும் பிறப்பித்தாரீஸ்வரனார்
திடம்அறியாமல்நீ[illegible]தான் [illegible]வேண்டாமென்றீரே
அரிச்சந்திரனுடனே ஆன சந்திரமதியும்
பாரிலிருந்து[illegible] பேறுபெற்றவர்கள்
தாரமில்லாமல் தவப்பேறுகிட்டாது
தேடினபொன்னும் திரவியமும்நான் [illegible]வேன்
நாடுமெந்தன்ராச்சியமும் நடுநாயகமாமசெங்கோலும்
தருவேன் உமக்கு இந்த காரணியோர்நான்மகிழ
செ[illegible] திருவாய்நீர்வாழ்ந்து சேர்ந்திருமென்றுசொல்லி
திருவிடமாய்வேண்டியதோர் தேவரங்கள்புத்திசொல்லி
ஒருவிடமும்போகாமல் ஊரிலிருமென்றுசொல்லி
மருமகனார்சிந்தைமெய்க்க மாப[illegible]ர்செப்பியபின
திருமனதுமெய்த்துவெகு சிந்தை குளிர்ந்துமகிழ்ந்து
பய்யாநகைபுரிந்து பாரரசனைநோக்கி
வையகம்[illegible]ம்மருமகனார் மகிழ்ந்துகானே துசொல்வார்
ஏதுசெய்யப்போறோமிக[illegible]போல் திருவருளே
மாதருடன்கூடி வாழுகிறோமென்றுசொல்லி



[illegible]ம்தொலையநல்ல காசினியோர்தானறிய
அம்மானவர்க்கு ஆணையிட்டுத்தான்கொடுத்தார்
ஆணையிட்டுமன்னன் அரசர்க்குவார்த்தைசொல்லி
காணயமதாகநடந்து வரும்நாளையிலே
சந்தோசமாகஅந்த சம்பந்தராசனவன்
அந்தநகர்தன்னில் அனைபேருந்தன்மகளை
வார்த்தைபிழையாக வகையாகச்சொன்னதினால்
வேற்றுமையில்லாமல்மன்னன் மெய்கொடுக்கவேணுமென்று
வல்லபுகழ்உலகில் மண்டலத்திலுள்ளவர்கள்
எல்லாரையும்வருத்தி யித்தலத்திலிப்போது
பெருமையுடனேஉலகில் வேற்றரசரெல்லோரும்
அருமைமகள்கற்பை அறியவேவேணுமென்று
இன்புற்றுலகில் இருந்தரசு ஆளுகின்ற
ஐம்பத்தாறுதேசத்தரச ரெல்லாரையும்வருத்தி
பொன்னின்முடி மன்னவர்க்கும்பூதலத்திலுள்ளவர்க்கும்
மண்ணுமலைப்பேயனென்று வாழுமலைமன்னனுக்கு
சோழவளநாட்டிலுள்ள துய்யதுரைமக்களுக்கு
ஈழம்மலையாளம்நல்ல ஏற்றகண்டியாழ்ப்பாணம்
வாழுலகிலுள்ளமானுடர் பலபேர்களுக்கும்
ஆளோலைசீட்டுஅனுப்பிவிட வேண்டுமென்று
சம்பந்தராசனவன் தலத்திலுள்ளபேர்களையும்
உம்மந்திரமாகஉகந்திருந்த பேர்களையும்
அமைச்சர்துரைமக்களையும் ஆனபடைவீரரையும்
மகிழ்ச்சியுடனே அழைத்து வாழுமுடிமன்னவரும்
சூழவளைந்துநின்று துங்கமுடி மன்னவனும்
வாழுலகிலுள்ளபல மன்னவர்கள்தங்களுக்கும்
சீட்டோலைவாசகத்தை நிர்ணயமாய்முடித்து
ஒற்றருடகையதிலேஓலை திருவாசகத்தையும்
கொடுத்தனுப்பிவிட்டவர்கள் கூடியிருந்தெல்லோரும்
அடுத்திருந்தமன்னர் அனைபேருந்தானறிய
அங்கங்கேஉள்ள அரசர்பலபேர்களுக்கும்
எங்கெங்கும்ஓலையெழுதி விட்டாரம்மானை
ஓலைதானெழுதிமன்னன் ஒற்றனை அனுப்பிவிட்டு
சலனமாடகூடச் சிகரங்கள்சிறப்புசெய்து
பாலெனமொழியாளோடே பரிமளமாகமன்னன்
மாலெனஅயன்செயலாய் மன்னவனும்தானிருந்தான்
இருந்தானரசன் இயல்பெரியசீமையிலே
திருந்துமன்னனிட்ட செப்பரியதூதர்களை
அங்கங்குமுள்ள அரசர்பலபேர்களுக்கும்
எங்கெங்கும்சென்று எழுதியசீட்டுகொடுத்து
மலையிலரசனுக்கும் மற்றுமுள்ளபேர்களுக்கும்

உலகிலுள்ளபேர்களுக்கும் ஓலையுஞ்சீட்டுக்கொடுத்து
மின்னுமுடிராசனுட மிக்கதிருமுன்பதிலே
தன்னிகரொருவர் சம்பந்த ராசனுட
தெளிந்துபணிந்து திருநிருபம்தான்கொடுத்தான்
எழுதிவிட்டசீட்டை மியலரசன்தான்கேட்டு
வாசகத்தைப்பார்த்து மருமகனெழுத்தை
ஆசையுடநிரு த்தை அகமகிழ்ந்து கண்ணில்ஒற்றி
இறந்தஉயிர்வருத்தி யென்மகளைமணக்கவர்தான்
மறந்தார்காண்நம்மை யென்தன்மருமகனென்றிருந்தேன்
மரணக்கடலில் மச்சான தீவதிலே
போனகப்பல்வந்ததென்று பொன்னுமுடி ராசாவும்
தானுமகிழ்ந்தவர்கள் தயவானதேவியரும்
தேருகர்தசொல்லுடைய செல்லுமகளானதொரு
நாகமணிமாலையுட நல்லவளானதவும்
மோகமதாய்கேட்டவர்கள் முடுகிவந்தஒற்றனுக்கு
பாலுடனேசோறு பழுக்கடக்கையும்
சாலவிருந்தளித்து சந்தோசமாய்அவர்கள்
வன்னபணியுடனே வரிசைபலதுங்கொடுத்து
பொன்னுமுடிமன்னவனும் போகவிட்டாரொற்றனையும்
ஒற்றர்பலஊர்களிலும் உரித்தாகபோனவர்கள்
காட்டமாகவோலை நாட்டிலிலுள்ளபேர்களுக்கும்
சீட்டும்ஓலையுஞ் சென்றுகொடுத்தவர்
ஓட்டமாய்தங்கள் ஊரினில்வந்தனர்
வந்தவர்களோடே வளமதாய்செய்தியனுப்பி
விந்தையாய்தொழுதுப் போற்றி மேலவன்மனதுபெற்ற
கொந்தளபுயத்தால்நல்ல கோப்புகள்பலதுண்டாக்கி
கந்தமாநகரில்நல்ல காவணமிட்டான்மன்னன்
மன்னன்பெருமான் மகிழ் திருக்காவணங்கள்
பட்டணத்திலுள்ளபல ஜனங்களும்மகிழ
எட்டுத்தெருவும் இசமாய்அலங்கரித்து
தாராளமானநல்ல சம்பந்தராசமன்னவன்
சீராளமன்னன் சிறந்திருந்தாரம்மானை

## வேறு

இருந்தனன் அரசன்தானு மியல்புகழமைச்சரோடே
திருந்தியபரிகள்சேனைகள் புடைசூழ
பெருந்தவமுடையவேந்தன் பேதமில்லாவீரர்
அருந்தவமுடையவேந்தன் அலங்கரித்திருந்தனரே
அப்படியேமன்னவனும் அங்கிருக்குநாளதிலே
மெய்யுடையராஜர்கள் மேதினியிலுள்ளவர்கள்
எங்கெங்குமன்னன் எழுதிவிட்டசீட்டதினால்



…க்குமுள்ள அரசர்பலபேர்களும்
…யான முடிசூடி சிறந்துலகிலேயிருக்கும்
…பத்தாறுதேசத்துராசருக்கும் சேனைக்கும்
…ரானராமருட வெள்ளச்சேனையதுபோல்
வாராரோநல்ல மன்னர்பலபேர்களும்
எல்லோருந்தங்கள் இயல்புபெருமானமதாய்
வல்லாயுதமும்நல்ல வாள் பரிசைக்கேடயமும்
வாளும்பரிசைவலுத் தடியீட்டிகளும்
ஆரும்படையும் அழகுமணிதண்டிகையும்
பல்லக்குமீதில் பருமானமாய்வாரவரை
சொல்லத்தொலையாது துரைமக்களானவரும்
ஆனைபரிகள் அடல்பரிகள் காலாளும்
சேனைபடைகள் திசைதிசையாயிருந்து
சந்தோஷமாகநல்ல சம்பந்தமாநகரில்
வந்தார்களெல்லோரும் வாழுமுடிமன்னவர்கள்
நாகமணிமாலையுடை நல்லதந்தைகாயாரும்
வாகுபெறும்பொன்னுமுடி மன்னவரும்வந்தனராம்
சச்சந்தமாலையுட தந்தையரும்தாயாரும்
அச்சந்தனகிரி அரசன்வந்தான் அந்நேரம்
உல்லாசமாக உகந்தரசன்முன்பதிலே
எல்லோரும்வந்தார் இயல்புடனேயம்மானை
வந்துவேந்தர்கள் மன்னர்தன்முன்பிலே
சந்தமாமதிவிந்தைபோல தங்கமுடிமன்னவர்
கொத்துகொத்தாய்வந்தவர்கள் கோடிகோடிகள்கூடியே
தந்துலாவியமன்னன்முன் தேடிவந்தவர்கூடியே
கூடியேஒருங்கு கூடியேசங்கீதமதாய்
நாடிஅரசனிடம் நன்றாகவந்தபின்பு
வந்தபலபேர்களுக்கும் மன்னனுடையமந்திரிமார்
சிந்தையுடனே விருந்து செய்தார்சந்தோஷமதாய்
வரிசையுடன்வந்த வாழ்துரைமக்களுக்கு
அரிசிகறிகாய்ப்பருப்பும் ஆடுகிடாயால்தயிரும்
சிறந்தவிருந்து செப்பமுடனெல்லோரும்
பொருந்தவென்றுபோல்முன் போசனங்கள்கொடுத்து
…ந்தையுடனே அடக்காய் வெள்ளிலைகளும்கொடுக்க
…னந்தாம்பூலம தான்கொடுத்தெல்லோரும்
…படியேநன்று அவர்களனைபேர்களுந்தான்
அப்படிசந்தோஷமுற்று அங்கிருக்கும்வேளையிலே
பாரமுடிமன்னர் பலபேருந்தானறிய
சாரமுடன்ஓர்வார்த்தை சம்பந்தராசனவர்
மாயவுருஆமையதாய் வந்தபுகழ்மன்னனுக்கு
பாசம்உருகியந்த பைங்கிளியாள்தன்மகனை

பொன்னின்வரிச்சாவலையும் பிழைசாவுசங்கிலியும்
சொன்னபடியேஅவர்தான் சொல்படிக்குவந்ததினால்
உற்பனமாயென் மகளை உடன் தருவேன்என் றதினால்
மறுவாக்குசொல்லாமல் மாலையிட்டசேதிகளும்
கண்ணிலிவர்சுரூபங் காணாதிருக்கையிலும்
எண்ணெழும்போது இவர் சுரூபம்கண்டதுவும்
கூராமைகூட்டைவிட்டு கூத்துவந்துபார்த்ததுவும்
மானுடுத்து மறைத்தொளித்தவாதுகளும்
வளமாயிவர் தன் வளமையறியாதவர்கள்
கனமாயிவளுக்குவந்த கள்ளமணவாளனென்று
உலகம்நகைத்ததுவும் ஒச்சியங்களானதுவும்
கலகவிழியாளுடைய கலிதீருங்காலமதில்
ஒளியாமைகூட்டைவிட்டு உடனுருவியேயிவரும்
வெளியாடிவந்ததுவும் வேசமதைகண்டதுவும்
எல்லாவளமும் இயல்பெரியமன்னவர்க்கு
வல்லபுகழ்மன்னன் வகைவகையாய்உரைத்து
இன்பங்குளிர்ந்தவர்கள் எல்லோருந்தானறிய
ஐம்பத்தாறுதேசத் தரசருக்குந்தான் விளம்பி
சிங்கமுடிமன்னவர்கள் சிறப்பாய்சிறந்திருக்க
சாஷ்டாங்கமாய்த்தொழுது மகளா டுத்துவந்த
வாழாமைகூடுதன்னை புகழாகவேவாங்கி
பூகலத்தோர்முன்பு புரியவைத்தாரம்மானை
வைத்தான் அரசனுந்தா னுலகிலுள்ளோர்தான்மகிழ
கைத்தாவென்மருமகனுக்கு கைலைஅ னார்கொடுத்தார்
வற்றாக்கடல்போல் பாக்கியமும்கொடுத்தார்ஈஸ்பரனார்
வாழ்வுங்கதியும் வரமும்பேறும்பெற்றுலகில்
பெரியோர்கள்மகிழ்ந்து புகழ்ந்தனர்காணம்மானை
கண்டுமனமகிழ்ந்து காசினியிலுள்ளவர்கள்
கன்றுநன்றுஇப்புதுமை நாம்கண்டதில்லையென்று
தர்க்கமுடனே அவர்கள் தானிருக்கும்சங்கமதில்
நாகமுனிவன்புதல்வன் நன்றாகஅந்நேரம்
ஆழிக்குமேலாக ஆதித்தன்வந்தாப்போல்
மாளிகைதன்னைவிட்டுவந்த கதிரவன்போல்
கதிரவன்ஒளியதுபோல் காவலர்கள் தங்கள்
சதிராகவே இருக்கும் சங்கம்வந்தனர்காண்
வந்தமன்னர்ஒப்பினையும் வாக்குவடிவுந்திறமும்
தந்தார்வையத்து தென்னவாவென்பாரும்
ஆரென்றவனை அளவறியமாட்டாமல்
சேரவேவெகுண்டு திரண்டிருக்கும்வேளையிலே
சங்கமிளகாமலவர் தங்களையும்கையமர்த்தி



பயிலிருந்தவெகு சங்கத்தாரைத்தொழுது
ருவாகாஈஸ்பரனார் வெகுமானமாய்க்கொடுத்த
மையின் கூட்டில் அவதானமாய்ப்புகுந்து
ழ்மையுடனேயூர்ந்து தானடந்துவட்டமிட்டு
துவெளியில்நின்று மகாதேவனைத்தொழுது
வித்தகனைப்போற்றி விமலனருளைத்தொழுது
பத்துத்திருப்பாட்டு படித்தான்காணம்மானை
படித்தனன் திருவாசகம் தூதானபரமேஸ்வரர்
மடந்தாள்முகந்தானதுபோல் மனந்தான்மிகஉருகி
கடுத்தாளிலையோ நமக்களித்தவாண்மைதனை
கொடுத்தேதபறிப்பாருண்டோ கோவேகோவெனத்தொழு
தொழுதுதுயராற்றுப்பதற்கு சோதிமனதிரங்கி [தான்
அருள்ஆனைமிகப்பணிந்து அன்புமலரைத்தூவி
முழுதுங்கைலைக்கிறையவனை மூலமுதலேயெனப்பணிந்து
எழுதுதமிழ்க்கடங்கானே இறைவாவெனையருள்வாய்
தாகம்பெரியஉமைபாகா சகலகலைக்கும்பெரியவனே
மோகப்பொருளேமுழுமணியே மூபுரத்தையெரித்தவனே
தேவர்க்கரியதெள்ளமுதே தெளிவிலாஒளியாகின்றவனே
ஆவந்தெளியஅடியேனை அலையாவண்ணம்அருள்வாயே
முன்னே அடியேன் செய்தபிழை மோசங்களானதெல்லாம்
பொன்னேஉனதுமனமிரங்கி பொறுத்தேமனதிரங்கி
மின்னேசுடரேமெய்ப்பொருளே மெலிந்தடியேன்வாடாமல்
உன் திருபாதத்தில்என்னை இறைவாசேர்த்துக்கொள்வாயே
வில்லாலடித்தவிசயனுக்கு விரும்பிப ரனை
கல்லாலெறிந்தபக்தனுக்கு கதியைக்கொடுத்தீர் ஆண்டவனே
எல்லாஉயிர்க்கும்உயிராகி ஏழைக்கிரங்கும்பெருமாளே
பொல்லா அடியேன் ஆமையாய் பிறந்ததுயர்தீர்ப்பாயே
டுகச்சடைக்குள் பிகவணிந்து கையில்மான்தரித்தவனே
கொடுகி அடியேன் ஆமையுட கூட்டிலிருந்தளந்தனைநான்
டுகிவிருந்துஎவ்வுயிர்க்கும் நன்மை அருளும்புண்ணியனே
முடுகி அடியேன் கலகநல் சகதிதந்தருள்வீர்
காலன்தனையும்ப லனுக்காய் காலாலுதைத்தகண்ணுதலே
மெனச்சொல்லானை முதலை பிடிக்கவிடுத்தோனே
மாஇமயனுந்தனைத்தேட மறைந்துள்மறைவாய்நின்றவனே
பலாய்மோட்சம்அடியார்க்கு சிவனேதந்தருளவீரே
பட்சிபுஷித்தவேடனை பரனேநீர் த்த
இச்சையுடனேயிவன்தனக்கு இரங்கி ர்கொடுத்தீர்
கொச்சையடியேன்மலரில கொடியேன்செ பிழைபொறு
பச்சைவடிவாளுமைபாகா பரகதிதந்தருள்வாயே [த்து

பாணன்தனக்குபலகையிட்டு பெற்கிளியளித்திர்
வாணன்தனக்குஉலகளித்தீர் மண்ணுஞ்சுமந்தீர்
காலைக்குவெட்டிகன்னமிட்ட கள்ளன்தனக்குகதிகொடுத்தீர்
ஏழையடியேனுன் மெலியாவண்ணம் அருள்வாயே
கந்தமலர்சூழ்குழலுமையாள் கடுகசடைகளுள்ளே
வந்துஒளித்துமந்திரத்தை வளமாய்க்கேட்டுமுறையாக
மூந்தகடலில்மகரமதாய் முன்னே அருளியீடளித்தீர்
அந்தபடிப்போலடியேனை அலையாவண்ணம் அருள்வீரே
தாழ்மையாய்ஆமையரும் சங்கத்தார்தனை நோக்கி
பாவமேநீங்கிநல்ல பார்வதிதன்னைப்போற்றி
தீமையில்லாததேவி திருசெவிதன்னில்கேட்டு
வாண்மையாய்கயிலைமேவும் வள்ளலைவணக்கம்செய்தான்
அரகராபோற்றிபோற்றி ஆனந்தகாயேபோற்றி
பார்வதித்தாயேபோற்றி பம்பொருள்தாயே
திருஉளத்தாயேயுந்தன் திருப்பாதம்போற்றிபோற்றி
தேவியைவணக்கம்செய்து இவனுக்குஉடை கள்செப்ப
ஓமினிஅஞ்சவேண்டாம் உனககதாய்பொருத்தேகாமென்ன
ஆமையார்தனக்குமோட்சம் அருள்புரிந்தவர்க்குமீண்டும்
தேவரைவரவழைத்து சிவனருளகொடுக்கலுற்றார்
தாகமாய்கைலைமேவுஞ் சங்கரனும்நல்ல
தேவர்கள்முனிவர்தன்னை சிவனார்வரவழைத்துசொல்வார்
பாவமேநீங்குங்காலம் பார்வதிகனைத்தொழுக
ஆமைபுராதனந்தன்னை அழைத்துவாருமென்றார்
ஆன்திருவாசகத்தை அன்பதாய்கேட்டவர்கள்
நிரந்தரச்செல்வம்பொங்கி நிமலனருளினாலே
புரந்தரன்பவிசுபோலே பூதலத்திலுள்ளாரெல்லாம்
பாங்காயாற்கடல்போல் பொங்கிபவிசதாய்வாழ்ந்தார்காண்
பால்கடலில் பள்ளிகொண்டார் பசுமபொன்திருமேனியர்
தீர்க்கமுடனே ஆமையரை சேரவகுத்தவனே
ஆக்கமுடனேதிருவாசகம் ஆனபாய்கேட் பார்படிப்போர்கள்
மார்க்கண்டனைப்போல் திகழுவயாயிருப்பார்மாநிலத்தில்
அண்டர்பிரான்தன்பேரில் அழகானவாசகங்கள்
அன்றொருபாவம்செய்தாலும் அறத்தேகவிடுவர்பரஞ்சுடரும்
ஆண்டவனேகூடஅடியேனை அருள்வாய்அருள்வாயே
அச்சுதா ஆரூர்தொந்தி ஐங்கரனார்மைந்தா
கோவிந்தாசுந்தராஎன்னை குற்றம்பொறுத்தருளுமையா
பாவத்தைச்சொன்னேனையா கந்தனேயென்னையாளும்
நமசிவாயநாடிமுந்து வந்தவரைக்கூட்டிக்கொண்டீர்
நல்லபுத்திமதிகளையும் வருத்திகூட்டிடுவீர்தன்னிடத்தில்
சேர்த்துக்கொண்டீர்கொற்றவனே உன்னுடையபங்கம்தன்
பாதந்தன்னில் ஆடுகிடபறவைபடசிக்கன்னடக்கநீர் [ணில்
அப்படிப்போலவே அடியேனைகாத்துக்கொண்டீர்



[illegible]டனேபுவியாள்நம்பி நல்லபுத்தியெனக்கருள்வாய்
பா[illegible]படாசடலமிதன்னை பற்றினேனடியேன் முகம்பார்
காட்டிலேவேடனையுங் காத்தருபாகண்ணுதலே
கண்ணுதலேகண்மணியே கணபதியேகணவானே
சிவசிவாபோற்றி சிவசங்கரர்போற்றி
அருள்மறைமுனிவோரெங்கள் அம்பலத்தாடிபோற்றி
மருமலர்க்குழலேபோற்றி மாயசுபத்தினியேபோற்றி
திருமலர்காக்கும்செல்வி திருப்பாதம்போற்றிபோற்றி
திருவாசமும்என்றுஞ் சிவபதத்தில்சேற
உரித்தாகஎன்பேரில் உருகிஅவனன்புவைத்து
அத்தன் துணைபோற்றி அனபுருகியே அவனும்
பத்துத்திருப்பாட்டுபடிப்பது கேட்டீர்பதியாய்
ஆதிபானிடத்தில்வாழும் ஆனந்தஈஸ்பரியாள்
சோதிபரமேஸ்வரரை தொழுதுபரமேஸ்வரியாள்
இன்னும்கேட்கறியாள் விமலன்திருப்பாதமதை
யெண்ணும்கயிலைக் கிறைவாஎன்நாயகமே
கன்னமுதேயென்னுங் கலங்காதகாரணரே
மன்னுலகில்முன்னேஒரு மார்க்கண்டனைவனும்
கண்ணிநம்மைத்தேடியவன் நல்லதவம்செய்தெல்லாம்
கூத்தனுக்காற்றமல் கொடிக்குமிகவேசடைத்து
மாத்தானுடைய மனோருபந்தான் அறிந்து
தன்னுயிருக்கஞ்சியவன் சாற்றிமலர்கைகுவித்து
என்னுயிர்க்கோமானே உமககதந்ததவம்செய்ததுவும்
வாகாவென்பங்கில்வளர் வள்ளலேபுண்ணியனே
காகமுனிமைந்தனுக்கு நாலுலகில்வாழுதற்கு
எல்லாம்பகுத்துயிலிலங்கு பிரகாசமதும்
எல்லாங்கொடுத்தீர் அவனைபுவியிலேவாழக்
கொடுத்தீர்அவனிடத்தில் கூற்றுவன் தான்சொல்லாமல்
மூடுத்தனமாய்நீர்கொடுத்த முனபாக்கியந்தனையும்
மண்கொண்டபூவுலகில மனிடர்தங்களைப்போல
பெண்கொண்டதல்லாது பிரியமுடன்வாழலையே
முன்மலரில்நாமள் முகந்துபிழைசெய்தோமென
தன்மனதில்எண்ணி சடைத்துமிகவேவாடி
மண்ணுலகிலாசைமறந்து பெண்களைவெறுத்து
கருத்தாகவேறொரு கந்த திருவாசகமும்
அருந்தவமேயிப்படிபோல் ஆராதனையுங்கண்டதில்லை
பொங்குகடல்சூழுலகில் பொல்லாதபேர்களுக்கு
எங்கில்லாவாழ்வு மியல்பாகநீர்கொடுத்தீர்
தான்கைவகைபாராள் தவப்பேறுதேடறியாள்
நான்குவகையாகநம்மை நாடுவணங்கிநிற்பார்
கருத்தாயிருந்துமையான் கர்த்தாவேயென்றுசொல்லி

வாடுவானேவாழ வயிறு கனக்காற்றாமல்
கெடுங்கைகொண்டுஉலகி னிடத்திலேதிரிவான்
பகுமானம்வந்தால் பகுந்துநம்மைதேடறியான்
கோவிந்தாவென்பதுவும் குருக்கள்தனைதேடுவதும்
சிந்தைபொருள்வந்து சேர்ந்தபொருள்போலவும்
அப்படிப்போல்காலம் ஆடிபணியவில்லை
மெய்யுடநீர்முன்கொடுத்த வெகுமானபாக்கியமும்
மண்ணுலகிலேஇருந்து வாழ்மனம்வையாமல்
விண்ணுலகிலிங்கேவர வேணுமெனவிரும்பி
தன்மந்தவளுததாரணியி லாசையென்ன
இன்பமுற்று இங்குவர எப்போதும்தானுருகி
உருகித்திருவாசகங்கள் ஓதுகிறான் தானநினைவாய்
அருகில்வருத்துமென்று அய்யாவேவென்றுமையாள்
கன்மவினைதவிர்க்கும் கர்த்தாவேஎனப்பணிந்து
அம்மைஉமையாள் அடிபணிந்தாரம்மானை

## மறுமாலை சூட்டல்

தொழுதிடும்உமையாள்தன்னை சொற்பலநேராமல்
பழுதறமகிழ்ந்துநல்ல பார்வதிக்கேதுசொல்வார்
களிதரும்குழலினாளே நாகமுனிவன்மைந்தன்
களிபுகுந்தவர்கள்வாழ கடனது இருக்குதென்றார்
பெண்ணேகேளொருவசனம் பெண்களினாலேகேடாம்
கண்ணதனில் படும்பக்ஷிபோல் கட்டாக கடக்கவிடாது
மண்ணுலகில்அவருடன் கூடியேவாழ்ந்துபெண்கள்
மனத்துடர்தீர்ந்தாக்கால் விண்ணுலகிலவர்
பதத்தில்சேர்ப்பாரென்று பொன்னுரைசெப்பினார்
செப்பியேஅரனார் திருஉமையாளுக்கேதுசொல்வாள்
பார்ப்பார்பெருமூச்சும் பத்தினிமார்கண்ணெரிப்பும்
தீக்காணும்பத்தினிகள் செந்தமிழோர்சொல்லெரிப்பும்
எல்லாத்திலும்பெரிது யெந்திழையாள்கற்புநிலை
மாதருடன்சஞ்சரித்து மனக்கறையைத்தானறுத்து
போதரவாய்அந்தநல்ல பூவையர்கள்நால்பேர்க்கும்
ஆதரவுசொல்லி அவர்களுடன்சஞ்சரித்து
தேசத்தில்வாழ்வு சிறப்பாகவேநடத்தி
பாசத்துடனவர்கள் பாக்கியங்களும்கொடுத்து
எத்திசையும்மெய்க்கநல்ல எந்திழைநால்பேரும்
பெற்றுப்பெருகிநன்மை பெருகவே பொருள்கொடுத்து
மறுத்துவரிசையுடன் வரவழைக்குமட்டும்
பொறுத்திருநீபெண்ணேவெகு புண்ணியங்களைநான்
கொடுப்பேன்



## வீடுப் பேறு

ட்டமுடன்சோழனந்த நாடாண்டகாவலனை
ட்டோடேசொர்க்கங் கொண்டுவந்தோம்கண்டாயோ
அப்படிபோலநாமிவனை ஆக்குவிப்போம்நம்மிடத்தில்
தப்பாதுஎன்று தயாபரனும்ஆணையிட்டு
மார்க்கண்டனைபோலிவனை வைப்பதற்குநம்மிடத்தில்
ஆட்கொண்டோமென்று ஆணையிட்டார்பார்வதிக்கு
இல்லறத்திலேயிருந்துஎன்பதத்தில் சேர்வதுபோல்
நல்லறமுண்டோவேறே நாயகியேஎன்றுசொல்லி
நேசமதாயீஸ்வரியும் நீயறியவேண்டுமென்று
பாசமதாய்நல்லதிருப் பாட்டுரைத்தார்பக்தனுக்கு
சங்கத்தார்காண அவன் தானிருந்தகூட்டத்திற்கு
மங்காதஈஸ்பரனார் வரப்பேறுதான்கொடுக்க
பரிந்ததுரைமக்கள்நல்ல பாரரசர்தான்காண
சொரிந்ததுகாண்பூமலர்கள் சொர்க்கத்திலிருந்தே
அண்டர்புவனத்திலுள்ள அரன்விடுத்தவானவர்கள்
தொண்டர்திருசங்குதொனி முழக்கம்முழங்க
ஆமைக்கூடாயிருந்த அரியஓடதுதான்
பூக்கூட்டையாகநல்ல புஷ்பமலராய்ச்சொரிய
இருந்ததுகாண் ஆமைக்கூடெல்லோருந்தானறிந்தார்
அருந்தவத்தோர்போற்ற அரனார்கைலைநோக்கி
எல்லோரும்கண்டு அரகராவென்றுரைக்க
நல்லாமைக்கூடதுவும் நட்சேத்திரபாதத்தில்
இந்திரமாஞ்சாலமதாய் ஏகியேஅந்தரத்தில்
மந்திரனார்தன்பதத்தில் மலராகசேர்ந்ததுவே
சேர்ந்ததுவேதிருக்கூட்டத்தில் திருஉமையாளுங்காண
போந்தனர்பாவதோஷம் பூவில்முன்செய்ததெல்லாம்
சாந்தினிஉமையாள்தானுஞ் சங்கரனாரைப்போற்ற
வாழ்ந்துவரநல்ல மலரடிவீடுசேர்ந்தான்
திருக்கூட்டத்தினர்எல்லாம் சேர்ந்துகதிபெற்றபின்பு
ஒருப்பாடதாக உகந்திருந்தபேர்களெல்லாம்
ங்கந்தனிலுள்ள சகலபேர்களுமறிய
ங்கையுடகற்பு வழுவவில்லையென்றுசொல்லி
சம்பந்தராசன் தனைநோக்கியெல்லோரும்
உம்மந்திரமாக உரைத்தனர்காணம்மானை
மன்னவனே உந்தன் மகளார்க்குஇப்போது
சன்னம்வருமுன்னவனுக்கு சடுதியில்மாங்கலியம்
உருவானமாங்கலியம் உற்பனமாயிருக்க
மறுமாலையுன்மகளுக்கு மன்னவனேசூட்டுமென்றார்
சங்கத்தார்சொல்லஅந்த சம்பந்தராசாவும்

பொங்கமதாய்தானிந்தப் போதிருந்தவட்கு
காவணங்களிட்டு கதலிக்குலைநிறுத்தி
பூமணங்களாகவெகு பொற்சரிகையும் தூக்கி
பட்டுவிதானங்கள் பலவிதமாய்த்தான் செரித்து
கொட்டுவெடிமுரசு கொம்புகளுந்தான் முழங்க
தன் மகளாமந்த சம்பந்தமாலையுட
பொன்னழகுபோல்ஒத்த பூரணவல்லியையும்
வாகுபெறுமின்னுக்கொடி மகாராசன்பெற்றெடுத்த
நாகமணிமாலையென்ற நன்னுதலாள் தாந்தனையும்
உச்சந்தமான உயர்மலையில பேயன்மகள்
சுக்கரிமாலையுடன் சொன்னமதிநால்வரையும்
அலங்கரித்துநல்லபணி ஆபரணங்களிலங்க
துலங்குமணிபட்டுடுத்து கோதையர்கள்சூழ்ந்து
இன்பங்களிருந்தவர்க ளெல்லோரும் ஒன்றதுபோல்
ஒருமுகமதாகவந்து உறவின்முறையாரிருக்க
திருவான பெண்கள்தனைத் தேர்கின்றமாப்பிளைதான்
நாகமுனிவன் மைந்தனையும் நன்றாய்அலங்கரித்து
வாகுபணிநல்ல மணிக்காவணத்தினுள்ளே
பலகையின்மேல்வைத்து பலசடங்குதான் முடித்து
உலகறியமங்கையர்க்கு உற்றமன்னன் கையதினால்
மறுமாலைசூட்டி மணம்புணர்ந்தாரம்மானை
செயவசனங்களெல்லாம் சந்தோசமாயணிந்தார்
மாலையதுசூட்டி மணம்புணர்ந்தாரம்மானை
ஆலயமதாகஅந்த அந்நகரிலமனைமெல்லாம்
எல்லோரும்கூடிஅந்த ஆமைமகாராஜருக்கு
நல்லபூவாசநாதனென்ற பேர்கொடுத்து
வந்தசங்கத்தார்கள் மகிழ்ந்துவிருந்துண்டெழுந்து
சிந்தையுடன் தங்கள் சீமைதனில்போனார்கள்
எல்லோரும்தங்கள் மனையேறிபோனபின்பு
நல்லபூவரச நாதனென்னும் பேர்கொடுத்து
மாலையிட்டபெண்கள் மனக்கவிகள் தீர்ந்தபின்பு
சேரமருவிச்சிறந்து விளையாடியபின்பு
காமனும்ரதியும்போல் கலவிசெய்தபெண்களுடன்
தாமுமனமகிழ்ந்து சகலவஸ்துமுண்டாகி
கங்காளநாதர் கருத்தினாலேயிவர்க்கு
பெண்கள்நாலுபேருக்கும் புத்திரருண்டாகி
மண்டலத்திலுண்டான வாழ்வுசிறந்தோங்கி
சீரானவாழ்வு சிறந்தோங்கியேவளர
சீர்சிறப்புசெய்துநல்ல செல்லசுகமுண்டாகி
நாதனருளாலேயிவர் நாளுமுலகிலேயிருந்து



வேதமுறைசாஸ்திரங்கள் மிகபடித்துஆராய்ந்து
மாதுமின்னார்தங்கள் மனக்கவிகள்தீர்ந்து
ஓதுமறையோர்க்கும் உகந்தமணவாளனுக்கும்
தர்மதானங்கள்செய்து சாதனங்களும்முடித்து
கோதானங்கள்நாலும் குறையாமல்முடித்து
வாசபூவரச நாகமுனிமைந்தருமே
ஈஸ்பரருக்குப்பூசை இலகுவாகவேமுடித்து
ஆசாரமாக அவனடிபோற்றிசெய்து
ஏய்ப்பார்பார்ப்பார் ஏந்திஉண்ணுமபேர்கள்
சிந்தைமகிழ்ந்து சிவன் திருமால்தனக்கும்
நந்தாவனமும்வைத்து நல்லமலர்சாத்தி
ஆயிரம்பார்ப்பார்க்கு அமுதுமிகக்கொடுத்து
வாயாரநல்ல மகாபூசைதானடத்தி
கோதாண்டமாகநல்ல குருபூசைகள்நடத்தி
மாதானமீந்து மகாதேவரைத்தொழுது
மாறுமல்செல்வம் வளமாகவேசிறக்க
ஆறுகுளம்புரவும் ஆங்காங்கேவகுத்து
கன்னியர்க்குநல்ல கலியாணமும்முடித்து
பொன்னின்முடிசூடி புவியில்அரசாண்டு
மீறிஉலகுதன்னில் வேதனைகள்செய்யாமல்
ஆறில்ஒருகூறு ஆசானமணிநிறுத்தி
சிவமென்றசொல்லுந் திருச்சங்குவாசகமும்
தவமென்றபுண்ணியமும் தத்துவமறையேத்துவதும்
நடக்கும்பூவரச நாதனுடசீமையிலே
அடக்கமாகஉலகை ஆண்டிருந்தாரப்படியே
இப்படியேவாழ்ந்து இவனிருக்கும்நாளையிலே
செங்கோல்வளர்ந்து திசைகளெல்லாந்தான்புகழ
மங்காதகீர்த்தி வளர்ந்துவருநாளையிலே
ஆகாசமூருவி அரனடியைப்போற்றிசெய்து
பூவரசநாதன் புரிசடையோன் தன்னருளால்
தேவுலகில்செம்பொன் திருக்கயிலாசந்தன்னில்
பூவுலகில்பூவரச நாதன் நடத்தும்நெறி
அறிந்துபரமேஸ்பரனும் ஆதிபரமேஸ்வரியும்
செரிந்தபுகழானவளர் தேவர்களும்வானவரும்
வல்லாண்மையுள்ள மகாதேவரிடத்தில்வாழும்
எல்லோரும்நன்றா யியல்புடனே அறிந்தபின்பு
ஆமையுருவாகநல்ல அம்புயில்வாழ்ந்தவனை
பாவம்தொலைந்ததென பரமேஸ்பரனோடு
திருமாலுடன்பிரமன் தேவர்களையும்அழைத்து

பெருமாளானகர்மம் பெருமையுடன் விளம்பி
தரும்புரமான சம்பந்தமாநகரில்
வரமேமிகுந்தநல்ல வாசபூனுகனுக்கு
கூறும்உலகமதில் குவலயத்திலேயிருந்து
நூறுமனைகந்தவர்க்கு நூற்றாண்டுசென்றபின்பு
பூமண்டலாதியென்ற பூவரசநாதனைத்தான்
கொண்டுவரவேண்டுமென்று கோலாகலத்துடனே
உண்டென்றபேர்களுக்கு உண்டாகுமென்றுசொல்லி
வானுலகில்தேவர் பலவாத்தியங்கள்முழங்க
என்றவர்கள்கோடியருள் ஏத்தும்நாதர்களும்
கிம்புருடர்கின்னரர்கள் கெருடகாந்தருவரும்
தம்புருகைவீணையுடன் தாளமேளமுழங்க
நற்பவிசானவரை நன்றாககொண்டுவர
புரப்பவரன்னதேரும் புவிபச்சைவாகனமும்
தெய்வரம்பையாரும்நல்ல செம்பவளபொற்றேரும்
மெய்ப்புகழத்தேவர்வெகு மானமாகவேதான்
அசையாமல்நிறுத்தி ஆண்டபஞ்சசோழனைப்போல்
தயவாகக்கொண்டுவந்த தன்மைகள்போலிவனை
கூட்டிவாஈஸ்பரனார் கொடுத்தவிடையதனால்
நாட்டிகமாய்த்தேவர் சிவசங்கரனைத்தொழுது
மாணுருஞ்சிவன் விடுத்த மானுலகில்வானவர்கள்
மாரூதயோகமுனி மருடனே வானவரும்
கருணைக்கருமுனியும் கலைக்கோட்டுமாமுனியும்
அருணகிரியார்பொன் னம்பலநாதருடன்
மூந்திரஞ்சேர்தெய்வ மங்கையர்கள் கவரிவீச
இந்திரலோகத்தைவிட்டு இலங்குபூலோகமதில்
சந்தோஷமாகவே சம்பந்தமாநகரில்
வந்தார்களந்த வானவர்களெல்லோரும்
அப்போதுபூவரச நாதமகாராசனவன்
மெய்ப்பாகஈஸ்பரனார்கம் மேவும்பதிபுகுந்து
சேவித்துக்கொண்டு சிவமாலையுமெடுத்து
பாவித்துநன்றாய் பதிபுகுந்தவேளையிலே
தன்னை அறியாமல் தவப்பேறுவந்ததென்ன
உன்னிமனதி லுடனறிந்தாரம்மானை
அறிவுமயங்காமல் ஆயுள்குன்றாமல்
பொரிபோலெடுத்தவனை புஷ்பவனத்தேர்மேலே
ஏத்திக்கொடுபோனா ரிமையவரே அம்மானை



[illegible]ற்றினார் அன்னசுதம் பொறுப்பிடத்தில்வாழ்க
[illegible]மதாயீஸ்பரனார் நல்லகயிலாசமதில்
கூட்டோட சொர்க்கலோகம் கொண்டுவந்தாரம்மானை
பொன்னுங்கைலையங்கிரி பொறுப்பாய்சிவன்பார்வதியும்
மன்னுதேவர்தொழுதேத்த முதலோனிருக்கும்வேளை
அன்னுபுகழ்சேர் ஆமை உருக்குலைந்துபலம்நீங்கி
பன்னுதமிழ்சேருமை பாதமகைகதிசேர்ந்தான்
சேர்ந்துசிவகதியில் தேவனெனப்பேறுபெற்று
பேர்ந்துகைலாசமதில் பொன்னுலகில்வாழ்ந்திருக்க
நாகமுனிவன்மைந்தனையும் நட்சேத்திரபதத்தில்
வாருபெறயீஸ்பரனார் வைத்தனர்காணம்மானை
எமமான் திருவருளால் எப்போதும்நன்றாக
வன்மவினைநீங்கிநல்ல காசினியோருந்தழைத்து
வையகந்தான் தழைத்து வளர்பயிர்களுண்டாகி
பொய்யாமல்மாரி பொழிந்தோங்கியேசெழித்து
பூவரசநாதன் புரிசடையோன்பொற்பதத்தில்
நாமாலைசாற்றி நமஸ்கரித்துத்தான்தொழுது
ஆமையுருபோயந்த அரனாரிடம்சேர்ந்தான்
வன்மையாயிந்த வடிவழகன்சேர்ந்தகதை
பாடினபேர்நன்றாய்ப் படிப்போர்கிளைவாழ்க
நாடிபடிப்போர்கள நன்மையுடனேவாழ்க
ஆலதுபோல்தழைத்து அறுகதுபோல்வேரூன்றி
மூங்கில்போல்அன்னகதிர் முசியாமல்வாழியவே
ஆமையார்அம்மானை ஆகியதேவாழ்கவென்று.

ஆமையார் அம்மானை முற்றிற்று.

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.

02165

## எங்களிடம் கிடைக்கும்
# வில்பாட்டு தினுசுகள்!

—●—

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | முத்தாரம்மன் கதை வில்பாட்டு | | 0 | 12 |
| 2. | சின்னத்தம்பி | ,, | 0 | 6 |
| 3. | இசக்கி கதை | ,, | 0 | 6 |
| 4. | காந்தி வில்பாட்டு | ,, | 0 | 5 |
| 5. | பார்வதியம்மன் | ,, | 0 | 5 |
| 6. | சுடலைமாடன் | ,, | 0 | 5 |
| 7. | சாஸ்தா கதை | ,, | 0 | 4 |
| 8. | தர்க்கராஜன் | ,, | 0 | 4 |
| 9. | முத்துபட்டன் | ,, | 0 | 4 |
| 10. | சங்கிலிப் பூதத்தார் | ,, | 0 | 4 |
| 11. | வல்லரக்கன் | ,, | 0 | 3 |

கிடைக்குமிடம் :—

**கலைமகள் கம்பெனி**

பிரபல புத்தக வியாபாரிகள்

174, ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.